சக்தி

மாத வெளியீடு

சாரத் திரள்

தலைவர் ஜவஹர்	...	கிருஷ்ணலால் ஸ்ரீதரானி	3
புரட்சி	...	துர்கனேவ்	6
சிகரெட் மிதவாதம்	...	ஊதல் நிபுணன்	8
எஸ்தர்	...	குமரப் பிரசாத்	10
சுதந்தரத் திட்டம்	...	பிரிட்டிஷ் தூதர்கள்	13
என் கருத்து	...	மகாத்மா காந்தி	18
அஞ்ச வேண்டாம்	...	மகான் அரவிந்தர்	21
வாழ வழி	...	ராஜாஜி	22
ஒப்பற்ற புரட்சி	...	வெ. சாமிநாத சர்மா	23
vaLara vENdumA?	...	vAZavandhAr	24
நாங்கள் தயார்	...	ஐவர்	25
பெரியார் விவகாரம்	...	மாரீசன்	26
வெளுக்கிற விஷயம்	...	நாரா	27
பிரார்த்தனை முறை	...	ஜே. சி. குமரப்பா	28
உங்கள் கதை	...	சொ. விருத்தாசலம்	29
காலம் மாறுகிறது	...	படங்கள்	37-44
குடையைப் பிடுங்கு!	...	மு. வரதராசன்	45
சாப்பிடத் தெரியுமா?	...	பி. சுந்தரமூர்த்தி	50
யோசித்தீர்களா?	...	பொ. திருகூடசுந்தரம்	52
சோதிடப் புரட்டு	...	வான சாஸ்திரி	53
முகபத் கான்	...	எம். அண்ணாமலை	59
பிரசவப் பொய்கள்	...	செவிலித்தாய்	60
புதிர்	...	வல்லிக்கண்ணன்	61
உள்ளும் புறமும்	...	சுரபி	65
எங்கள் யோசனை	...	பொ. தி.	67
'ஒட்டல்' மகிமை	...	கே. வி. வீரராகவன்	69
கொரியா	...	ஆர். ராமநாதன்	73
சரியான போதை	...	சப. நாராயணன்	76
பரீட்சை	...	போ. குருசாமி	79
புத்தக உலகம்	...	குரு	80

முதலியவை

அணா 8

விய வைகாசி

சக்தி

மலர்: 13
இதழ்: 2

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

எ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

மிஸ்டர் நளினிரஞ்சன் ஸர்க்கார், மாஜி அங்கத்தினர், வைஸ்ராய் எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில்: மாஜி திரவிய மந்திரி, வங்காளம்; ப்ரெஸிடென்ட், ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைட்டி லிமிடெட்.

"நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் பணத்தை வட்டிக்குப்போட்டுவைப்பதை முக்கியமாய் இரண்டு காரணங்களுக்காக நான் சிபாரிசு செய்கிறேன். முதலாவதாக, பொதுஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் தேசீய சேமிப்புகள் ஒரு முக்கிய பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இதை நோக்கமாகக் கொண்டு, பணம் சேர்த்து வைப்பதன் உபயோகத்தைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு இப்போதிருந்தே போதனை செய்து வரவேண்டும். அப்படிச் செய்தால்தான், சேர்த்துவைத்த அப் பணத்தை இன்னும் சுபிட்சமான ஓர் இந்தியாவைத் தோற்றுவிப்பதற்காகச் சரியான காலத்தில் உபயோகிக்கமுடியும். இரண்டாவதாக, நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் மிக ப்பத்திரமானவை என்பதோடுகூட, தற்போதைய நிலமைகளில் அவைகளிலிருந்து நல்ல வருமானமும் கிடைக்கிறது. அசல், வட்டி ஆகிய இவ்விரண்டுக்கும் கவர்ன்மென்டார் உத்திரவாதம் கொடுக்கிறார்கள். மேலும் அதிலிருந்து $4\frac{1}{2}$ சதவீதத் தனிவட்டியாக லாபம் கிடைக்கிறது. இந்த வட்டிக்கு இன்கம்-டாக்ஸ் கிடையாது."

Nalini Ranjan Sarker

உமது பணத்திலிருந்து 50 சதவீதம்

நேஷனல் ஸேவிங்ஸ்

பார்த்ததும் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000, அல்லது 5,000 ரூபாய்களுக்கு வாங்கலாம்.

2 எந்த ஒரு நபரும் 5,000ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இவை மிகச் சிறந்தவைகளான படியால், எல்லாருக்கும் கிடைக்கும்பொருட்டு ஒருவருக்கு அவைகளை இன்ன மதிப்புவரையில்தான் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டுபேர் கூட்டாக 10,000ரூபாய்க்கு வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகி விடுகிறது.

4. உரிய காலத்தில் இவைகளினால் கிடைக்கும் லாபம் $4\frac{1}{6}$ சதவீதம் தனிவட்டியாகும்.

5. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

6. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம்; ஆனால், நீர் இவைகளை கெடு **காலம் முழுவதும் வட்டிக்கு விட்டு வைத்திருந்தால்,** உமக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

7. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். சேர்க்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக்கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

8. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

லாபம் கிடைக்கும்படிச் செய்துகொள்ளவும்

ஸெர்டிபிகேட்டுகள் வாங்கவும்

AC-3-TM

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்

ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சிஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.

நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

விய
மலர் 13

சக்தி

வைகாசி
இதழ் 2

நம்பத்தான் வேண்டும்

"நீங்கள் அறியாத எத்தனையோ விஷயங்கள் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் உள்ளன" என்று ஏசுபெருமான் அன்று கூறிய பொன் மொழிகளின் நிரந்தர உண்மை, 16-5-46 ஆம் தேதி, இரண்டு மாத காலத்தின் இடையருத, சலியா உழைப்பின் பயனுக, பிரிட்டிஷ் மன்னர் சர்க்காரின் சார்பாக லார்டு பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், ஸ்ரீ ஏ. வி அலெக்சாண்டர் ஆகிய மூன்று பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதர்களின் கையெழுத்துடனும், இந்தியாவில் பிரிட்டிஷ் மன்னர்பிரானின் பிரதிநிதியாகிய லார்டு வேவல் பிரபுவின் கையெழுத்துடனும் புது டில்லியி லிருந்து ஓர் அறிக்கை வெளியிடப் பெற்ற போது, சென்ற ஒன்றரை நூற்றுண்டு காலத்துக்கு அதிகமாக, இரக்கமற்ற சுரண்டலுக்கும், கடுமையான அடக்குமுறை ஆட்சிக்கும் உட்பட்டு, வாடி வதங்கி, எண்ணற்ற வாக்குறுதிகளைக் கேட்டுக் கேட்டுச் சலித்து, நம்பிக்கை இழந்து, நெஞ்சு கொதித்துப் போயிருந்த கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு மீண்டும் ஞாபகத்துக்கு வந்தது.

ஏமாந்து ஏமாந்து அலுத்துப்போன நாம், இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்குவதாகக் கூறும் இந்த அறிக்கையைப் படித்த நம் கண்களை நம்ப முடியவில்லை. லார்டு லாரன்சும், வைசிராய் வேவலும், சேனுதிபதி சர் கிளாட் ஆக்கின்லெக்கும் ரேடியோவில் பேசிய உருக்கமான பேச்சுக்களைக் கேட்ட நம்முடைய காதுகளையும் நம்ப முடியவில்லை. நாம் கிஞ்சித்தும் எதிர்பாராத விஷயம் நடந்துவிட்டது. உலக அரசியல் சரித்திரத்திலேயே இது வரை காணுத மகத்தான ஓர் அற்புதம் நிகழ்ந்துவிட்டது. நாடெங்கும் ஒரே திக்பிரமை உண்டாயிற்று. இதுவும் ஒரு நயவஞ்சகமான சூழ்ச்சிதானே என்ற எண்ணம்தான் யாருக்கும் இயல்பாக எழும். மெய்ம்மறந்து போயிருந்த நாட்டு மக்களைக் காந்திஜிதான் வழக்கம்போல் தட்டி எழுப்பினர்: இந்தத் திட்டத்தில் பல குறைகள் இருந்தபோதிலும், இதனுல் நாம் நன்மை பெற முடியவே முடியும்; நாட்டின் இரு பெரும் கட்சிகளாகிய காங்கிரசும் லீக்கும் நல்லபடியாய் ஒரு முடிவுக்கு வராத நிலையில், பிரிட்டிஷார் துணிகரமாகச் செய்த இந்தச் சிபாரிசுகளை நாம் காய்தல் உவத்தலின்றி மேற்கொள்ளுவது மிகவும் நல்லது; பிறர் சொல்வதை அப்படியே நம்பிவிடாமல், நாம் ஒவ்வொருவரும் சுயமாகச் சிந்தித்துப் பார்த்துக் காலதாமதமின்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்—என்று அவர் சொன்னர். பிரமை கலைந்தது. பாராட்டுதல்களும், ஆதரவுகளும் உலகமெங்கணு மிருந்து எதிரொலித்தன. சமஸ்தான விஷயங்களும், பிரிட்டிஷ் ராணுவத்தை உடனே வாபஸ் பெறுகிற விஷயமும், மாகாணங்களை வலுக்கட்டாயமாகத் தொகுத்துப் பிணைக்கிற விஷயமும், உடனே தற்காலிக சர்க்கார் ஏற்படுவதற்குத் தடையாய் நிற்கின்றன. திட்டம், பூரண திருப்தி தருவதாக இல்லை என்பது வாஸ்தவம். எடுத்த எடுப்பில் உதறித் தள்ளாமல், ஜின்னு சாகேப் இதை நிதானமாய் யோசித்துப் பார்த்திருப்பது நல்ல அறிகுறி. லீக் காரியக் கமிட்டியின் முடிவு இன்னும் சில நாளில் தெரிந்துவிடும். நெருக்கடியான இந்த வேளையில், தாமதம் செய்வது நல்லதல்ல; தயங்குவது நல்லதல்ல. திட்டத்தை ஏற்பதால் வரும் சங்கடங்களைவிட, இதை ஒரேயடியாய் ஏற்க மறுப்பதால் உண்டாகும் அடக்கு முறை ஆட்சியும், அராஜகமும், குழப்பமும், கொந்தளிப்பும் மகா அபாயகரமானவை. பிரிட்டிஷார் துணிய வேண்டும். லீக் இணங்க வேண்டும். காங்கிரஸ் நம்பத்தான் வேண்டும்.

காலச்சுழல்

நல்ல ஆரம்பம் : கொந்தளிப்பான காலத்தில், ஏகப்பட்ட கோப தாபங்களுக் கிடையே பதவி ஏற்ற சென்னை மந்திரி சபைத் தலைவர் ஸ்ரீ பிரகாசமும் அவரது சகாக்களும், "தம்முடைய கடமையைப் பொறுப்புடன் ஆற்ற முயல்வார் என்றே நாம் நம்புகிறோம்" என்று சென்ற சக்தி இதழில் நாம் எழுதியதை மெய்ப்பித்து வருவது காண மகிழ்ச்சி அடைகிறோம். கால, நேரம் பாராமல், விஷயங்களின் தராதரங்களை உணராமல், குறுகிய, சுயநல, நபர்க் காழ்ப்புக்களுக்கு இரையாகாமல் பார்த்துக் கொள்ள நாம் முயல வேண்டும். யாராயிருப்பினும், துணிந்து குற்றத்தை எடுத்துக் காட்டி, திருந்த வழி சொல்லி, பொது லட்சியம் நிறைவேற ஒத்துழைத்துப் பாடுபடுவது நேர்மை மட்டுமல்ல,—அது நம் ஒவ்வொருவருடைய தீராக் கடமையும் ஆகும். பழைய சச்சரவுகளை நினைத்தால், ஆத்திரம் வரத்தான் செய்யும். ஆனால், ஆத்திரப்பட்டு எதிர்த்துச் சண்டை போட்டுக்கொண்டே யிருந்தால், நபர்களின் சொந்த விவகாரங்களைப் பொது விவகாரங்களாக மாற்றவேண்டிய தடுக்க வியலாத ஆசை மேலிட்டு, அதன் பயனாக, மேலும் மேலும் புகைச்சலும் பூசலும்தான் பெருகும்.

மேலும், "பொது ஜனம்" என்பதை, நாம் நினைத்தபோ தெல்லாம், நினைத்தபடி யெல்லாம், இளக்கிக் குழைத்து, உருமாற்றிவிடக்கூடிய ஒரு களிமண் வஸ்துவாக எண்ணிவிடக் கூடாது—உயிர்த்துடிப்புள்ள, மகா சக்திவாய்ந்த ஜனத்திரள் அது என்பதை மறந்துவிடக் கூடாது. யாரும் இப்போது திடீரென்று காரியம் சாதித்துக் காட்ட முடியாது. அதற்குக் காலம் வேண்டும். உறுதியும் உழைப்பும் வேண்டும். ஒத்துழைப்பும், அனுதாபத்துடன் கூடிய யோசனையும் வேண்டும். மக்கள் நம்பிக்கைக்கு மந்திரிகள் பூரண பாத்திரர் ஆவார்கள் என்றே நாம் நம்புகிறோம்.

தமிழுக்கு உதவுங்கள் : தமிழ்ப் பேராசிரியர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களைத் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள் என்று சொல்ல முடியாது. தமிழ் அறிஞர்கள் அறியவே செய்வார்கள். தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் இந்தப் பெரியாரைப் பற்றி அறிவது அவசியம். அவ்வாறு அறிந்து கொள்ளும்படி செய்வது நமது கடமை. இருபத்தாறு ஆண்டுகள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராக இருந்து, இப்போது அவர் ஓய்வு பெற்றிருக்கிறார். இவரது எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவைப் பேரறிஞர்களும், தமிழ்ப் பெருமக்களும் சேர்ந்து, வருகிற ஜூலை 7-ல் கொண்டாடுகிறார்கள். அப்போது, திரு. முதலியாருக்குத் தகுந்ததொரு பட்டம் அளிப்பதோடு, ஒரு நிதியும் வழங்கப் பெறும் என்று அறிகிறோம். தமிழுக்கு உதவுங்கள்—தாராளமாய் உதவுங்கள். தமிழ் வளர்த்த பெரியாரை வாழ்த்துங்கள். **திரு. பி. சீனிவாச அய்யங்கார், தமிழகம், 27, கொண்டலையர் தெரு, சென்னை**—என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்ப வேண்டும்.

வருந்துகிறோம்: இந்தியாவின் தலைசிறந்த சட்ட நிபுணர்களில் ஒருவரும், தேச பக்தரும், ஐ. என். ஏ. வழக்கில் உலகமே மலைக்கும் வண்ணம் போராடி வெற்றி கண்டவரும் ஆன **ஸ்ரீ புலாபாய் ஜீவன்ஜி தேசாய்,** கடந்த நாலு மாதங்களாக உடல் நலமில்லாமல் இருந்து, 6—5—46ல், தமது 69-வது வயதில், பம்பாயில், காலமாகி விட்டார். அவரது வாழ்க்கைக் கனவு நனவாவதைப் பார்க்கு முன், அவர் மறைந்தது நாட்டுக்கு நஷ்டம், நமக்குப் பெரும் வருத்தம்.

தலைவர் ஜவஹர்

கிருஷ்ணலால் ஸ்ரீதரனி

சுதந்தர இந்தியாவின் முதல் தலைவராக வரக் கூடியவர் நேரு. இன்று அவர் காந்திஜியின் நண்பர். காந்திஜியின் நாளைய வாரிசு நிச்சயமாக அவரேதான்.

காங்கிரசின் நீறு பூர்த்த நெருப்பு அவர். காங்கிரசின் சார்பில் தனிக் குரல் கொடுக்கும் நேரு, நாட்டின் சுதந்தர ஆவேசத்தையும் துடிதுடிப்பையுமே பிரதிபலிக்கிறார். இன்று இந்தியாவின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற விரும்பும் எந்த நாடும் நேருவின் ஆதரவையும் நன்மதிப்பையும் முதலில் பெற்றாகவேண்டும்.

ஆதரவையும் புகழையும் நாடி அவர் அரசியலில் இறங்க வில்லை. உண்மைத் தகுதியும் ஒப்பற்ற திறமையுமே அவரைத் தலைமைப் பதவிக்கு உயர்த்தின. தியாகத்திலே சதாதிளைக்கும் அவருடைய வீரம் சுத்த சேவாஸ்வரூபம் பெற்றதும், புகழின் மணி முடி அவரைப்போய் அடைந்ததும் நியாயந்தானே?

குபேர செல்வத்துக்கு வாரிசாகப் பிறந்த நேரு ஒரு சமதர்மியாகப் பரிணமித்து விட்டது இந்திய அரசியலில் ஒரு முக்கிய சம்பவ மாகும். அருளை நாடிப் பொருளையும், புவியரசையும் துறந்த புத்தரைப்போல், சேவை செய்வதற்காக — மக்களுக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் சேவை செய்வதற்காக என்றே, செல்வபோகத்தைத் துறந்தவர் நேரு.

இளமையிலேயே வயதும் அறிவும் முதிர்ச்சி பெற்றுவிட்ட பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சுதந்தர இந்தியாவின் ராஷ்டிரபதியாக வர விருப்பது நம்முடைய பாக்கியம். வேர் என்ற இலக்கியத் தொகுப்பு நூலில் உள்ள ஒரு கட்டுரையின் சாரம் இது

உணர்ச்சி கொந்தளிக்கும் உள்ளம். எழில் மிகுந்த தோற்றம். பளிங்கில் கடைந்தது போன்ற எடுப்பான உறுப்புக்கள். சோகத்தின்சாயை படர்ந்த, அமைதி தோய்ந்த கண்கள். ஆனால், சம்பாஷணையில் அபூர்வமான ஒளியும் உறுதியும் காட்டி ஒளிரும் கண்கள். பண்பட்ட உள்ளத்தின் உணர்ச்சித் துடிப்பை வெளியிடும் நாசி. காந்திக் குல்லா போட்டு மறைத்த வழுக்கைத் தலை. அந்த வழுக்கைத் தலையை விட்டு விட்டால், இந்திய வாலிபத்தின் பூரண வளர்ச்சியின் பிம்பமென அவரைச் சொல்லலாம். ஒரே வார்த்தையில், அவர் ஓர் ஆணழகன்.

காந்திஜியைப் பின்பற்றி, எளிமையை மேற்கொண்ட இவருடைய வாழ்வில் ஓர் அலாதியான ஏற்றமும் கம்பீரமும் இருக்கவே செய்கின்றன.

அப்பழுக்கற்ற தூய ஆடையணியும் நேரு, உடையணியும் துறையிலும் பல 'ஸ்டைல்'களை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

குழந்தைகளை நேரு மிகவும் நேசிக்கிறார். அவர்களோடு பழகுவதில் ஓர் ஆறுதல் பெறுகி

ருர். சிறைத் தனிமையில் பட்ட துன்பத்தை யெல்லாம் குழந்தைகளின் மலர்ந்த முகங்களைக் காணும்போது அவர் மறந்து விடுகிருர். அவரது வீட்டிலுள்ள புத்தக அறையில் எங்கும் அவருடைய அருமை மகள் இந்திராவின் படங்கள் மாட்டப்பட்டிருப்பதைக் காணலாம். தன் மகளிடம் அவர் உயிரையே வைத்திருக்கிருர் என்று சொல்லலாம்.

அவருடைய புத்தக அறை ஒரு சிறந்த நூல் நிலையம்தான். அதில் ஆயிரக் கணக்கான ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்கப் புத்தகங்கள் உள்ளன. மேலும், உலகின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் அவருக்கு வருகின்றன. இந்த அறையைப் பார்த்தவர்களுக்குத் தெரியும், ஏன் அவர் தனிமையை அவ்வளவு நாடுகிருர் என்பதன் ரகசியம்.

மேலை நாடு, கீழை நாடு—இரண்டுக்கும் ஆத்மிகக் குழந்தை அவர். ஆனல், எதிலும அவர் பூரணமாக ஒட்டுவதில்லை. நகரங்களின் பேரிரைச்சலையும், அரசியலின் அவகேடுகளையும் விட்டு விலகி, இமயச் சாரலில் பொழுதைக் கழிக்கப் பேராவல் கொள்பவர் அவர். பிரயாணம் செய்து கொண்டே யிருப்பதில் மிகவும் ஆசை யுள்ளவர். ஆனல், தடைப்பட்டு நிற்கும் இந்த ஆசை வேறு வழியில் நிறைவு பெறுகிறது. அடுத்தபடியாக அவருக்கு மிகவும் பிடித்தமானது எழுத்து வேலையாகும். பூர்த்தியாக முடியாத பிரயாண ஆசை இத்துறையில் பூரணமாக வெளிப்படுகிறது. அவர் எழுதியுள்ளதில் பெரும் பகுதி ஆங்கிலந்தான். அவர் எழுதும் ஆங்கில நடை அந்த மொழியில் அவருக்கு இருக்கும் ஒப்பற்ற புலமையைப் புலப்படுத்துகிறது. அவர் எழுதிய உலக சரித்திரம் அறிவுலகை அணிசெய்யும் ஓர் அற்புத வெளியீடாகும்.

பிளேட்டோ 'கதி'யில் பல உபகதைகளுடன் கதை சொல்வதில் நேருவுக்குப் பிரிய மதிகம். தனது சொந்தக் 'காரை'ச் செலுத்திச் செல்வதில், ஓர் அமெரிக்கனைப் போல, இவரும் தனித்த இன்பங் கொள்ளுகிருர்.

சுதந்தரப் பற்று அவரை ஒரு 'சிறைப்பறவை' ஆக்கிவிட்டது. நீண்ட, தொடர்ந்த சிறைவாசமும் அவர் உள்ளக் கனலை அணைக்க முடியவில்லை.

அரசியலில் முதலில் நுழைந்த அவர், மின்னல் வேகத்தில் அதன் தலைமைப் பதவியைக் கைப்பற்றி விட்டது வியப்புக்குரியதே. ஆனல், அதற்குக் காரணங்களும் இருக்கின்றன.

முதலாவதாக, திறமை குடி கொண்டுள்ள அவர், ஒரு பிறவித் தலைவர். அடுத்தபடியாக அவருடைய தந்தை மோதிலாலின் அபாரமான செல்வாக்கும் மகத்தான பலமும் நேருவின் அரசியல் வாழ்வின் ஆதாரமாக நின்றன. இதைவிட விசேஷமானதும் முக்கியமானதுமான காரணம் ஒன்று உண்டு: காந்திஜி. காந்திஜி ஜவஹரிடம் அலாதியான வாஞ்சை கொண்டார். அவரைத் தன் வாரிசாக ஏற்றுக்கொண்டதோடு, தேசிய காங்கிரசின் மணி முடியையும் தன் கையாலேயே அவருக்குச் சூட்டிவிட்டார்!

அரசியலில், காந்திஜியும் நேருவும் பிரிக்கமுடியாத இணை. ஒருவரின்றி மற்றவரால் இருக்கமுடியாது. 'எங்கள் உறவு, உள்ளம் ஒன்றிய உறவாகும். எத்தகைய

அழகின்

இரு தலைமுறை

இருபது வருஷ வித்தியாசம்! இருந்தும், தாய் தன் பதினறு வயது மகளைப்போல் யௌவனத்தோடும், சரும அழகுடனும் விளங்குகிருள். காரணம் இந்த தாய் தன் தாயின் சொற்படி பியர்ஸ் சோப்பையும், சுத்த ஜலத்தையும் உபயோகித்து சரும அழகைக் காப்பாற்றிக் கொண்டதுதான். இந்த முறையைப் பின்பற்றி அழகான அவள் மகளும் தன் சருமத்தைக் காப்பாற்றுவதால், இருபது வருஷத்திற்குப் பின் தன் தாயின் சருமம் இன்று இருப்பதுபோல், அவள் சருமமும் அழகுடன் விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.

பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 88-50 TM

A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

அறிவு வேற்றுமையும் அதைச் சிதைக்க முடியாது' என்று காந்திஜியே கூறியுள்ளார். காந்திஜி இந்தியாவின் சன்-யாட்-சென் என்ருல் நேரு அதன் சியாங்கை ஷேக். காந்தி இந்தியாவின் லெனின் என்ருல், நேரு அதன் ஸ்டாலின்.

இருவருக்குமிடையே அடிப்படை வேற்றுமைகள் இல்லாமலில்லை. காந்திஜி '1914' இந்தியாவைக் குறிப்பதாகக் கொண்டால், நேரு '1939' இந்தியாவைக் குறிப்பிடுகிருர் என்று சொல்லலாம்.

காந்திஜி ஒரு மத்தியகால மேதை. விவசாயத்தையும் குடிசைத் தொழிலேயும் அடிப்படையாகக் கொண்ட வாழ்வு முறையில் காந்திஜி அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். இந்தியாவின் 'பெரிய விவசாயி' அவர்.

நேரு இந்தியாவின் 'மேலான தொழிலாளி'; மேலே நாட்டு நவீனப் போக்கில் செல்லும் சமதர்மி. ருஷ்யா போய் வந்த அவர், 'இந்தியாவின் நோய்களுக் கெல்லாம் சமதர்மமே மாற்று' என்று மனப் பூர்வமாக நம்புகிருர்.

நிர்ப்பந்தம், பலாத்காரம் அற்ற முறையில், பரிணும ரீதியில் சமூகம் படிப்படியாக வளர்ந்து விரிவடைய வேண்டும் என்று காந்திஜி விரும்புகிருர். நேருவோ, 'இந்தியா ஒரு சமூகப் புரட்சியை ஆரம்பிக்க வேண்டும். பலாத்காரமின்றி முடியாது' என்கிருர்.

காந்திஜிக்கு அஹிம்சை என்பது வெறும் கொள்கை மட்டுமல்ல. அவருடைய வாழ்வின், நம்பிக்கையின் ஆணி வேரே அதுதான். ஆனல், நேரு அஹிம்சையை ஒரு கொள்கையாக மட்டுமே மதிக்கிருர்.

செல்வர்களேயே சமூகத்தின் தர்மகர்த்தாக்களாக்கி விட முடியும் என்று காந்திஜி நம்புகிருர். நேருவுக்கோ, இது பத்தாம் பசலிப் போக்காகவே படுகிறது.

காந்திஜி, நேரு இருவரும் ஜனநாயக வாதிகள். ஆனல், நேருவுக்கு இருக்கும் சர்வ தேச நோக்கு காந்திஜியிடம் இல்லே. ஸ்பானிஷ் குடியரசுப் போரின் போதே பாசிஸத்தைக் கண்டித்தவர் நேரு. சீன, அபிஸீனிய, ம்யூனிக் நெருக்கடிகளின் போது ஜனநாயக சக்திகளுக்கு வலிமை தேடியவர். சியாங் தம்பதிகளின் மிக நெருங்கிய நண்பர். இவர்கள் மூவருமாக, இந்திய - சீனக் கூட்டுறவின் அடிப்படையில் ஒரு புதிய ஆசியாவைப் புனர்நிர்மாணம் செய்யப் போராடி வருகிருர்கள்.

பாசிஸத்தை வெறுக்கும் நேரு ஏகாதிபத்தியத்தையும் வெறுக்கிருர். அவருக்கு இரண்டும் 'இரட்டையர்' போலத்தான். 'குடியேற்ற நாடுகளிலும் அடிமைப் பிரதேசங்களிலும் ஏகாதிபத்தியம் தலே தூக்கியது. நாசிஸமோ நாட்டிலேயே பேயாடுகிறது.' இரண்டுக்கும் முள்ள வித்தியாசம் இதுதான்.

காலத்திலும் பொறுமையிலும் முசுக்கட்டை இலே பட்டாக ஆய்விடுகிறது.

—பாரசீகப் பழமொழி

புரட்சி

துர்கனேவ்

தொழிலாளி: இங்கு ஏன் வந்தாய்? உனக்கு வேண்டுவதென்ன? நீ எங்களுடன் சேர்ந்தவனல்ல. இங்கிருந்து போய்விடு.

நகத்தில் அழுக்குப்படாதவன்: இல்லை, சகோதரனே! நானும் உங்களைச் சேர்ந்தவன்தான்.

தொழிலாளி: அப்படியா? நீயும் எங்களில் ஒருவனா! என்ன சொன்னாய்? இதோ! என் கைகளைப் பார். எவ்வளவு அழுக்கேறி இருக்கின்றன அவை. சாணி நாற்றமும் தார் நாற்றமும் எப்படி வீசுகிறது பார்த்தாயா? உன் கைகளோ, வெள்ளை வெளேரென்று இருக்கின்றனவே. அவை நாற்றமடிக்கின்றனவா?

"இந்தா! முகர்ந்து பார்" என்று வெள்ளைக் கையன் தன் கைகளை நீட்டுகிறான்.

தொழிலாளி அவனுடைய கைகளை முகர்ந்து பார்த்துவிட்டு, "என்ன விநோதம்! உன் கைகள் இரும்பு நாற்ற மடிக்கின்றனவே!"

வெள்ளைக் கையன்: அவை இரும்பு நாற்றம் அடிப்பது உண்மைதான். ஆறு வருஷங்களுக்கு இந்தக் கைகள் தளை சுமந்தன. அதுதான் காரணம்.

தொழிலாளி: ஏன் அப்படி?

வெள்ளைக் கையன்: நான் உங்களுடைய வாழ்வு நலத்தைப் பெரிதாக மதித்தேன். அறியாமை மிகுந்து இருளில் வாழும் மக்களாகிய உங்களுக்கு விடுதலை தேட விரும்பினேன். உங்களை நசுக்கிய கொடுங்கோலரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தேன். புரட்சி செய்தேன்...... என்னை அவர்கள் சிறையிட்டார்கள்.

தொழிலாளி: சிறையிட்டார்களா?— சரிதானே, உன்னைக் கலகம் செய்யச் சொன்னது யார்? முன்னால் அதைச் சொல்லு.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அதே தொழிலாளியும் வேறொருவனும்:

முதல் ஆள்: பீட்டர்! இதோ பார்; போன கோடைக்கு முந்திய கோடையில் வெள்ளை நிற மான கைகளோடு ஒருவன் உன்னோடு பேசினானே, நினைவிருக்கிறதா?

இரண்டாவது ஆள்: நினைவிருக்கிறது... எதற்காகக் கேட்கிறாய்?

முதல் ஆள்: அவனை இன்று தூக்கிலிடப் போகிறார்களாம்; உத்தரவுகூடப் போய் விட்டதாம்.

இரண்டாவது ஆள்: மீண்டும் அவன் புரட்சி செய்துகொண்டிருந்தானா?

முதல் ஆள்: ஆமாம்.

இரண்டாவது ஆள்: சகோதரனே! டிமிட்ரி! கவனி. அவனைத் தூக்கிலிடப் போகும் கயிற்றில் கொஞ்சம் நாம் கொண்டுவர வேண்டாமா? அதனால் வீட்டுக்குச் சுபிட்சம் ஏற்படும் என்று சொல்லுகிறார்களே.

முதல் ஆள்: நீ சொல்லுவது சரிதான், பீட்டர். நீ சொல்லும் யோசனை நல்ல யோசனைதான்.

நீள நெடுங் கதையாய்ச் சொல்ல வேண்டியவைகளை, சூத்திரம் போல, வசன கவிதையாகச் சொல்லுவதில் ருஷ்யப் பேரறிஞரும் கவிஞருமான ஐவன் துர்கனேவ் வல்லவர்.

ரிக்ஷாப் பந்தயம்: 'சீனாவின் போக்கு வரத்து முறையை அமெரிக்கத் துருப்புகள் குட்டிச் சுவராக அடிக்கின்றனர்' என்று அமெரிக்கத் துருப்புகள் அதிகமாக உள்ள நகரங்களில் வசிக்கும் பணக்காரச் சீனர்கள் புகார் செய்கிறார்கள். அமெரிக்கர்கள் வாடகைக்கு ரிக்ஷாக்கள் எடுத்து, கூலிகளை அவற்றில் உட்காரவைத்து, பந்தயங்களில் இழுத்துக்கொண்டு ஓடுகிறார்களாம். இந்தப் பந்தயங்களில் பெருந் தொகைகளைப் பணயம் வைக்கிறார்கள்.

கன்னித் தாய்: இங்கர் நார்டன் டாஃப்ட் என்பவள் கோபன்ஹேகனைச் சேர்ந்த ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியை. டேனியப் பாராளுமன்றத்தில் ஒரு பொதுவுடைமை அங்கத்தினருங்கூட. வயது 46 ஆகியும் இன்னமும் மணமாகவில்லை. அவளுக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது.

தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறதென்றும், அதன் தந்தையை மணக்கும் உத்தேசம் கிடையாது என்றும், அவள் கூறியபோது நாடெங்கும் அதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது.

"நான் குழந்தையின் தந்தையை மணக்க மறுப்பதற்காக என்னைப் பள்ளிக்கூடத்தில் இருந்து விலக்குவார்களாயின், அதை எதிர்த்துக் கடைசி வரையிலும் போராடுவேன்" என்று அவள் சபதம் போட்டிருக்கிறாள்.

அற்புதச் சிற்பி: ரேனி டூர்னே ஒரு குருடன்; அவனுக்கு ஒரு கைதான் இருக்கிறது. உணர்ச்சிகளை அப்படியே சித்தரிப்பவை, அவனுடைய சிருஷ்டிகள். பாரிஸ் அங்கவீனர் விடுதியில் அவைகளுக்குப் பெரிய கிராக்கி யிருக்கிறது.

முதல் மகா யுத்தத்தில் தன் பார்வையையும், ஒரு கையையும் அவன் பறிகொடுத்து விட்டான்.

ஆஸ்பத்திரியை அவன் விட்ட போது, மெழுகில் படமெழுதும் வேலை அவனுக்குக் கிடைத்தது. ஆனால், அதில் அவன் மனம் செல்லவில்லை.

சாந்தைக் கொண்டு புது உருவங்கள் அமைக்க, வேறொரு சிற்பி கற்றுக் கொடுத்தான். இந்த வேலையில் ரேனி சிரத்தையோடு ஈடுபட்டான். மெதுவாக, மிகுந்த சிரமத்துக்குப் பிறகு, தன் ஒரே கையைக் கொண்டு வேலை செய்யப் பழகிக் கொண்டான். அநேக முயற்சிகளுக்குப் பிறகு ஒரு பெண்ணின் தலையை வடிவு செய்து முடித்தான்.

இழந்த தன் கையைப்போல அவன் செய்த 'மாடல்'தான் அவன் சிருஷ்டிகளுள் சிறந்ததாம். தன் இதழ்களைக் கொண்டே அந்தக் கையின் உருவை அவன் நிர்ணயித்துக் கொண்டான்!

—சண்டே டைம்ஸ் (சென்னை)

*

சிகரெட் மிதவாதம்

ஊதல் நிபுணன்

புகையிலையை எந்த ரூபத்தில் உபயோகித்தாலும் கெடுதல் தான். சிகரெட்டும் அப்படித் தான். புகையிலையைப் போலவே, சிகரெட்டும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உபயோகிக்கப்படும் போது, அதன் தீய விளைவுகள் அவ்வளவாக உடனுக்குடன் அப்பட்டமாகத் தோன்றுவதில்லை. சிலருக்கு வெளி சங்கமாகத் தீங்கு தராத புகையிலை நஞ்சின் அளவு, வேறு சிலருக்கு அபாயகரமான கோளாறுகளை உண்டுபண்ணி விடுவதுண்டு.

உங்களால் எந்த அளவு புகையிலை நஞ்சைத் தாக்குப் பிடிக்க முடியும்? நீங்கள் மனமாரச் சுய சோதனை செய்து பார்த்தால், அது நிச்சயம் தெரிந்துவிடும்: சுலபமாய்த் தூக்கம் வரவில்லையா? சில சமயம் பார்வை மங்குகிறதா? திடீரென்று, எப்போதாவது, செரிமானக் கோளாறு உண்டாகிறதா? பசி எடுக்கவில்லையா? சதா தொண்டை கரகரக்கிறதா? நாடித் துடிப்பு மித மிஞ்சி இருக்கிறதா? திடீரென்று நெஞ்சு துணுக்குறுகிறதா? மார்பின் இடப் புறத்தில், இருதயத்துக்கு மேல் பாகத்தில், திடீரென்று வலி எடுக்கிறதா? கை நடுங்குகிறதா?

இந்தக் குறிகள் தென்பட்டால்,புகையிலை நஞ்சு மிதமிஞ்சிப் போய்விட்டது என்று கண்டு கொள்ளலாம். சிகரெட்டை அமிதமாக உபயோகித்து வருகிற போது, இந்த அறிகுறிகள் கண்டால், உஷாராயிருக்க வேண்டும். சிகரெட் எண்ணிக்கையைச் சற்றுக் குறைத்துப் பாருங்கள். அப்போது, தொந்தரை குறையத் தொடங்குமானால், 'நிக்கோட்டின்' பாஷாணம்தான் உங்கள் கோளாறுக்குக் காரணம் என்று தெரிந்து கொள்ளலாம்.

நெஞ்சுத் துடிப்பும், ரத்த ஓட்டமும்தான் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவை. புகையிலை நஞ்சு, ரத்தக் குழாய்களை இறுக்கி நெருக்கி விடும் சக்தி பெற்றது. ரத்தக் குழாய்கள் ஏற்கெனவே பழுதுபட்டுப் போயிருந்தால், இது நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும். கண் நரம்பு, கால் நரம்புகளை இது கெடுத்து விடும். விரல் மரத்துப் போவதும், விரல் நரம்பு விட்டு விட்டுத் துடிப்பதும் அபாய அறிவிப்புகள். ரத்தக் கொதிப்புள்ளவர்களும், இருதய நோயுள்ளவர்களும் சிகரெட் பிடிப்பது மிகவும் ஆபத்தானது.

இவை மட்டுமா? அசாத்திய அளவில் சிகரெட் பிடிப்பவர்களுடைய தொண்டை சதா வறண்டு கிடக்கும்; கரகரத்திருக்கும்; மார்ச்சளி பிடிக்கும்; இருமல் வரும்.

சிகரெட் பிடிக்கும் பழக்கம் கெடுதல் என்று தெரிந்தும், பழக்க தோஷத்தால் அதற்கு

பயப்படாதீர்கள்! சிகரெட்டை அறவே ஒழிக்கச் சொல்லவில்லை. மிதமாய், கவனமாய் ஊதுங்கள் என்றுதான் டாக்டர் மார்ட்டின் கம்பேர்ட் சொல்லுகிறார். பேஜியன்ட் சஞ்சிகைக் கட்டுரையின் சாரம்.

அடிமைப்பட் டிருப்பவர்கள் லேசில் அதை ஒழிக்க முடியாது தான். அதை அறவே ஒழிக்க முடியாதவர்கள், நிதானமாக வாவது இருக்கப் பழகலாம். எப்படி? வழி சொல்லுகிறேன்:

மூச்சுப் பிடித்துப் புகையை உள்ளே உறிஞ்சாதீர்கள். சுவாசாசயத்துக்குள் புகையை இழுத்துக் கொண்டு போனல் ஒழிய ரசிக்க வில்லையே—என்று ஊதல் பிரியர் சொல்வார். இதனல், ஊதல் பிரியர் ஊதல் அடிமையாகி விடுவார். உள்ளே இழுப்பதால், மும்மடங்கு அதிக மான புகையிலே நஞ்சு உடம்பில் சேருகிறது. மூச்சுப் பை, மூச்சுக் குழாய், மூக்கு எல்லாம் கெட வழி உண்டாகிறது.

ஊதுவதில் கருமித்தனம் வேண் டாம். சுருட்டிலும், சிகரெட் டிலும், வாய்க்கு அருகிலுள்ள அடிப் பாகத்தில்தான் நஞ்சு திரண்டு கூடுகிறது. இது சல் லடை மாதிரி. சிகரெட்டில் மூன் றில் ஒரு பாகத்தைப் புகைக் காமல் தூர வீசி எறிந்து விடுங் கள். பூராவையும் ஊதித் தீர்க்கா தீர்கள். சுருட்டின் அடிப் பாகத்தை மெல்லாதீர்கள். அது பூராவும் நஞ்சு.

மெல்லிய, நீளமான சிகரெட் டையே பிடியுங்கள். குட்டை யான சிகரெட் வெகு சுளுவாக விஷத்தை உங்கள் தொண்டை யில் புகுத்தி விடும். இறுக்கமாய் அடைத்து வைத்த சிகரெட் டையே பிடியுங்கள். புகை யிலையை அடர்த்தியாய்ச் சுருட்டி யிருந்தால், புகையை அது சலித்து வெளிப்படுத்தும். கரிய நிறப் புகையிலையில் நஞ்சு அதிகம் உண்டு. சிகரெட்டை உலர விடா தீர்கள். புதுச் சிகரெட்டில் தீமை குறைவு. ஏன்? அதில் அதிக மான ஈரப் பசை இருக்கிறது. இது வடி கட்ட உதவுகிறது. தேவைக்கு அதிகமாகக் கையில் சிகரெட் வைத்திரா தீர்கள்.

தமாஷாய் ஆரம்பித்தது தம்பி ரானய் வந்து முடியும். கெட்ட பழக்கம் அட்டை மாதிரி ஒட்டிக் கொள்ளும். ஆனலும், இருக்கிற துக் குள்ளே சமாளித்துத் தானே ஆக வேண்டும்? நிலைமை அத்து மீருதபடி கவனமாய்ப் பார்த்துக் கொண்டால், சரியாய் விடும்.

✲

கவிஞன் மதிப்பு

'கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும்' என்று ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண் டிருப்பவன் புலவனுக மாட் டான். கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையையே கவிதையாகச் செய்தோன்—அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை மோனம், மலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய், இயற்கை யுடனே ஒன்ருக வாழ்பவனே கவி.

—பாரதியார்

காதல் செய்

உயிரே, நீ கல்லாய்ப் பிறந்தால் காந்தக் கல்லாய்ப் பிற; செடி யானல் தொட்டால் சுருங்கிச் செடி யாகிவிடு; மனிதனனல், காதல் செய். காதலர் இல்லாவிடின், ஞாயிறு என்ற தீப்பந்தம் அவிந்து போய் விடும்.

—விக்டர் ஹ்யூகோ

எஸ்தர்

குமரப் பிரசாத்

எஸ்தர் மேல் எனக்கு எப்பொழுதும் பிரியம்தான். இத்தனை அண்ணன்மார்களுக்கும் கிடைத்த ஒரே அருமைத் தங்கை அவள். மூத்த சகோதரர்கள் இருவரும் என்னுடைய உயிர்த் தோழர்கள். பால் என்னுடைய உயிர் என்றால், மதுரம் என்ற ஜெரார்ட் என்னுடைய உடல் என்று சொல்லலாம். நாங்கள் மூவரும் இணை பிரியாத நண்பர்கள், பள்ளித் தோழர்கள். பிறப்பால் நான் இந்துவேயானாலும், இந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தில் நானும் ஒரு குடும்ப அங்கத்தினனாகவே ஆகிவிட்டேன்.

குழந்தை எஸ்தர் அழகி அல்ல. கறுப்பு நிறம். ஒல்லி உடம்பு. அமிதமாக ஐஸ் கட்டி தின்றதால், சொத்தை விழுந்து போன அரிசிப் பற்கள். ஆனால், குறுகுறுவென்ற அந்தக் கண்களின் ஒளி வீச்சும், திருத்தமாய் அமைந்த எடுப்பான மூக்கும், முத்தமிட நம்மை அழைக்கும் மெத்தென்ற, குவிந்த உதடுகளும் எஸ்தருடைய முகத்துக்கு ஒரு தனிச் சோபை தந்தன. உச்சச் சுதியில் முடுக்கி விட்ட பிடில் தந்தி போன்ற கீச்சுக் குரலில், மழலைக் குறும்பு மொழிகளை அவள் விடுவிடென்று கொட்டும்போது, அவளுடைய கவர்ச்சி அபாரமாய் விடும்.

இந்தக் கதையில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனை யல்ல; அவை யாரையும் குறிப்பிடாமல் இருப்பன வல்ல—என்று அறிந்தே இதை வெளியிடுகிறோம்.

பள்ளிக்கூடச் சண்டைகள், பாடத் தகராறுகள், இலக்கிய இலக்கண வம்புகள், கடவுள் தத்துவங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் அண்ணன்மார்களுடன் சர்ச்சை செய்து ஓய்ந்த சமயங்களில், பால்ய பிரமச்சாரியாய், அன்னிய நாட்டில் கல்வி பயின்று வந்த எனக்குக் குடும்ப வாஞ்சையின் சொல்லொணா இன்ப அனுபவத்தைப் பெற உதவியவள் சிறுமி எஸ்தர்தான். அவளுடன் உரண்டை இழுப்பதில் எனக்குக் கன பிரியம். என்னுடைய இலக்கணச் சுத்தமான இங்கிலீஷ் பேச்சுக்களையெல்லாம் அவளுடைய குழந்தை நடை இங்கிலீஷ் அனேக சமயம் ஆத்திரமூட்டத் தக்கபடி வென்றுவிடும். நிலைமையை என்னால் தாக்குப் பிடிக்க முடியாதபடி ஆய்விட்டால், அம்மாவின் துணையை நாடுவதல்லாமல் எனக்கு வேறு வழி இராது. இருவரும் சதா சண்டை பிடித்துக் கொண்டே இருப்போம். பல நாள் பேசமாட்டோம். ஆனாலும், எங்கள் சண்டை நெடுநாள் தரிக்காது. இரண்டு மூன்று வருஷப் பழக்கத்துக்குப் பிறகு, முன்பெல்லாம் நான் தங்கையாய்ப் பாவித்து வந்த எஸ்தரிடம் எனக்கு ஏதோ ஒரு புது உணர்ச்சி உண்டானதாய்த் தோன்றிற்று. எங்களுடைய பேச்சுப் போக்கும் முன்மாதிரி குழந்தைப் பேச்சாக இல்லை. ஏதோ மாறுதல் இருந்தது என்று மட்டும் தெரிந்தது. இந்த மாறுதலின் ஆரம்பம் இன்ன மாதிரி

முடிவுக்கு வரலாம் என்ற எண்ணம் என் மனத்தில் ஊடாடியதென்றே நினைக்கிறேன். அவளுக்கு எப்படியோ, அதை நான் அறியேன்.

இது பழைய கதை. பத்து வருஷத்துக்கு முந்தியது. பின்னால், என் படிப்பு முடிந்து, நான் இந்தியாவுக்கு வந்து விட்டேன். ஐந்து வருஷத்துக்கு முந்தி, வியாபாரத் தொழில் சம்பந்தமாக மீண்டும் மலேயா போயிருந்த போது, பாலேயும், மதுரத்தையும் — எஸ்தரையும்தான் — பார்க்க வேண்டுமென்று ஆசை வந்தது. இதற்கென்று ஒரு முறை கோலாலம்பூரிலிருந்து சிங்கப்பூர் போனேன்.

பழைய உயிர்த் தோழர்களைப் பல்லாண்டுகட்குப் பிறகு பார்த்த மகிழ்ச்சிப் பரபரப்பு அடங்கியவுடன், மெல்ல—சற்றுச் சங்கோசத்துடன்தான்—எஸ்தரைப்பற்றி விசாரித்தேன். மங்கைப் பருவத்தின் கிறுக்கடிக்கும் எழில் அவளுடைய ஒல்லி உடம்பை எப்படி மாற்றி இருக்கும் என்பதைப் பார்க்க நான் பேராசைப்பட்டேன். "முத்தம் தர, முத்தம் கொள்ள, முத்தம் பெறும்" அவளுடைய குவிந்த இதழ்கள் வேற்றுன் எவனுக்காகிலும் உரியவாகிவிட்டனவோ என்ற அச்சம் என்நெஞ்சில் வீங்கிப் பெருத்துக்கொண்டிருந்தது. எதையும் ஒளிவு மறைவின்றிப் பேசித் தீர்க்கும் நாங்கள், இந்த விஷயத்தில் மட்டும் வறட்டுச் சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதா என்ற ஆத்திரம் என் நெஞ்சில் உதித்ததும், சட்டென்று ஒரு கேள்வியைப் போட வாயைத் திறந்தேன். அப்போது—

வெகு நாஸூக்காக உடை அணிந்த, கட்டிள மங்கை ஒருத்தி தெருவிலிருந்து நாங்கள் இருந்த வீட்டினுள் நுழைந்தாள்.

"இதோ,—எஸ்தர் வந்துவிட்டாள். பிரசாத், இப்போதே எச்சரித்து விட்டேன். பழைய சண்டைகளுக்கு இனி இங்கே இடமில்லை" என்று சிரித்துக் கொண்டே நண்பன் பால் வெள்ளைக்காரர் சம்பிரதாயப்படி, எஸ்தரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"ஹல்லோ, எஸ்தர்! சுகந் தானு?" என்று கேட்டவன், ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொருத கதைபோல், "மிஸ் எஸ்தரா, மிஸஸ் எஸ்தரா—அதை முதலில் சொல்லிவிடு" என்று என் உள்ளத்தை அங்கேயே, அப்போதே, அந்த நிமிஷத்திலேயே, அவள் காலடியில் சரண்புக விட்டுவிட்டேன்.

"உங்களுக்கு நான் எப்பொழுதும் பழைய எஸ்தர்தானே—இதென்ன கேள்வி?—இன்னும் 'மிஸ்' தான்" என்று அவள் சொன்னபோது, அவளுடைய பால்யக் குறும்பும், பருவ நாணமும் ஓர் அலாதி ரீதியில் கலந்திருந்தன. என் அச்சம் தீர்ந்தது. ஆசை வளர்ந்தது. நம்பிக்கை உறுதிப்பட்டது.

பின்னல், இரண்டு மூன்று நாள் நடந்தவையெல்லாம் பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ என்ற கதைதான். அதற்குள்ளே, நான் கல்யாணத் திட்டங்கள் போட ஆரம்பித்து விட்டேன்—மனத்துக்குள்ளேதான். ஆனல், நான் நினைக்கிறபடியா இந்த மேலே நாட்டு யுத்த வெறியர்கள் நினைக்கிறார்கள்? பாழும் யுத்தம் வந்தது. கோலாலம்பூரில் அலுவலாக இருந்த நான் சிங்கப்பூருக்கு ஒரு முறை சென்றுவர

முடியாதபடி யுத்த நெருக்கடி வந்துவிட்டது; எஸ்தரைப் பாராமலே இந்தியா வந்து சேர்ந்தேன்.

நான் இங்கு வந்து நாலைந்து வருஷம் இருக்கும். உள்ளத் தொடர்பு தவிர, ஏனைய தொடர்புகளெல்லாம் பீரங்கி வெடிக்கு இரையாகின. நாளாவட்டத்தில், உள் நாட்டுச் சூழ் நிலைகள் என்னைப் பூராவாய்க் கவர்ந்தன. இந்துப் பெண் ஒருத்தி என் உடலையும் உள்ளத்தையும் கவர்ந்து விட்டாள். இரண்டு பிள்ளைக்குத் தகப்பனும் ஆகிவிட்டேன். இருந்தாலும், பழைய நினைவுகள் அறவே மறைந்துவிட வில்லை.

போன வருஷம், என் அருமை நண்பன் ஜேசுதாசனின் கடிதமாரிகளைச் சமாளிக்க முடியாமல், அவனுடன் சில நாளாவது தங்கிவிட்டுத்தான் வருவோமே என்று எண்ணித் தஞ்சாவூர் போயிருந்தேன். நான் கேட்டுக்கொண்டபடி, அவன் என்னை வரவேற்க ரயிலடிக்கு வந்திருந்தான். மூன்று வருஷத்துக்கு முந்திப் பேசி விட்ட குறை, தொட்ட குறைகளை யெல்லாம் பற்றி ஒரே கதம்பமாய்ப் பேசிக்கொண்டே அவன் வீடு போய்ச் சேர்ந்தோம்.

உண்மையான நாகரிகம் வாய்ந்த கிறிஸ்தவர் வீடுகளைப் போலவே, அவன் வீடும் நிரம்பத் துப்புரவாயும், கலை அழகோடும் ஒளிர்ந்தது. மேஜை, நாற்காலி, படம், கண்ணாடி, பூத்தொட்டி, புத்தகங்கள் எல்லாம் பொருத்தமான இடங்களில், கலை அழகுடன் வைக்கப்பெற்றிருந்ததைக் காணக் காண, என்னுடைய நினைவு, கடல் கடந்து போகத் தொடங்கியது. மேஜை மேல் வைத்திருந்த படத்தில் ஜேசுதாசனின் இரண்டு வயதுச் சிறுமியின் முகத்தைப் பார்த்ததும், என் நினைவு பதினைந்து வருஷத்துக்குப் பிற்பட்ட காலத்தில், 1,600 மைலுக்கு அப்பால் போய் அமர்ந்துகொண்டு விட்டது.

கடல் கடந்து போய்விட்ட என் மனம், "இந்தாங்க காப்பி" என்று, கச்சிதமாய்ச் சுதி மீட்டிய வீணைத் தந்தியின் இனிய ஒலியில், அதனினும் இனிப்பான தமிழ் மொழியில், ஒரு குரல் பேசியபோதுதான் தஞ்சைக்கு மீண்டது. என்னையும் அறியாமல், சடக்கென்று ஏறெடுத்துப் பார்த்தேன். தஞ்சை மீண்ட நினைவு, காப்பி தந்த கைக்குச் சொந்தக்காரரின் முகத்தை என் கண்கள் பார்த்த உடன், அந்த முகத்துக்கு இயம்பொணுப் பொலிவு தந்த இரண்டு கண்களின் வீச்சில் மீண்டும் தஞ்ச மடைந்தது.

"பிரசாத், நான் உனக்குச் சொல்ல வில்லையே! இவள் என் மனைவி எஸ்தர்—இவர்—" என்று ஜேசுதாசன் கூறி முடிக்கு முன்—

"அவரை எனக்குத் தெரியும். ரெம்ப நல்லாத் தெரியும்—" என்று சிரித்துக் கொண்டே சொல்லிய அவள், "—ரெண்டு பேரும் சீக்கிரமாக் காப்பியைக் குடிங்க. ஆறிப் போயிரும்—சாப்பாடு தயாரானதும் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சமையல் அறைப் பக்கம் போய்விட்டாள்.

✱

பிரிட்டிஷ் தூதர்கள்

இந்தியா சீக்கிரமாகச் சுதந்தரம் அடைய வேண்டும் என்பது பிரிட்டிஷ் சர்க்கார் நோக்கம். ஆனால், இந்தியச் சுதந்தர அரசியலை இந்தியர்களே வகுத்துக் கொள்ளவேண்டும். பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கான ஏற்பாடு களை மட்டுமே செய்வார்கள்.

சுதந்தரம் பெற்றபின் இங்கிலாந்துடன் சேர்ந்திருப்பதும் பிரிந்துபோவதும் இந்தியாவின் இஷ்டத்தையே பொறுத்தது. சேர்ந்திருப்பதால் நன்மைகள் உண்டு. ஆனால், சேர்ந்திருக்கும்படி எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது. எதுவாயினும், அதிகாரத்தை அமைதியான முறையில் மாற்றிக்கொடுப்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் லட்சியம்.

நாங்கள் காங்கிரஸ்-லீக் கட்சிகளுக்கிடையே முட்டுக்கட்டையாக இருந்த பாக்கிஸ்தான் விஷயத்தில் இருவர்க்கும் ஒற்றுமை உண்டாக்க முயன்றோம். இரண்டு கட்சியாரும் பல விஷயங்களில் விட்டுக் கொடுத்தாலும், ஒற்றுமை ஏற்பட வில்லை.

முஸ்லிம் லீக்கைத் தவிர, ஏனையோர் அனைவரும் இந்தியாவைப் பிரிக்கக்கூடாது என்றே வற்புறுத்துகின்றனர். ஆயினும், இந்தியா பிரிக்கப்படாவிட்டால், ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக உள்ள ஆட்சியில் முஸ்லிம்கள் சாஸ்வதமாகக் கஷ்டப்பட வேண்டி யிருக்கும் என்று உண்மையாகவேபயப்படுவதால், நாங்கள் அவர்களுடைய பாக்கிஸ்தான் கோரிக்கையைக் கவனமாகப் பரிசீலனை செய்தோம்.

> இது பிரிட்டிஷாரின் தீர்ப்பல்ல; சிபாரிசு தான். குறை யில்லாம லில்லை. வேறு வகையு மில்லை. அறவே புறக்கணிப்பதால் வரும் அல்லல் சொல்லத் தரமன்று.

பாக்கிஸ்தான்: முஸ்லிம் லீக், இந்தியாவின் வடமேற்கிலும், வடகிழக்கிலும் சர்வ ராஜ்யாதிகாரமுள்ள இரண்டு முஸ்லிம் அரசாங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சுய நிர்ணய உரிமையின் பெயரால் கேட்கின்றது.

அப்படியானால், முஸ்லிம்கள் குறைவாகவுள்ள பகுதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்பானேன்? அவைகளைச் சேர்க்காவிட்டால், அந்த முஸ்லிம் ராஜ்யங்களைச் சரியாக நிர்வாகம் செய்யவும் முடியாது, பொருளாதாரத்தில் பலவீனமாகவும் இருக்கும் என்று பதில் கூறுகிறார்கள்.

(1) ஆனல், பாக்கிஸ்தானத்தில் சேரும் ஆறு மாகாணங்களிலுமுள்ள முஸ்லிம் அல்லாதார் தொகை மிகப் பெரியதாகும்.

	முஸ்லிம் சதமானம்	முஸ்லிம் அல்லாதார் சதமானம்
வடமேற்கில்	62	38
வடகிழக்கில்	51·7	48·3
பாக்கி இந்தியாவில்	11	89

ஆகவே, சிறுபான்மையோர் பிரச்னையைப் பாக்கிஸ்தானல்

தீர்க்க முடியாது என்பது இந்தப் புள்ளி விவரங்களி லிருந்து தெளி வாகின்றது.

(2) அத்துடன், முஸ்லிம் அல்லாதாரே பெரும்பாலோராக உள்ள அஸ்ஸாமையும், பஞ்சாப் பகுதியையும், வங்காளப் பகுதியையும் பாக்கிஸ்தானில் சேர்ப்பது நியாய மாகாது.

(3) மேலும், பாக்கிஸ்தான் வேண்டு மென்று கேட்பதற்காகக் கூறும் வாதங்கள் எல்லாம் முஸ்லிம் அல்லாத பகுதிகளைச் சேர்க்கக்கூடாது என்று கூறுவதற்கும் பொருந்தும்.

(4) இந்த விஷயம், முக்கியமாகச் சீக்கியர்களைப் பாதிப்பதாகவும் இருக்கின்றது.

அதன்மேல், முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக உள்ள பாகங்களை மட்டும் சேர்த்து ஒரு சிறிய பாக்கிஸ்தான் அமைக்கலாமா என்று யோசித்தோம்.

ஆனால், முஸ்லிம் அல்லாத பெரும் பகுதிகளை நீக்கி விடுவதால், இந்தப் பாக்கிஸ்தான் சிறிதும் அனுபவ சாத்தியமில்லை என்று முஸ்லிம் லீக் கூறுகிறது.

அத்துடன் பஞ்சாபையும், வங்காளத்தையும் துண்டுபோடுவது அங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோருடைய விருப்பத்துக்கும் நலன்களுக்கும் விரோதமான தாகும்.

ஆதலால், எந்த விதத்திலும் பாக்கிஸ்தான் ஏற்படுத்துவதால் வகுப்புப் பிரச்னை தீர்ந்துவிடாது என்ற முடிவுக்கு வந்தோம்.

ஆட்சேபங்கள்: இவை தவிர, வேறு சில வெகு முக்கியமான ஆட்சேபங்களும் இருக்கின்றன.

(1) இந்தியாவைப் பிரித்தால், அகில இந்தியாவுக்கும் பொதுவாகவுள்ள போக்கு வரத்து, தபால், தந்தி வசதிகள் எல்லாம் தட்டுக்கெட்டுப்போய், இரண்டு பாகங்களுக்கும் பெருந் தீங்கு உண்டாகும்.

(2) இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிரிவினை கூடாது. சேனையைப் பிரிப்பதால் பெருத்த அபாயம் நேரிடும்.

(3) சுதேச சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்ந்துகொள்ளும் விஷயத்தில் சிரமம் ஏற்படும்.

(4) வடமேற்கு ராஜ்யத்துக்கும் வடகிழக்கு ராஜ்யத்துக்கும் 700 மைல் தூரமாகையால், அவைகளுக்கிடையில் போக்கு வரத்து நடத்த இந்துஸ்தான் தயவையே நாடி நிற்கவேண்டியதாகும்.

(5) இரண்டு ராஜ்யங்களும் எல்லைப் புறங்களில் இருப்பதால், அயல்நாட்டுப் படையெடுப்பை எதிர்ப்பதற்குத் தகுந்த அளவு பெரியனவாக இல்லை.

ஆதலால், இந்தியாவை இரண்டு தனி ராஜ்யங்களாகப் பிரிக்கக் கூடாது என்று முடிவு செய்கின்றோம்.

காங்கிரஸ் திட்டம்: ஆனால், இந்துக்களின் மெஜாரிட்டியால் தங்களுக்குக் கெடுதல் உண்டாகும் என்று முஸ்லிம்கள் பயப்படுகின்றார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இதற்காகக் காங்கிரஸ் கூறும் திட்டம் இது:— 1. மாகாணங்களுக்குப் பரிபூரணமான சுய ஆட்சி 2. மத்திய அரசாங்கத்துக்கு அயல் நாட்டு உறவு, பாதுகாப்பு, போக்கு வரத்து முதலிய சில விஷயங்களின் நிர்வாகம் மட்டும். 3. இஷ்டப்பட்டால், மாகாணங்கள் வேறு விஷயங்

களையும் மத்திய அரசாங்கத்துக்குக் கொடுப்பது.

இந்தத் திட்டத்தால், கட்டாயமாகக் கொடுக்கப்படும் விஷயங்களை நிர்வகிக்கும் மந்திரிகள் இந்தியா முழுவதுக்கும், இஷ்டப் பட்டுக் கொடுக்கும் விஷயங்களை நிர்வகிக்கும் மந்திரிகள் அப்படிக் கொடுக்கப்படும் மாகாணங்கட்கும், பொறுப்பு வகிப்பது போன்ற பல கஷ்டங்கள் நேருமாதலால், நாங்கள் காங்கிரஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சமஸ்தானங்கள்: இந்தியா சுதந்தரம் அடைந்துவிட்டால், அதன் பின் சமஸ்தானங்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்காருடன் உள்ள தொடர்பு நீங்கிவிடும். இதைச் சமஸ்தானதிபதிகள் ஏற்றுக் கொள்வதோடு, இனி ஏற்படப் போகும் சுதந்தர இந்தியாவுடன் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் கூறுகிறார்கள். எந்த விதத்தில் ஒத்துழைப்பது என்பது அரசியல் திட்டம் அமைக்கும் பொழுது பேசி முடித்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

எங்கள் சிபாரிசு: இறுதியாக, எந்தக் கட்சியாருடைய நலன்களையும் பாதிக்காமல், உறுதியாகவும் அனுபவ சாத்தியமாகவுமுள்ள ஓர் அரசியலை வகுப்பதற்காகக் கீழ்க் கண்ட யோசனையை நாங்கள் கூறுகின்றோம்.

ஆதாரமான அம்சங்கள்:

(1) இந்தியா முழுவதுக்கும் ஒரே ஒரு யூனியன். அயல் நாட்டு உறவு, தேசப் பாதுகாப்பு, போக்கு வரத்து மூன்றையும் நிர்வகிக்கும். அதற்கான பணத்தை வசூலிக்க அதிகாரமுடையதாயிருக்கும்.

(2) அந்த யூனியனுக்கு நிர்வாக சபையும் சட்ட சபையும் உண்டு.

(3) மேற்கண்ட மூன்று விஷயங்கள் தவிர, மற்றவையெல்லாம் மாகாணங்கட்கும் சமஸ்தானங்கட்குமே.

(4) மாகாணங்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிந்து நிர்வாகம் நடத்தலாம்.

(5) எந்த மாகாணச் சட்ட சபையாவது அரசியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்ய விரும்பினால், அதற்கான ஏற்பாடுகள் பத்து வருஷங்கட்கு ஒரு முறை செய்யப்படும்.

அரசியல் திட்டத்தின் ஆதாரமான அம்சங்களை வகுத்துவிட்டால்தான் இரண்டு கட்சியாரும் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவதற்கு ஒன்றுசேர்வார்கள் என்று தெளிவாகத் தோன்றுவதாலேயே இந்தச் சிபாரிசைச் செய்கின்றோம்.

அரசியல் நிர்ணய சபை: (1) வயது வந்தவர்க்கு ஓட்டுரிமை கொடுத்து மெம்பர்களைத் தேர்ந்தெடுப்பதே நியாயமானதாகும். ஆனால், கால தாமதம் ஆகுமானதால், இப்பொழுதுள்ள சட்ட சபைகளையே உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

(2) ஆனால், மெம்பர் தொகை ஜனத்தொகைக்கு ஏற்ப இல்லாததால் 10 லட்சம் ஜனத்தொகைக்கு ஓர் அங்கத்தினர் வீதம் தேர்தல் செய்யவேண்டும்.

(3) முஸ்லிம்—சீக்கியர்—இருவரும் அல்லாதார் — என்று பிரித்து, ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் ஜனத்தொகைக்குத் தக்கவாறு தேர்தல் செய்வர்.

(4) மாகாணங்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு, அங்கத்

தினர் தேர்தல் நடைபெறும்:—

மதராஸ் முதலிய முஸ்லிம் மைனுரிட்டி மாகாணங்கள் ஆறு.

முஸ்லீம்	பொது	சில்லறை	சீக்கியர்
20	167	3	0
வடமேற்குத் தொகுதி			
22	9	1	4
வடகிழக்குத் தொகுதி			
36	34	0	0
78	210	4	4

ஆக மொத்தம் 296 அங்கத்தினர்கள். அவர்களுடன் சமஸ்தானப் பிரதிநிதிகள் 93 பேர். அவர்களைத் தேர்தல் செய்யப் பிரிட்டிஷ்இந்தியப் பிரதிநிதிகளும், சமஸ்தானப் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு கமிட்டி அமைக்கப்படும்.

(5) இந்த அங்கத்தினர்கள் டில்லியில் கூடித் தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களையும், மைனுரிட்டி வகுப்பார்களுடைய நலன்களின் பாதுகாப்பு சம்பந்தமாக யோசனை சொல்ல ஓர் ஆலோசனைக் கமிட்டியையும் நியமனம் செய்வார்கள்.

(6) அதன்பின், மேற்கண்ட மூன்று பகுதிகளாகப் பிரிந்து மாகாணங்கட்கும் தொகுதிக்கும் அரசியல் வகுப்பார்கள்.

(7) அதன்பின், எல்லோரும் ஒன்றுகூடி, யூனியன் அரசியலை வகுப்பார்கள்.

(8) அமைப்பில் மாறுதல் செய்யவோ, அல்லது வகுப்பு நலம் சம்பந்தமான விஷயம் ஏதேனும் எழுப்பவோ வேண்டுமானல், அதற்கு இரண்டு பெரிய வகுப்பின் பிரதிநிதிகள் வந்து ஓட்டுச் செய்பவர்களில் மெஜாரிட்டியாருடைய சம்மதம் பெறுவது தேவையாகும்.

(9) வகுப்பு நலன் சம்பந்தமான விஷயம் என்பதைத் தலைவரே முடிவு செய்வார். எந்த வகுப்பிலேனு முள்ள பிரதிநிதிகளில் பெரும்பாலோர் விரும்பினல், அவர் முதலில் பெடரல் கோர்ட்டைக் கலந்துகொள்ள வேண்டும்.

(10) இந்தப்படி வகுக்கப்படும் அரசியல் அமுலுக்கு வந்த பிறகு அமையும் எந்த மாகாணச் சட்ட சபையாவது தாமுள்ள தொகுதியை விட்டு வெளியேறி விடத் தீர்மானித்தால், அந்த மாகாணம் வெளியேறலாம்.

(11) மைனுரிட்டி நலன் யோசனைக் கமிட்டி, ஜீவாதாரமான உரிமைகளையும் மைனுரிட்டிகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்களையும் அரசியல் நிர்ணய சபைக்குக் கூறும்.

(12) பிரிட்டிஷ் சர்க்கார் அதிகாரத்தைத் துறந்து விடுவதால், அவர்கள் இந்திய யூனியன் அரசியல் அமைப்புச் சபையுடன் ஓர் ஒப்பந்தம்செய்துகொள்வார்கள்.

இடைக்கால சர்க்கார்: முக்கியமான அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற இடைக்கால சர்க்காரை உடனே அமைக்க வேண்டியது அவசியமாகும். அதற்கான ஏற்பாடுகளை வைசிராய் செய்துகொண் டிருக்கிருர். ராணுவம் உட்படச் சகல விஷயங்களையும் இந்தியரே நிர்வகிப்பார்கள். அந்தச் சர்க்காருடன் பிரிட்டிஷார் பரிபூரணமாக ஒத்துழைப்பார்கள்.

இந்த யோசனைகள் எல்லோர்க்கும் திருப்தி தந்துவிடா. ஆயினும், பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஏற்றுக்கொண்டால், சுதந்தரத்தைச் சீக்கிரமாகவும்

அமைதியான முறையிலும் அமைத்துவிடலாம். இல்லா விட்டால், என்ன என்ன குழப்பங்களும் கஷ்டங்களும் இந்திய மக்களுக்கு உண்டாகுமோ யார் அறிவார்? ஆதலால், ஒவ்வொரு கட்சியாரும் தேசத்தின் நலனேயே பிரதானமாகக் கருதும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

சுதந்தர இந்தியாவானது பிரிட்டனுடன் சேர்ந்திருக்கும் என்று நம்புகிறோம். அப்படியில்லாவிட்டாலும், எங்களுடன் நெருங்கிய நண்பர்களாக இருப்பீர்கள் என்றே நம்புகிறோம். ஆனால், இவையெல்லாம் உங்கள் இஷ்டம். எதுவாயினும் சரி, உங்களுக்குச் சீரும் சிறப்பும் செழிப்பும் உண்டாகுமாக.

எழுத்தாளன் கதி!

இரண்டு நண்பர்கள் மேஜையருகே அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று தெருவிலிருந்து இரைச்சல் கேட்டது. பரிதாபகரமான முனகல்கள், பலத்த வசவுகள், ஏளனச் சிரிப்புகள் எல்லாம் காதை எட்டின.

இரண்டு நண்பரில் ஒருவன் ஜன்னல் வழியே வெளியே பார்த்துவிட்டு, "யாரையோ அடித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றான்.

"யாரது? குற்றவாளியா? இல்லை, கொலைகாரனா?" என்றான். மற்றவன், "கவனி யாராயிருந்தாலும் சரி, இந்தக் கொலையை நாம் தடுக்கவேண்டும். வா! போய் அவனுக்காகப் போராடுவோம்."

"அவர்களிடம் அடிபடுபவன் ஒரு கொலைகாரனல்ல."

"என்ன! கொலைகாரனில்லையா? ஒருவேளை திருடனாயிருக்கலாம். அப்படியானால் பரவாயில்லை. முதலில் நாம் அவனைக் கூட்டத்திடமிருந்து காப்பாற்றுவோம்."

"அவன் திருடனுமல்ல."

"திருடனுமல்லவா? அப்படியானால், ஒரு காஷியர், ரயில்வே அதிகாரி, ராணுவ கண்ட்ராக்டர், ருஷ்யக் கலை அபிமானி, பிற்போக்குள்ள பத்திரிகாசிரியர் இவர்களில் யாராவது ஒருவனாகவே அவன் இருப்பான். தொலைந்துபோகிறது. நாம் அவனுக்கு உதவி செய்வோம்."

"இல்லை... அவர்கள் ஓர் எழுத்தாளனைத்தான் உதைத்துக்கொண்டிருக்கிறார்கள்."

"ஓ, வெறும் எழுத்தாளன்தானா? அப்படியானால், அவசரமில்லை. முதலில் தேநீரை அருந்தி விடுவோம். பிறகு அவனைக் கவனித்துக்கொள்ளலாம்."

—துர்கனேவ் (ஜூன், 1878)

தேவரடியார் பாஷை!

ஸ்ரீமத்... அவர்களுக்கு விக்ஞாபனம். க்ஷேமம். க்ஷேமத்திற்கெழுதி அனுப்ப வேண்டும். நாளது வ்யய நாமஸம்வத்ஸரம் வ்ருஷப ரவி கூடு (22-5-1946) புதவார நாள் குரு பூஜையும் மற்றைய நாள் மஹேச்வர பூஜையும் நிறைவேறுகிறதாயிருக்கும். தாங்கள் வந்து சிறப்பிக்க வேண்டும். மற்றப்படி விசேஷங்களுக்கு அடிக்கடி எழுதி அனுப்பும்படி செய்யவும்.

—ஞானஸம்பந்தர் (தருமபுர ஆதினம்)

[இனிய தமிழில் **கிரந்த லிபி** கலந்த அழைப்பு வந்தது. வணக்கம்.—ஆசிரியர், சக்தி]

என் கருத்து

மகாத்மா காந்தி

பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியினரின் அறிக்கையைப் பார்க்கும் பொழுது, மற்றவர் கருத்துக்கு ஆளாகிப் பார்க்கக்கூடாதென்றும், தங்கள் தங்கள் சொந்தக் கருத்துடனேயே ஆராய வேண்டுமென்றும் நேற்று நான் கூறினேன். குறுகிய எல்லைகளுக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு எவரும் அந்த அறிக்கையை ஆராய்தல் கூடாது. பரந்த பரதகண்ட முழுவதையும் மனத்தில் வைத்தே அதனை ஆராய முற்பட வேண்டும். கவலையும் துன்பமும் அற்றதாகிய ஒரு லட்சிய நாட்டை மனத்தில் கொண்டுதான் மந்திரிகளின் அறிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அந்த அறிக்கை பற்றிய என்னுடைய சொந்தக் கருத்தை நான் அறிவிக்கிறேன். ஆனால், என் கருத்தையே மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை; அவ்வாறு இப்போது நான் சொல்லுவது, முன்னுக்குப் பின் முரணானதாகும். அவரவர் தாங்கள் தாங்களே தீர எண்ணி முடிவு செய்ய வேண்டும். அவரவர் ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளையே அவரவர் கொள்ள வேண்டும்.

நேற்று இரவு ஒருமுறை அறிக்கையை மேலெழுந்த வாரியாகப் பார்த்தேன். இன்று காலையில் மிகவும் கவனமாக முழுவதையும் படித்தேன். அந்தத் திட்டமே முடிவான தீர்ப்பு ஆகாது. மந்திரிகளும் வைசிராயுமாகச் சேர்ந்து இரண்டு கட்சிகளையும் ஒரு சமரசமான முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயன்றார்கள்; ஆனால், அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே, அவர்கள் திட்டப்படி ஏற்படப்போகும் அரசியல் நிர்ணய சபை எந்தத் திட்டத்தை வகுத்தாலும் சரி என்ற வகையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களே ஒரு திட்டத்தைச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்தச் சபை, மந்திரி கோஷ்டியின் திட்டத்தை ஏற்கலாம், மாற்றலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம்.

'பிரியமிருந்தால் ஏற்றுக்கொள், இல்லையானால் விட்டுவிடு' என்ற வகையில் மந்திரிகளின் சிபாரிசு அமையவில்லை. வரையறையுள்ள கட்டுப்பாடுகள் இருக்குமானால் சுதந்தர இந்தியாவுக்கென ஓர் அரசியலமைப்பைத் தயாரிக்கும் முழு உரிமையும் அரசியல் நிர்ணய சபைக்கு இல்லாமல் போய்விடும்.

தூது கோஷ்டியினர் மத்திய அரசாங்கத்துக்குச் சில யோசனைகள் கூறியிருக்கின்றனர். அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லீம், முஸ்லிமல்லாதார் இருவரும் தனித் தனியாகப் பெரும்பான்மை ஓட்டு மூலமாக அந்த

பலாத்கார மின்றி, ஆளப் படுவோருக்கு ஆள்வோர் சுதந்தரம் வழங்குவது உலக சரித்திரத்திலேயே புத்தப் புதிய நிகழ்ச்சி. பிரிட்டிஷாரின் திட்டம் வெளிவந்தவுடன், அதைப் பற்றிக் காந்தியடிகள் கூறியதன் சாரம் இது.

யோசனைகளைப் பெருக்கவோ, குறைக்கவோ செய்யலாம். இந்து, முஸ்லிம், சீக்கியர், மற்ற மதத்தினர் என்று இந்த வகையாகப் பிரிக்காமல் விட்டது ஒரு நல்ல அம்சம்; முன்னேற்றமான மனப்பாங்கையும் காட்டுகிறது. மதவாரியாக அரசியல் கட்சிகளைப் பிரிப்பதைத் தவிர வேறு வழியைத் தூது கோஷ்டியினர் காண முடியவில்லை. ஆனால், அரசியல் நிர்ணய சபை விரும்பினால் அவ்வகையான பிரிவை ஒழித்து விட முடியும். பாரதநாடு முழுவதிலும் மதப் பாகுபாடுகளால் அரசியல் கட்சிகள் முரண்படக் கூடாது என்பதுதான் லட்சியம்.

இதைப் போலவே மாகாணத் தொகுப்பு முறையிலும் தூது கோஷ்டியினரின் சிபாரிசு உரிமை தருவதா யிருக்கிறது. எந்த மாகாணமும் தன் விருப்பம் போல் எந்தத் தொகுதியில் வேண்டுமானாலும் சேரலாம்; ஒரு தொகுதியிலும் சேராமலே இருக்க வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு மாகாணத்தின் இஷ்டத்துக்கு விரோதமாக அதை எந்தத் தொகுதியிலும் சேரும்படி கட்டாயப் படுத்த முடியாது.

அறிக்கையைப் பற்றிய என்னுடைய கருத்து இன்னது என்பதைப் புலப்படுத்த இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டேன். அறிக்கையிலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் நான் சொல்லிவிட வில்லை.

என்னைப் பொறுத்தவரை மேலே சொன்ன கருத்துக்கள் சரியானவை என்றுதான் நினைக்கிறேன். மேலே குறிப்பிட்ட கருத்துப்படி பார்க்கும்போது, மந்திரி தூது கோஷ்டியினர் பெருமைப்படத் தக்க அறிக்கை இது என்றுதான் தோன்றுகிறது.

ஆங்கிலேயர் எவருமே நேர்மையான காரியத்தைச் செய்ய மாட்டார்கள் என்று சொல்லுவோர் உண்டு. அவர்கள் கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மந்திரிகளும், வைசிராயும் நம்மைப் போலவே ஆண்டவனுக்கு அஞ்சி ஒழுகுகிறவர்கள். சொன்ன சொல்லுக்கு மாறாக நடக்காதவரையிலும் ஒருவரைப் பற்றி முன்கூட்டியே சந்தேகப் படுவது பெருந் தவறாகும். தீனபந்து ஆண்ட்ரூஸ் ஒவ்வோர் அணுவாலும் அசல் ஆங்கிலேயர் தான்; என்றாலும் இந்தியாவுக்காக என்ன அரும்பாடு பட்டார்! அவருடைய நாட்டினர் எவரையும் முன்கூட்டியே சந்தேகப் படுவது பெருந் தவறாகும்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு என்னென்னவோ தீங்குகள் இழைத்திருக்கலாம். ஆனால், இந்த அறிக்கையின் மூலமாகத் தாங்கள் இந்தியாவுக்குச் செலுத்த வேண்டிய சரியான கடமையைச் செய்கிறார்கள். அந்தரங்க சுத்தியாகத்தான் அவர்கள் இதைச் செய்கிறார்கள் என்று நம்புகிறேன். என் நம்பிக்கை சரி என்றால் இந்தியாவின் முதுகில் பாரமாக இருக்கும் அவர்கள் இறங்கி விடுவார்கள்; இதுதான் அவர்கள் செய்ய முற்பட்டிருக்கும் கடமை.

துன்பம் நிறைந்த இந்த நாட்டைத் துன்பமும் துயரமும் அற்ற நாடாக ஆக்குதற்குரிய வித்து, மந்திரி தூது கோஷ்டியினரின் அறிக்கையில் இருக்கிறது.

கதம்பம்

ஆண்டர்சன் கதைகளுள் ஐந்து கதைகளின் மொழி பெயர்ப்பு இதில் உள்ளன.

—கலைமகள்

நடராஜ் என்கிற புலவச்சிகாமணி எழுதிய கேட்காதபேச்சு.

—சந்திரோதயம்

உங்கள் சத்துருக்களிடம் அன்பு கூறுங்கள். —சக்தி

'மாதமொரு' ஆசைக்கனலில் ஒரு துண்டு இந்தத் 'தமிழகம்'.

—நவயுவன்

இதில் வரும் ஒவ்வொரு கதையும் சிறந்த கற்பனைத் திறனும், ரஸனைச் சுவையுங்கொண்ட அற்புத சிருஷ்டிகளாகும் —முத்தமிழ் மலர்

தொலை தூரத்திலுள்ள ஜீவனோபாயத்தை பலப்படுத்துவதற்காக ஒரு ஆறுமாதம் வீட்டையும், அக மகிழ்ச்சியையும் துறந்திருந்த ஒரு ஜீவன் மீண்டும் ஒரே ஒரு நாள் ஒய்வுடன் அகத்திற்கு வந்திருந்த ஒரு சமயம் பிரிவினைக்காளான அத்த குடும்பத்தினர், அவனைக் கேட்ட கேள்வி ஒன்று மேற்கண்ட விசாரணைக்குத் தூண்டுகோலாயிற்று.

—கலா மோகினி

பருவநிலை அரிய ரேடியோ பலூன். —குமரன்

வீட்டு ரொம்ப எங்கு கண்டாலும் சாமான்கள் இரைந்து கிடக்கின்றன. —ஹிந்துஸ்தான்

லவங்கி தமிழ் படமே தவிர, அதை உருவாக்குவதில் தமிழர், தெலுங்கர், மன்னடக்காரர் ஒத்துழைத்திருக்கின்றனர்.

—தமிழ் உலகம்

தனக்கு வைத்திருந்த ரோஜாவில் ஒன்றை எடுத்துக் கோட்டில் சொருகினாள். —கலை மலர்

சும்மாக் கேட்டுக் கொண்டேயிருந்தால்? —ஆனந்த விகடன்

முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் அப்பாவாக இல்லாமல், அன்புடனும் பொறுமையுடனும் பதில் அளிக்கும் ஒரு அப்பாவையும் பெறுகிறார்கள்.

—கல்கி

மாணவ மாணவிகளால் நிகழ்த்திய கோலாட்டம், கும்மி, றவாணம், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் இயல்பானதும், மாயாவினோதமுமான பாவனைகளை விளக்கும் நடனங்கள் மிகத் திறமையாகக் காணப்பட்டன். —ஈழகேசரி

பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டி இந்தியாவை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு, இடைக்கால சர்க்காரை அமைத்து அறிவிக்கப் பட்டுவிடும் என்று நிச்சயமாய்த் தெரிகிறது. ஆகையால் இதைக் கவனிக்கும்போது, இடைக்கால சர்க்காரில் யார் யாரை நியமிப்பதென்று விவாதிக்கப் பட்டு, பெயர்களடங்கிய ஒரு ஜாப்தா ஒரு வேளை அங்கீகரிக்கப் பட்டிருக்கலாம் என்றும் தோன்றுகிறது. —தினசரி

கையிலிருந்த சொற்பப் பணமும் சில வழிந்து விட்டது.

—வசந்தம்

'உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்றார் சிவ ஞானியான திருவள்ளுவர்.

தினமணி வெளியீடு விளம்பரம்

✲

மேலும்
லைப்பாய்
பழக்கத்தை அவள்
கற்றிருக்கிறாள்!
அவள் இப்பொழுது தாயாருக்கு உதவி செய்துகொண்டு, தன் வாழ்க்கைக்கு அறிய வேண்டுவனவற்றைப் படிப் படியாக அறிந்து வருகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்க தாயும் அவளுக்குக் கற்பிக்கிறாள். ஒவ்வொரு குடும்ப ஆரோக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் ஆபத்தான அழுக்கு அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவளுக்கு பாதுகாப்பை அளித்திருக்கிறாள்.
LIFEBUOY
SOAP
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்
L. 79-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

ஜுபிடரின்

வால்மீகி

டாக்கி பாட்டுகள்

மதுரகீதவாணி

என். ஸி. வசந்தகோகிலம்

N. 18281 { புவி மீது
ஜெய ஜெய புவனபதே

N. 18284 { பொய் தவழும்
சுந்தரானந்தா

ஸ்ரீ ஹொன்னப்பா பாகவதர்

N. 18282 { ஸ்ரீ வைகுண்டபதே
2 பாகங்கள்
(ராகமாலிகை)

N. 18283 { பகவான் அவதரிப்பார்
(கரஹரப்பிரியா)
ராம ஜெய
(புன்னாகவராளி)

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

எல்லா கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்.,

டம் டம் — லாகூர் — டெல்லி — பம்பாய் — மதராஸ்.

அஞ்ச வேண்டாம்

மகான் அரவிந்தர்

இறைவனது வழிபாட்டுக்கு வாழ்க்கையும் ஒரு நிலையமே. ஆனால், இவ் வழிபாடு இன்னும் முற்றுப்பெற வில்லை. இவ் வுடலில், இந் நிலவுலகில், இவ் வாழ்க்கையில் "இஹைவ" (இங்கே) என்று உபநிடதங்கள் வற்புறுத்துகின்றவாறு இறைவனை இங்கேயே நாம் வெளிப்படுத்தல் வேண்டும். இறைவனுடைய அதீதமான மாண்பையும், அருள் ஒளியையும், பேரின்பத்தையும், நமதறிவில் ஐயமற உணர்தல் வேண்டும். உணர்வதோடன்றி, அவற்றை நம்மில் சாட்சாத் கரித்து, நம் சக்திக் கியன்ற அளவு வெளிப்படுத்தலும் வேண்டும். இங்ஙனம் அங்கீகரித்தலால் நமது முயற்சிப் போராட்டத்தின் கண் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளுக்கு நாம் அஞ்சி நிற்றல் சற்றும் பொருந்தாது. பூரண மாறுபாட்டை அடையப் பெறுவோம் எனும் நம்பிக்கை நமக்கு இருக்கின்றமையால், குறுக்குப் பாதையில் பாய்ந்து செல்வதோ, நமது வேகத்தைக் குறைக்கும் சுமையாகிய இடையூறுகளைக் களைந்து எறிவதோ ஒவ்வாததாம். நாம் செல்ல வேண்டிய வழி மிகவும் மேடு பள்ளம் நிறைந்திருப்பினும், நமது முயற்சி பலவகைப்பட்ட பிணக்குகள் பொருந்தி யிருப்பினும், அதன்பால் கஷ்ட சாத்தியமான தடைகள் ஏற்படினும், ஓர் அளவைக் கடந்தவுடன் நமக்கு ஏராளமான பலன் உண்டாகும். இதுவே நமது உழைப்புக்கு ஏற்ற பிரதிப் பலன் என்னலாம்.

நமது பிரதான திருஷ்டியின் கண், மதிக்கத் தக்க அளவு, மனம் ஊன்றி நின்று, அவ்வொரு திருஷ்டியையே பின்பற்றி வழிபாடு செய்ய நமது சங்கற்பம் சாதாரணமாய்த் திரும்பப் பெற்றாலுமே, வாழ்க்கை நமது சாதனைக்கு உற்ற துணையாய் விடும். ஆகவே, தளராத ஊக்கம் கொண்டு, விழிப்புடன், முழு உணர்வினாலும் வாழ்க்கைத் தோற்றங்களில் அமைந்த ஒவ்வொரு நுட்பமான அச்சத்தையும், அதன் பிரவிருத்திகளினின்றெழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நம்முட் சுடர்விட்டெழும் வேள்வித் தீக்கு ஆகுதியாக அளிக்க இயலும். இறுதியில் நமது முயற்சிப் போராட்டத்தில் வெற்றி வாய்ந்தவர்களாய், இம் மாபேருலகத்தையே நமது நிறைவின் நிமித்தம் உதவி புரியுமாறு வற்புறுத்த இயலும். அன்றியும், நமது முயற்சியை எதிர்த்து நின்ற ஆற்றல்களி லிருந்து நாம் பறித்துப் பெற்ற சக்திகளைக் கொண்டே நாம் அடையும் அனுபவசித்தியை வளம்பெறச் செய்யலாம்.

ஸ்ரீ கே. எஸ். வேங்கடராமன் தமிழ்ப்படுத்திய யோக ஸமுச்சயத்தில் இறையருள் என்பது இன்னது, அதை அடையும் மார்க்கம் இன்னது என்று வெகு அழகாகக் கூறப்பெற்றிருக்கிறது. மாதிரிக்கு ஒரு பக்கம் இங்கே தந்திருக்கிறோம்.

வாழ வழி

ராஜாஜி

ஒரு சமூகம் சுக வாழ்க்கை பெறவேண்டுமானால், சமூக நன்மைக்கு அனுகூலமான முறையில் பொருள்-வினியோகத் திட்டம் இருக்க வேண்டும்; அதன்படி மக்கள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த ஒப்புக்கொள்ள வேண்டும். சமயக் கொள்கைகள், அந்தத் திட்டத்தைத் தாங்கியும் உதவியும் வர வேண்டும். மதமும் ஆசாரமும் அரசியலும் பொருளாதாரத் திட்டமும் பரஸ்பர விரோதமின்றி ஒன்றுக்கொன்று வலிமை தருவனவாக இருக்க வேண்டும். இதுவே பொது நலத்துக்கு நேரான வழியாகும். அனைவரும் தத்தம் சக்தியின் அளவு உழைத்து, அனைவரும் தத்தம் அவசியத்துக்குத் தக்கபடி சவுகரியங்கள் பெற்று, சமுதாய வாழ்க்கையில் சம சுகம் பெறுவதற்குத்தகுந்த ஒரு பொருள்-வினியோகத் திட்டமும் தொழிற் திட்டமும் அரசியற் காப்புடன் அமைந்து நிறைவேற்றப்பட வேண்டும். இதுவே பொது உடைமை அல்லது சமுதாயிகம் என்றும், ஆங்கிலத்தில் ஸோஷலிஸம் என்றும் சொல்லப்படும் திட்டம். தனியொரு மனிதனுக்குப் போதிய உணவு இல்லை அல்லது உடை இல்லை என்பது பௌதிக ஆராய்ச்சிகளின் பயனைப் பெற்ற மானிட சாதிக்கு மானக்கேடு.

"எல்லாவித உழைப்பும் மதிப்புப் பெற்று நிற்க வேண்டும். சிலர் உழைப்பதும் சிலர் உழைப்பின்றிச் சுகமாக இருப்பதும் அக்கிரமம்." போட்டி ஒழிக என்ற அரிய சிறு நூலைப் படித்தீர்களா?

அனைவரும் உணவும் உடையும் பெறுவதுடன் அனைவரும் சமுதாய சந்தோஷத்தில் சரியான பங்கும் பெறவேண்டும். இதற்கு மூலாதாரம் அனைவரும் நன்ருக உழைக்க வேண்டும். புறக்காவலின் நிர்ப்பந்தமின்றி, வஞ்சனையும் மோசமுமில்லாமல் சமுதாய வேலைகள் நடைபெற வேண்டும். இதற்குத் தக்க பண்பாடும் சமயமும் பொது மக்களுக்கு வேண்டும். பாரத நாட்டில் தோன்றி நிற்கும் வேதாந்தம் இதற்கு மிகவும் பொருத்தமான மதமாகும்.

எல்லாவித உழைப்பும் சமுதாயத்துக்கு வேண்டும். ஆனபடியால், எல்லாவித உழைப்பும் மதிப்புப் பெற்று நிற்க வேண்டும். சிலர் உழைப்பதும் சிலர் உழைப்பின்றிச் சுகமாக இருப்பதும் அக்கிரமம். உழைப்பு என்பது பலவிதமாகும். உடலுழைப்பு, மூளை வேலை, மேல்பார்வை, ஆடல் பாடல் எல்லாமே சமுதாயச் சேவை. கடினமான வேலைகளுக்கும் நீண்ட பயிற்சி பெற்றுச் செய்யக்கூடிய உழைப்புக்கும் மதிப்பு அதிகமாக இருக்க வேண்டும். தற்காலத்தில் நடைமுறையிலிருக்கும் மதிப்புக் கிரமம் முற்றிலும் தவறு. அருவருப்பானதும் சமுதாயத்துக்கு இன்றியமையாததுமான வேலையைச் செய்து பிழைப்போர் இகழப்படுகிருர்கள். சுகமும் சந்தோஷமும் கலந்து நிற்கும் வேலைகளுக்கு மதிப்பு அதிகம். இந்தத் தலைகீழ் முறை ஒழிய வேண்டும்.

✲

ஒப்பற்ற புரட்சி

வெ. சாமிநாத சர்மா

உலகத்தில் இதுகாறும் ஒவ்வொரு காரணத்துக்காக ஒவ்வொரு புரட்சி நடைபெற்று வந்திருக்கிறது. முடி தரித்த மன்னர்கள் குடி தழுவி ஆள வேண்டுமென்பதற்காகப் புரட்சி; மதம் என்னும் மேட்டிலே குவிந்து கிடக்கும் குப்பைகளைச் சுட்டெரிக்க வேண்டுமென்பதற்காகப் புரட்சி; உண்கிற சோறு எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகப் புரட்சி — இப்படி ஒவ்வொரு காரணத்துக்காக ஒவ்வொரு புரட்சி. ஆனால் ருஷ்யப் புரட்சி பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டது. அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மதம் முதலிய எல்லாத் துறைகளையும் ஒரே சமயத்தில் மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக அது தோன்றியது; அழிவு வேலையையும், ஆக்க வேலையையும் ஒரே சமயத்தில் செய்து முடித்தது. இதனாலேயே ருஷ்ய மகா ஜனங்கள் அதிகமான வேதனையடைய வேண்டியிருந்தது.

தவிர, மற்றப் புரட்சிகளினால் ஜனங்கள் அனுபவித்த துன்பங்கள் பல; அடைந்த ஆறுதல்கள் சில; பெற்ற பலனோ ஒன்றுமில்லை. சில நாடுகளில் ஜனங்கள் ஒன்றைக் கோரிப் புரட்சி செய்தா..கள்; ஆனால், வேறொன்று அவர்களுக்குக் கிட்டியது. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று முழக்கம் செய்து அதிகார சக்தியை அப்புறப்படுத்தப் பார்த்தார்கள்; ஆனால், அந்த அதிகார சக்தியே அவர்களை ஆட்கொண்டு விட்டது. இன்னும் சில நாடுகளில், ஜன சக்திக்கு ஆடம்பரமான பூசை நடைபெற்றது. பூசை முடியும் தருணத்தில் அதிகார சக்தியே ஜனநாயக வேஷம் தரித்துக் கொண்டு பூசாரிகளுக்குக் காட்சி அளித்தது. அவர்களும் அதைக் கண்டு திருப்தியடைந்து விட்டார்கள். வேறு சில நாடுகளில் அவர்கள் புரட்சி செய்தவர்கள் — அரசாங்க அதிகாரத்தை நிலச்சுவான்தார்களின் பிடியிலிருந்து விடுவிக்க முயன்றார்கள்; ஆனால், கடைசியில் தொழில் முதலாளிகளின் வசத்தில் அதனை ஒப்புக் கொடுத்து விட்டார்கள். இப்படி ஒவ்வொரு நாட்டிலும் புரட்சியின்போது ரத்த ஆறு பாய்ச்சினவர்கள் பெரும்பாலோரான பாமர ஜனங்கள்; அதிலிருந்து சட்டம் செய்யும் உரிமை, சுரண்டும் உரிமை, உழைப்பின்றி ஊதியம் பெறும் உரிமை முதலிய உரிமைப் பயிர்களைச் சாகுபடி செய்து கொண்டவர்கள் சிறுபாலோரான அறிஞர்கள். ஆனால் ருஷ்யப் புரட்சி எந்த நோக்கத்துக்காக நடைபெற்றதோ அந்த நோக்கத்தை அடைந்தது. ஜனங்களே ஜனங்களுக்காகப் புரட்சி செய்ததும், அதில் வெற்றி கண்டதும் இங்குத்தான், இந்த ருஷ்யாவில்தான்.

ருஷ்யப் புரட்சி மற்ற நாடுகளில் எழுந்த புரட்சிகளிலிருந்து வேறுபட்டது; முற்போக்கும் நல்ல முடிவும் உடையது. சக்தி காரியாலய வெளியீடாகிய சோவியத் ருஷ்யாவிலிருந்து இந்தக் கட்டுரை எடுக்கப்பெற்றது.

vaLara vENdumA ?

vAZavandhAr

தாங்கள் சித்திரைமாத 'சக்தி' இதழில் வெளியிட்டிருக்கும் புதிய ரோமன்எழுத்து முறையை ஆவலுடன் வரவேற்கிறோம். இம் முறையைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்வுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—எம். எஸ். ஜகன்னாதன்,
காரியதரிசி,
மதுரை ஹோட்டல் தொழிலாளர் சங்கம்

"உங்கள் முயற்சிக்கு எங்கள் நன்றி. தமிழர்கள் தமிழையே புறிந்து கொள்ளாத நிலைமையில் கல்வி அறிவற்றுக் கிடக்கும் போது தாங்கள் சிறிது படித்தவர்களையும் கெடுக்கப் பார்க்கிறீர்கள்...உங்களால் தமிழகம் ஒழிய வேண்டும், அதாவது தமிழ் கற்ற நாங்கள் ஒழிய வேண்டும். அல்லது நீங்கள் ஒழிய வேண்டும்... இவையாவும் தங்கள் மலர் 13 இதழ் 1ல் 27 பக்க புதிய எழுத்து கட்டுரைக்கு எங்கள் அபிப்பிராயம் ஜே ஹிந்த்.

—s. c. Rajaraman,
கோயம்பத்தூர்"

இந்தப் புதிய எழுத்துக்கள் தமிழ் பேச முயலும் அந்நியருக்கன்றி ரோமன் எழுத்தறியாத் தமிழ் மகனுக்கு யாதொரு பயனும் தராது...தமிழ் எழுத்துக்களின் பெருக்கத்திற்கு ஒப்புநோக்கின் புதிய எழுத்தின் (32 ஆதலால்) சுருக்கம் கற்பதற்கு எளிதே...எழுத்துக்கள் கற்பது எளிதாயிருந்தாலும் வார்த்தைகள் கற்பது அரும்பாடாக முடியும்.

—சே. பா. சொக்கலிங்கம்,
பாளையங்கோட்டை

தங்களுடைய 'சக்தி' சித்திரை இதழில் "மூவர் முயற்சி" என்ற கட்டுரையும் அந்தக் கட்டுரையின் கருத்துப்படி "புதிய எழுத்து" என்ற ரோமன் லிபியில் உள்ள கட்டுரையும் 'சக்தி'யின் முன்னேற்றத்தையும் அதன் நிர்வாகஸ்தர்கள் நல்ல அறிஞர்கள் என்பதையும் காண்பிக்கின்றன......குறிலுக்குச் சின்ன ரோமன் எழுத்தும், நெடிலுக்குப் பெரிய ரோமன் எழுத்தும் என்று முடிவு செய்ததே சிறந்த முடிவு. அவ்விதம் முடிவு செய்தது ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்குச் சுலபமாக இருக்கிறது..

இந்த 32 எழுத்தையும் தெரிந்து கொள்வதற்கும் எழுத்தைக் கூட்டி ஒலியை உண்டாக்குவதற்கும் ரொம்ப நாள் படிக்க வேண்டியதில்லை. சில நாள்களுக்குள் கற்றுக் கொள்ள முடியும். ஆங்கிலம் படிக்காமலே ஆங்கிலத்தில் எழுதியிருப்பதை யாருடைய முயற்சியும் இல்லாமல் தன்னாலே எழுத்துக் கூட்டி வாசிக்கக் கூடிய தன்மை வாய்ந்த எழுத்தாக ரோமன் எழுத்து இருப்பதால் அதை நான் வரவேற்கிறேன்.

—அரு. சுப. கருப்பையா,
அ. சிறுவயல்

'மூவர் முயற்சி'க்குப் பேராதரவு இருப்பது காண மகிழ்ச்சி. எதிர்ப்பவர் போல் தோன்றும் இரண்டு நண்பர்களின் மனப்பூர்வமான சிரத்தையைக் காண மிக மிக மகிழ்ச்சி. வளர்க்கும் பொறுப்பு — அது உங்களுடையது.

ஐவர்

thangaL sakthiyin Epral mAtha idhaZai padiththa pallAyirakkaNakkAna thamiZargaLil nAnum oruvan. vaZakkambOl adhiluLLa siRandha vishayangaLOdu, mUvar muyaRchi enRa thalaippu kuRippidathakkadhu.

inRaiya nilamaikku rOman eZuththukaLai thamiZukku ubayOgappaduththuvadhu nallathAgavE thOnRuginRadhu. im mUvar muyaRchi miga nallathoru muyaRchi, thuNigaramAnathungUda. i n R u idhai pala thamiZ paNdithargaL edhirkka kUdum (anRum vIra mAmunivarai appadiyE palar edhirththanar). AnAl, iRudhiyilE veRRi kidaikkum. (immuRai nam Angila uchchariippaiyE maRakkadiththuvidum enRukUda oru naNbar kURinAr.)

—M. EkAmbaram,
sidhambaram

thiru sakthi Asiriyarku: ANgaL, peNgaL araikuRai Angilam padiththu, suyamAga Angilaththil eZudhavum padikkavum sAththiyaminRi varundhuvadhai nanKu aRigiROm. thamiZ uchcharippum arththamum uLLa Angilam pOnRa pudhu moZiyai anaivarum virumbi viruththi seiyya vENdiyathu avasiyam: athaRkAna pAdangaLaiyum, eppadi payilvadhu enRa muRaiyaiyum thangaLin sakthi mAdha veLiyIttil pirasuram seydhu, pudhu eZuththu muRaiyai abiviruththi seyvathaRkAna sagala thuRaiyilum Andavar sagAyam irukka vaNanggugiREn. palarin Arvaththai pUrthi seyyum ith thuRaiyil thangaLin muyaRchi veRRiyadaya vEndugiREn.

—N. kuppuswAmi,
r. kunnaththUr

pudhiya eZuththu migavum poruththamAnathu. adhai ovvoru thamiZanum mERkoLLa vENdiyadhu. idhanAl bAlargaLukku thamiZai Arambaththil kaRpathan siramam kuRaiyum. indha eZuththilEyE pOna ithaZil oru kathai eZuthi irunthAl evvaLavO nanRAi irundhirukkum.

—R. M. A. krishnan,
—P. mani,
thirunelvEli nagaram

Idhu enakku mudhalil puriyavillai. piRagu, nanRAi gavaniththa piRagu, purindhadhu. nam thamiZ eZuththukku padhilAga idhaiyE paZakkaththiRku koNduvandhAl, sila eZuththukkaLe p O d h u m. mElum, sulabamAgavum irukkum enbadhu en abippirAyam.

—V. S. sundharamUrthi,
madhurai

Lள—Nண—Rற—Zழ—Aஆ—Eஏ—Iஈ—Oஓ—Uஊ—மற்றவை ஒலி முறைப்படி.

"இது எளியது. உடனே கையாளலாம்" என்று நாம் எழுதியதை இந்தத் தமிமுன்பர்கள் நிரூபித்துவிட்டார்கள். இவற்றில் இரண்டு கடிதங்கள் டைப் அடித்தே வந்தவை.

பெரியார் விவகாரம்

மாரீசன்

சர்ச்சில் : இன்னொரு யுத்தம் தவிர்க்கமுடியாதது,வெகு விரைவில் அது வரப்போகிறதென்று சொல்வதை நான் எதிர்க்கிறேன். ருஷ்யா யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தத்தின் பயன்களை அடையவும் தன் கொள்கை,செல்வாக்கு இவற்றைப் பரப்பவுமே ருஷ்யா ஆசைப்படுகிறது. பலத்தைப் போல ருஷ்யர் போற்றுவது எதுவுமில்லை. ராணுவ பலவீனத்தை அவர்கள் மிகவும் வெறுக்கிறார்கள்.

தீர ருஷ்ய மக்களிடமும் யுத்தத்தில் என் தோழராயிருந்த தளபதி ஸ்டாலினிடமும் எனக்கு ஆழ்ந்த நன்மதிப்பும், மரியாதையும் உண்டு.

மீண்டும் முன்போல் நிகழாமல் தடுக்க வேண்டும். ஐக்கிய நாடுகளின் ஆதரவில் உடனடியாக ருஷ்யாவுடன் சகல விஷயங்களிலும் பொதுவான ஒரு சமரஸம் ஏற்படுத்திக் கொண்டுவிட வேண்டும். ஆங்கிலம் பேசும் உலகமும் அதனைச் சேர்ந்த பாகங்களும் ஆதரிக்கும் உலக வியாபகமான ஒரு ஸ்தாபனத்தின் மூலம் இந்தச் சமரசத்தை நாம் பாதுகாத்து வரவேண்டும்.

இந்த யுத்தம் வருவதற்கு வெகு காலத்துக்கு முன்பிருந்தே நான் அதைப் பற்றி எச்சரித்து வந்திருக்கிறேன்.ஆனால்என் பேச்சை யாரும் சட்டைசெய்யவில்லை.

சர்ச்சிலின் ஃபுல்ட்டன் பிரசங்கம், அதற்கு ஸ்டாலினுடைய மறுப்பு இரண்டிலுமிருந்து எடுத்தவை.

ஸ்டாலின் : கிழக்கு ஐரோப்பாவில் மட்டுமன்றிப் பாசிஸ ஆக்கிரமிப்புக்கும் ஆதிக்கத்துக்கும் உள்ளாகியிருந்த ஐரோப்பிய நாடுகளிலும் பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறது. பொதுவுடைமைச் செல்வாக்கின் வளர்ச்சி தற்செயலாக ஏற்பட்டதல்ல: சட்ட ரீதியாக வளர்ந்துள்ள சரித்திர பூர்வமான நிகழ்ச்சியாகும்.

பொதுவுடைமை பரவுவதைச் சர்ச்சில் வெறுக்கிறார். அதோடு மட்டுமல்ல. முதல் மகாயுத்தத்துக்குப் பிறகு சோவியத் ஆட்சி முறையை ருஷ்யா ஏற்றுக் கொண்டதுகூட அவருக்குப் பிடிக்கவில்லை.

இரண்டாவது உலக யுத்தம் இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. கிழக்கு ஐரோப்பாவுக்கு எதிராகப் புதியதொரு ராணுவத் தாக்குதலுக்கு முஸ்தீப்புச் செய்வதில் சர்ச்சிலும் அவர் சகாக்களும் வெற்றி அடைவது சந்தேகமே. அப்படி எதுவும் நிகழ்வது சாத்தியமல்ல. சமாதானத்தைக் காக்கப் பல்லாயிரம் எளிய மக்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

சர்ச்சில் கோஷ்டியினரை நான் இப்போதே எச்சரிக்கிறேன். 26 வருஷங்களுக்கு முன் முறியடிக்கப்பட்டதைப் போல் இன்றும் அவர்கள் முறியடிக்கப்படுவது திண்ணம்.

✲

வெளுக்கிற விஷயம்

நர்ரா

"ஓய்! கதர் ஜிப்பா போட்டிண்டு, ஒரே வெள்ளையுஞ் சொள்ளையுமா, ரொம்ப ஜோரா நிக்கிறாரே, அவர் யாருங்காணு' ஓய்?" என்று உங்கள் நண்பரிடம் கேட்கிறீர்கள். போட்டிருக்கும் சட்டை அன்னிய நாட்டுத் துணியானால், எந்தக் கடையில் வாங்கியிருப்பார் என்று விசாரிக்கிறீர்கள். எந்த வண்ணான் இதை இவ்வளவு வெளுப்பாக வெளுத்திருப்பான் என்று நீங்கள் யோசிப்பதோ அபூர்வம். துணியை அழுக்காக்குவது உங்கள் உரிமை, அதை வெளுத்துத் தருவது வண்ணான் கடமை என்று நினைக்கிறீர்கள். கூலிக்குத்தான் வெளுக்கிறான். ஆனால்,எல்லாத் துணியையும் அவன் ஒரே மாதிரி வெளுக்கிறானா? வெளுக்கத்தான் முடியுமா? துணி நயம், அழுக்கின் அளவு, தன்மை, பெறுகிற கூலி இவை முக்கியமில்லையா?

கூலி ரெம்பக் குடுத்தா' கோடித் துணியெ ரெண்டு வெள்ளாவி வச்சு வெளுத்துப்பிடலாம். பளகி இத்துப்போன துணி ரெண்டு அடியிலெ தும்பு தும்பாப் பிஞ்சு போகும். மட்டச் சாயத்திலெ அழுக்கு ரெம்ப ஏறியிருந்தா, வெள்ளாவியிலே சாயம் வெளுத்துப் போயி, அழுக்குக் கறை அப்பிடி அப்பிடியே பிசாசு மாதிரி டால் அடிக்கும்.

பேச்சின் சரளத்தை எழுத்தில் கொண்டு வருவது அற்புதமான ஒரு சாதனை. பேசுகிறபடியே எழுதுவது, தேவையற்ற வீண் முயற்சி.

மோசமான துணியெ வகெ தெரியாமெ மோசமா வெளுக்கிறப்போதா' துணி, துணிக்கி ஓடமக்காரரு, வண்ணாஞ் சலவை எல்லாரு சாயமு ஒரே பட்டப் பகலா வெளுத்து வெளிறிப் போவுது. பேஸ்ரபடியே எழுதணுமிண்ணு சொல்ற ஒரு பெரியவரு, "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மறைந்த நம்மாழ்வாரும்..." இண்ணு எழுதினாரு. பேஸ்ரப்போக்கூட ரெம்பப்பேரு யோசிச்சுத்தா' பேசுவாங்க. இந்தக் காலத்து வாசகருங்க மும்தி மாதிரி இல்லெ. அனேக வாசகருங்க சொந்தத் தறிகாரரு மட்டுமில்லே. ரொம்ப ஜோரா வெளுக்கவுந் தெரியும் அவங்களுக்கு. "நம்மாளுவாரு ஒம்பதாம் நூற்றாண்டிலே இருந்தாருண்ணு ஒனக்குத் தெரியாங்காட்டி, சும்மா கெடக்கிதியா— ஏங்கிட்டே வந்து அளக்கிதியா வேய்!" இண்ணு வெளுத்துக் கட்டிப் பிடுவாக.

ஆலெ இல்லாக் காலத்திலே இலுப்பெப் பூச் சக்கரை வித்ததெ நெனச்சிக்கிணு இண்ணெக்கி யாவாரஞ் செஞ்சாச் சரக்குவெலெப்போவுமாங்கிரே'?

பாக்கிரம்; நெனெக்கிரம்; பேஸ்ரம்; எழுதுரம்; பாடுரம். ஒண்ணுலேருந்து ஒண்ணுக்கு வளந்து போரம். எல்லாம் ஒண்ணு தாங்கிரவங்களை என்ன பண்ரது? எதுக்காகச் சொல்ல வந்தேண்ணா—ஓ! பக்கஞ் சரியாப் போச்சு! வர்ரேனுங்க!

*

பிரார்த்தனை முறை

ஜே. சி. குமரப்பா

மனிதரையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது பிரார்த்தனை. பிரார்த்தனையின் மூலம் மனிதன் கடவுளுடன் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளுகிறான். கடவுளின் இஷ்டத்தைச் செய்ய விரும்புகிறவன் சதா அவரை நினைக்க வேண்டும். மனத்திலும் நாவிலும் லட்சியங்களிலும் அவரைத் துதித்து ஜபம் செய்வதாக இருந்தாலே, "உங்கள் இருதயங்கள் பெருந் தீனியினாலும், வெறியினாலும், லௌகிகக் கவலையினாலும் ஒரு போதாகிலும் பாரமடையாதபடி உங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். இல்லையானால் அந்த நாள் திடீரென ஒரு கண்ணியைப் போல் உங்கள்மேல் வரும். எப்போதும் ஜபம் பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா: 21-34, 36) என்று ஏசுநாதர் எச்சரித்த ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடும்.

ஏசு தமது சிஷ்யர்களுக்குப் போதித்த ஜபம் மிகவும் மேன்மையானது. அதை நாம் கவனிக்க வேண்டும். இதர விஷயங்களைப் போலவே 'பரமண்டல மந்திரம்' என்று தவறாகச் சொல்லப்படும் இந்த ஜப விஷயத்திலும் சபை அதிகாரிகள் வார்த்தைகளைப் பின்பற்றி உட்கருத்தை, அதாவது அவ்வார்த்தைகளின் உயிரை இழந்துவிட்டனர். பிதாவைக் குறித்து நாம் தியானிக்கும் சமயம், எந்த எந்த விஷயங்களைக் குறித்துத் தியானம் செய்யவேண்டுமென்ற விஷயத்தின் சுருக்கமான அட்டவணையை—தமது போதனைகளின் சுருக்கமான ஒரு பட்டியலை—ஏசுநாதர் குறிப்பிட்டார். ஆரம்ப முதல் மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான், கொரிந்தியர், கொலோசேயர் என்று யோவானின் தரிசனம் வரை படித்துவிட்டு, வேதப் புத்தகத்தையே அடி முதல் இறுதி வரை படித்துவிட்டோம் என்று கருதுவது பேதைமைக்கு ஒப்பாகும். இதற்குச் சாகித்தியம் ஏற்படுத்திக் குருமார்கள் முதலில் 'பிதாவே' என்று பல்லவி ஆரம்பிக்கவும், விசுவாசிகள் பின்பாட்டுப் பாடவும் சில பெரிய சபைகளில் வழிபாட்டு முறை ஏற்பட்டிருக்கிறது!!! ஜபம் செய்யும் வகையையும் ஏசு நமக்குக் காட்டியிருக்கிறார்:

1. மனுஷர் காணும்படி ஜபம் செய்ய வேண்டாம்.
2. அறைக்குள் போய்க் கதவைப் பூட்டி மறைவில் ஜபம் செய்ய வேண்டும்.
3. வீண் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டாம்.
4. சொந்தத் தேவைகளை யாசகம் செய்ய வேண்டாம். ஏனென்றால் உங்களுக்கு இன்னின்னது தேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

ஏசுநாதர் இவ்வாறு விதித்திருந்துங்கூடச் சபைப் பிரார்த்தனைகள் வேறு வகையாகவே நடைபெறுகின்றன.

✲

சக்தி காரியாலய வெளியீடாகிய ஏசுநாதர் போதனையி லிருந்து எடுத்தது. ஸ்ரீ 'குமுதினி' மொழி பெயர்த்தது.

சரும சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்யமுடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லையெனின் அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனா வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமைவாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிருமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனாவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச் சேர்த்து நன்மையைக் கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின்மீது படிந்துள்ள அழுக்கையும், வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்திசெய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்றாய்ப் போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனாவையே உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமியையொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும், குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சணைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 27-50 TM

REXONA PROPRIETARY LIMITED

பர்னிச்சர்களுக்கு பெயர் பெற்றது

ரென் கம்பெனியே



சென்னையிலுள்ள எங்கள் வாடிக்கைக்
காரர்களில் ஒருவருடைய வீட்டின்
உட்பக்கம், சில நாட்களுக்கு முன்
எங்களால் அலங்கரிக்கப்பட்டது

ரென் பென்னட் அண்ட் கம்பெனி

(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

உங்கள் கதை

சொ. விருத்தாசலம்

இயற்கையின் பரிணும விஞேதங்களில் மிகவும் அபூர்வமான, விந்தையான பிராணி மனிதன். அவனைப் போல் பலவீனமான ஜீவராசி, அமீபாப் பூச்சி என்று சொல்ல முடியாது. அவனைப் போல், லாகவமாக உயிர் வாழ்வதுமட்டு மல்லாது, மற்றவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமையுமுள்ள பிராணி வேறென்றும் கிடையாது. வடிவப் பரிணுமப் பரீட்சைகளின் முடிவான பதில் மனிதனே என்று கூறலாம். அமீபாப் பூச்சி முதல் மனிதன் இறுதியாக ஏற்பட்டு வந்த உருவ மாறுபாடுகள், வேறுபாடுகள் எல்லாம் உயிர்வாழ வேண்டும் என்ற ஜீவத் துடிதுடிப்பின் வடிவப் பரீட்சைகள். இந்தத் துடிதுடிப்புத்தான் இயற்கைப் பரிணுமத்தின் அந்தரங்கமான பல்லவி. உயிர் வாழ்வதற்கு உயிர்க் கொலை அவசியம். உயிர் வளர்ச்சி, உயிர் வதையினுல்தான் ஏற்பட முடியும். இது இயற்கை விதி.

ஒவ்வொரு பிராணியும், தன் வம்சம் நசித்துப் போகாமல் இருப்பதற்கு எடுத்துக்கொள்ளும் சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வாழ்க்கை ஒரு போர். இதில், தோற்று நசித்த பிரயாணிகள் அனந்தம். அவைகள் சிலவற்றின் சின்னங்கள், வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டவைகளாக, தற்பொழுது பொருட்காட்சிச் சாலைகளை அலங்கரிக்கின்றன. வாழ்க்கை இருக்கும் வரை, உயிர் வாழ்தல் இருக்கும் வரை, இந்தப் போர் இருந்துகொண்டுதான் இருக்கும்.

மடிந்து நாசமாகாமல் இருக்க எடுத்துக்கொள்ளும் பிரயாசைகள்தான் நாகரிகத்தின் கரு. அமீபாப் பூச்சி முதல் மனிதன் வரை உள்ள பிராணிகளுக்கு இயற்கை பாதுகாப்புக்களை அளிக்கிறது. அவைதான் ஜீவோபாவங்களின் உருவ வேறுபாடுகள். அதுவரை, பிராணிகளின் இயக்கங்கள் இயற்கையின் தூண்டுதல்கள்தான்.

மனிதன் இயற்கையின் சிகரம். அவனிடந்தான் அறிவு என்ற ஒரு புது விதமான பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அறிவின் வளர்ச்சி—அது ஒரு தனிப் பெரும் பாரதம். அமீபாவிலிருந்து மனிதன் வரும் வரை கழிந்த காலம் கோடிக் கணக்கான வருஷங்கள். செய்த பரீட்சைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பலியாகத்தான் கருத வேண்டும். அவற்றின் பிறகு மனிதன் தோன்றுகிறுன். அறிவு விளக்கு மனிதனை எடுத்துச் சென்ற வழிதான் நாகரிகம். சரித்திரம், மனித அறிவின் பழைய பாதைகளை, திசை மாறி அலைந்த வழிகளை, ஒரு சிறிது தூரம்வரை நமக்குக் காண்பிக்கிறது. சரித்திரத்துக்கு அகப்

"உயிர் வாழ்வதற்கு உயிர்க் கொலை அவசியம். உயிர் வளர்ச்சி, உயிர் வதையினுல் தான் ஏற்பட முடியும். இது இயற்கை விதி."—இது மொழிபெயர்ப் பல்ல, தமிழாக்க மல்ல, மாரீச மல்ல, தழுவலு மல்ல. —தெளிவான சிந்தனையின் அழுத்தமான வெளிப்பாட்டை இங்கே காண்கிறோம்.

படாமல் மறைந்து போன பாதைகளின் எல்லையை அடைந்து வாழ்பவர்கள் சங்கு மணிகளையும், கோரைப் புல்லையும் அணிந்து திரியும் காட்டுமிராண்டிகள். மிருகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மனிதன் வாழ்க்கைப் போரில் தோற்று மடிந்து நாசமாவதற்கு ஏற்ற புற உறுப்புக்களைப் பெற்றிருக்கிருன் என்பதில் ஐயமில்லை. நகமும், சருமமும், பல்லும் பாதுகாப்பின் படைக்கலங்கள். மனிதனுக்குத்தான் அவை மிகவும் பலவீனமானவை. ஆனல், இவற்றுக்கு எல்லாம் பதிலாக அறிவு இருக்கிறது. அதுதான் இவற்றின் வேலைகளைச் செய்கின்றது. மனித வாழ்க்கையின் சரித்திரம், தவறுகள் என்றபடிக் கட்டின் வழியாகவே நடந்து வருகிறது.

மனிதன், தன் சந்ததி நசித்துப் போகாமல் இருப்பதற்கு, கூட்டத்தில் நம்பிக்கை வைத்தான். ஆதி மனிதனின் சமூகக் கட்டுப்பாடு, கூட்டமாக எதிரிகளைக் கொல்வதற்காகவும், வயிற்றுக்கு வேண்டிய உணவு தேடுவதற்காகவும், வேட்டை யாடுவதற்காகவுந்தான் இருந்து வந்தது. அவிழ்த்து உதறின வெறும் நெல்லிக்காய் மூட்டைபோல், ஒரு பிணிப்பும் இன்றித் தான் தோன்றித் தனிக் கூட்டமாக இருப்பதன் பலவீனத்தை மனிதன் அறிய எத்தனை காலம் சென்றதோ! ஆனல், எதிரிகளுக்கு நிரந்தரத் தோல்வியும், வயிற்றுக்கு ஏராளமாக உணவும் கொடுக்கக்கூடிய ஒருவன் வந்து, கூட்டத்தைத் தன் இஷ்டப்படி நடத்தி வைப்பதில் அதிசயமில்லை. இவனுக்கு இருக்கும் திறமைகளை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக் கூறப்படுவதும் இயற்கை. அவை, எதிரிகளுக்குப் பயத்தை மூட்டி, அவனுடைய சொந்த மக்களிடம் மரியாதையைப் பெற்றுத் தந்தது. இம்மாதிரித் தலைவனைப் பெற்ற மனித வர்க்கம், உணவையே வாழ்க்கையின் முதலும் முடிவுமாகக் கருதி, மிருகப் பிராயத்துக்கு ஒரு படிக்குமேல் இருந்து கொண்டு எத்தனை காலத்தைக் கழித்ததோ!

எந்த வேலையிலும் சிரமம் குறைய வேண்டும் என்பதே உயிர் வாழும் கவலை நின்றவுடன் ஏற்படும் ஆசை. கூட்டத்தின் முதல் மனிதன், தலைவன், அவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையின் காரணமாக மற்றவர்களும் அதைக் காப்பியடிக்க முயன்றிருக்கலாம். பலமுள்ளவன் துணையைப் பலமில்லாதவன் நாடுவது இயற்கை. அதன் விளைவு அடிமைத் தொழில்.

அரசன் தெய்வமான விதம்—அது வேறு தனிப் பெருங் காதை. வீரனுக்கு, அவன் உயிருடன் இருக்கும் வரை, அரச மரியாதை நடந்தது. அவன் இறந்ததும், அவனது நினைவு மறையாமல் இருப்பதற்கு ஏற்பட்ட சிலை வடிவம், சமயம் என்ற ஒரு பெருங் கிளை வாழ்வை மனித சமூகத்தில் ஏற்படுத்தியது. வீரனது வம்சமே வீரனை முதலாவதாக வழிபடும் உரிமையைப் பெறுவது இயற்கை யாதலால், மனித சமூகத்தின் நன்மையைப் பாதுகாக்கும் தலைவனே பூசாரியாகவும் இருந்தான். பழைய வீர வழிபாட்டின் பூசை, வீரன் இந்த உலகத்தி லிருக்கும்பொழுது செய்து காட்டின வீரச் செயல்களுடன், அவனுடைய பெருமையை அதிகப்படுத்த முயலும்

பூசாரியின் கற்பனை சேர்ந்த பாட்டும், வேட்டையும், யுத்தம் நடத்தும் பாவனையாக நடக்கும் களியாட்டமுமாம். ஆதியில் இருந்த மனித வர்க்கத்தின் சமயம் வெறும் வீர வழிபாடுதான். காட்டு மிராண்டியாக, ஆங்காங்குக் காளான்கள் மாதிரி, நாகரிகம் என்ற நமது எண்ணங்கள் செல்லாத இடங்களில் வாழும் மனித வர்க்கத்தின் தெய்வ வழிபாட்டு முறைகளும், நமது சுடலை மாடன் முதலிய பேய்த் தெய்வங்களை வழிபடு முறைகளும் இம்மாதிரி யானவையே. பேய்க்கண மென்றால், இம்மாதிரியான காட்டுமிராண்டிகள் என்றே தமிழில் அர்த்தம் இருக்கிறது. அவர்கள், நரமாமிச பட்சணிகளாக, நாகரிகத்தின் ஒட்டுக் குடிகளாக வாழ்க்கை நடத்தி வந்தவர்கள். அவர்களும் அறிவு விளக்கை வைத்துக் கொண்டு, மனிதவர்க்கம் செய்து வரும் நாகரிக யாத்திரையில் பின் தங்கியவர்கள் போலும்!

இப்படி ஆரம்பித்த சமயத்தினை நட்சத்திரங்கள் அழைத்தன. புழுதியை அணைந்து விளையாடிய குழந்தைச் சமயம் வானத்தை நோக்கியது. பூசாரிகள் சூரியனிலும் சந்திரனிலும் தங்கள் தலைவர்களைக் கண்டார்கள். சூரியனும் சந்திரனும் தெய்வங்களானார்கள் — அவர்களுக்குக் குலத்தலைவர்களானார்கள்.

உதாரணமாக, முருகனைப் பற்றிய பின்வரும் வெண்பா நான் கூற வந்ததை விளக்குகிறது:

நீல நெடுங்கொண்மூ நெற்றி
 நிமல் நாறிக்
காலை இருள்சீக்கும்
 காய்கதிர்போல்—சோலை
மணித்தோகை மேல்தோன்றி
 மாக்கடற்சூர் வென்றோன்
அணிச்சே வடி எம் அரண்.

சமயம் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண் டிருந்தாலும், அதன்மேல் படிந்த புழுதி அகலவில்லை. அறிவு வளர்ந்துகொண் டிருக்கும் மனித வர்க்கம், எத்தனை நாள் சக்கையைப் பிடித்துக் கொண்டிருக்க முடியும்? புதிய உண்மைகள் எத்தனையோ தென்பட்டன. ஆனால், பழைய வடிவங்களைத் தாங்கும் புதிய கற்பனைகளாகத்தான் இருக்க முடிந்தது. உண்மைகள் அப்படியே அப்பட்டமாக இருந்திருந்தால், அவற்றுக்கும் மனித வர்க்கத்துக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்க முடியாது. அது உண்மைகளிடத்தில் இருக்கும் கெட்ட குணம். அவை தனிமனிதனின் வாழ்க்கை விசாரமாகக் கண்டு பிடிக்கப்பட்டவை. உண்மையைக் காண முயலும் தனிமனிதன் சமூகத்தின் விதிவிலக்கு; வாழ்க்கையின் பலி பீடம். உண்மை, மண்ணுலகத்தின் புழுதி படியாது இருக்கும் வரை அது மனித வர்க்கத்தின் உயிர் வாழ்வுக்குத் தடை. சமூகம் மனிதக் கூட்டத்தின் பிணிப்பு. அதன் பாதுகாப்புக்கு ஏற்பட்ட வீர மரியாதை அரசியலாகி, மனிதரின் உடம்பைக் கட்டுப்படுத்தியது. அதன் வீரர் வழிபாடு சமயமாகி, மனிதனின் சித்தத்தைக் கட்டுப்படுத்தியது. ராஜ பக்தி என்ற பித்தமும், சமய வெறி என்ற போதையும் இதன் விளைவுகள்.

2

உயிர் வாழ்தல், வம்ச விருத்தி இவை இரண்டும் பிராணிகளின் நிரந்தரமான முயற்சி, தனி மனிதன் தன் வாழ்வுநிச்சயத்துக்காகக் கூட்டத்தில், சமூகத்தில், மறைந்தான்; கூட்டத்தின் பாது

காப்புக்குத் தனி மனிதனின் பலி அவசியமாயிற்று. ஆதலால், வீரனுக்கு—அவன் இந்த வாழ்க்கையை இழப்பதற்குக் கைம்மாருக—மோட்சம் என்ற ஒரு புதிய கற்பனை உலகம் சிருஷ்டிக்கப்பட்டு, அதில் இடம் அளிக்கப்பட்டது.

ஒரு சமூகத்தின் தெய்வங்களும், மோட்ச லோகமும் அதன் தேவைக்குத் தகுந்தாற்போல் நிர்மாணிக்கப் பட்டவை. போரே நடைமுறை வாழ்க்கையாக இருக்கும் பொழுது, தெய்வங்கள் வீரனுகவும், சுடலையாகவும், ஜூபிட்டராகவும், ஜெஹோவா, பால்களாகவுந்தான் இருக்க முடியும். நாடோடியாகச் சண்டை பிடித்து வாழ்ந்து மடிந்த மனித வர்க்கம், ஓரிடத்தில் குடியேறி வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததிலிருந்து, சமூகத்தின் இரட்டைக்காப்பாளிகளான சமயத்துக்கும் அரசியலுக்கும் சக்தி அதிகரித்தது. அதனுடன் கடமையும் அதிகரித்தது. சௌகரியத்துக்காக, அரசியலில் இருந்து சமயம் பிரித்திருக்கலாம்; அல்லது வேறு விதமாகவும் பிரிந்திருக்கலாம். ஓரிடத்தில் குடியேறி வாழ்க்கைச் சௌகரியங்களைப் பெற்ற தலைவனின் வம்சம் பலவீனமாக இருக்கும் பொழுது அதிகாரத்துக்கு ஆசைப்பட்ட புதுத் தலைவன் கிளம்பிக் கூட்டத்தின் தலைமையைக் கைப்பற்றியிருக்கலாம். பழைய வீர வம்சத்தினரோ எனின் தம் குலத்தவனின் பூசாரித் தொழிலிலேயே தங்கள் பெருமையை நிலைகாட்டிக் கொள்ள முயன்றிருக்கலாம். ஆனல், இருவரிடையிலும் மனத்தாங்கல் இருந்துகொண்டுதான் இருக்கும். தன் சக்தியைப் பலப்படுத்தப் பூசாரியின் தயவைப் புதிய தலைவன் எதிர்பார்க்க வேண்டியிருக்கும். அவனும் அந்தச் சமூகத்தின் விளைவுதானே. பூசாரியின் கற்பனையில் நம்பிக்கை யில்லாமல் இருந்தாலும், அவன் தயவு அவசியமாக இருக்கும் பொழுது அவன் நம்பியிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனல், காலக்கிரமத்தில் உலாவுந் தெய்வங்களான அரசர்களின் செல்வாக்கும் சக்தியும், அதிகமானதனல், பூசாரி அடங்கிவிடவேண்டியதாயிற்று. அதிகாரத்தில் ருசி கண்டவர்கள் அதை விட்டுவிட மனமொப்புவார்களா? தங்கள் சக்தியை மறைமுகமாகப் பெருக்கினர்கள். சமயம் வரும் பொழுது தங்கள் கைப் பகடையாக அரசர்களை உருட்டினர்கள் என்று கூறினல் மிகையாகாது.

உதாரணமாக, ஐரோப்பாவில் கத்தோலிக்க மதத்தலைவர் போப், ஹோலி ரோமன் சாம்ராஜ்ய அரசர்களுடன் இட்டுக்கொண்டிருந்த பெரும் போர் இதை ஸ்பஷ்டமாக விளக்கும்.

3

உண்மையைக் கண்டு தெளிபவர்கள் சமூகத்தின் விதி விலக்குகள். அவர்களால், மனித வர்க்கத்தின் உயிர் வாழும் பிரச்னையைப் பொறுத்த வரை, சமூகத்துக்கு ஒரு சிறிதாவது பிரயோஜனம் கிடையாது. நற்காலமாக இப்படிப்பட்டவர்கள் நமது தேசத்தில் சமூகத்தை விட்டுத் தனியாகக் காட்டில் சென்று வசித்தார்களாம். அவர்களுடைய முயற்சியின் பயன்கள் எல்லாம் அவர்களைப் போன்றவர்களுக்கும், அவற்றை அறிய ஆசைப்பட்டவர்களுக்கும் பிரயோஜனத்தை அளிப்பதற்கு

ஏற்றபடி சமூகத்தை விட்டு விலகியே இருக்கின்றன.

மேலேநாட்டிலோ வெனில், அரசாங்கம் உடலைக் கட்டுவதை விட, சமயம் சித்தத்தைப் பலமாக இறுக்கிக் கட்டி விட்டது. அதனால், புதிய உண்மைகள் பழைய தவறுகளுக்குப் புறம்பாக இருந்தால், அவை தவறுகள்தான். நமது நாட்டைவிட மேலேநாடுகளில் அறிவுத் தேட்டம் மிகவும் அபாயகரமானதாகவே, ரகசிய இன்பமாகவே, வளர்க்கப்பட்டு வந்தது.

மனிதன் கூட்டம் கூட்டமாக வாழ ஆரம்பித்தவுடன், அதனுடன் எழுந்த பிரச்னை ஒன்றின் முடிவு இன்னும் வந்தபாடில்லை. தனிமையின் பலவீனத்தை நினைத்துக் கூட்டத்தை ஸ்தாபித்த மனிதனுக்கு, அதன் பலத்தால்தான் உயிர் வாழ முடிந்தது. ஆனால், உயிருக்குப் பணயமாகத் தன் சுதந்தரத்தைக் கொடுத்தான். அதாவது, கூட்டத்தின் நன்மைக்காகத் தனி மனிதனின் உயிரைப் பலிகொடுப்பதில் கெடுதல் ஒன்றும் இல்லை என்ற நினைப்பும், அதன் பிறகு, அது அவசியம் என்ற நம்பிக்கையும் கூட ஆரம்பித்தன. இதன் விளைவுதான் அரசியல் தத்துவங்கள் எல்லாம். பிளேட்டோ முதல் மேலேநாட்டு அரசியல் தத்துவ சாஸ்திரிகள் எல்லோரும் கனவு கண்ட கற்பனைச் சமுதாயங்கள் நடைமுறை உலகத்துக்கு ஒவ்வாது போனதன் காரணம், அவை மனிதனுடைய பலவீனத்தை ஒதுக்க முயன்றது தான். சமூகத்தின் அமைப்பு எவ்விதமானதாக இருந்தாலும், இன்று ஏராளமாக விவாதிக்கப்படும் அபேதவாதம், பொதுவுடைமை, தனி மனிதத்துவம், சர்வாதிகாரத்துவம், எல்லாம் இந்தப் பிரச்னைக்கு முடிவான பதிலை அளியா. மனிதன் மனிதனாக இருக்கும் வரை, சமூகமும் தனிமனிதனும் இரண்டு வித்தியாசமான மூலைக் கோடியில் நின்று கொண்டுதான் விவாதித்துக்கொண் டிருப்பார்கள்.

காரணம், மனிதனுக்கு உயிர் வாழ்தல் அவசியமான பிரச்னைதான். ஆனால் வாழ்க்கை வெறும் உயிர்வாழ்தலுடன் முடிவடைந்துவிடவில்லை. மனிதன் உடலைக் கட்டுப் படுத்தினாலும், ஒரு விதமாகப் பொறுத்துக் கொள்வான்; அவனுடைய மனத்தைக் கட்டுப் படுத்த முயல்வது மிகவும் ஆபத்தான காரியம். மேலே நாடுகள் முன்பு மத சம்பந்தமான விஷயங்களில் சித்தத்தைக் கட்டுப்படுத்த முயன்று தோல்வியுற்றன. தற்பொழுது இருந்து வரும் சுவாரஸ்யமான அரசியல் தத்துவங்கள் எல்லாம் அதைப் போலவே சித்தத்தைக் கட்டுப் படுத்த முயன்று தோல்வியுறும்.

சமூகம், ஒரே நாளில் ஏற்பட்ட சம்பிரதாயம் அல்ல. மனித வர்க்கத்தின் அனுபவத்தின் விளைவு. அனுபவம் என்பது உயிர் வாழ்தல் என்பதன் பல்லவியாகையால், சித்தத்தைக் கட்டுப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமூகத்தின் பாதுகாப்புகளில் அது ஒன்று. சமூக விழிப்பு என்பது விதி விலக்கான செய்தி. அனுபவங்கள் காலத்துக்குப் பிற்பட்டனவாகப் பொக்காகி, பொடிப் பொடியாக உதிரும் வரை, அதாவது, பழைய பாதுகாப்பானது தானாக நசிக்கும் வரை, சமூகம் ஒருமிக்கக் கவலை கொள்வது கிடையாது. அந்தச் சமயம் ஏற்படும் வரை புதிய கொள்கைகளை மனத்தினு

லும் நினைப்பவனைச் சமூகம் நசுக்க முயல்கிறது. அனுபவங்கள் பாழாகி, அவை புதிய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பது லேசான காரியமல்ல. முடிவும் முதலும் சந்திக்கும் இடத்துக்குத்தான் புரட்சி என்று பெயர். அது வெறும் இயற்கைத் தத்துவத்தின் விதி. மரணச் சங்கடமும், பிரசவ வேதனையும்தான் ஜீவ தத்துவத்தின் அந்தரங்க விதி. மனிதன் நிருமித்த சமுதாயத்துக்கும், அவன் சித்தத்தை அலைக்கும் எண்ணங்களுக்கும் அதே விதிதான்.

4

சமயத்தைப் பொறுத்தவரை, அது ஆதியில் உயிருள்ள தலைவனுக்கு மரியாதையாக ஆரம்பித்துப் பிறகு, அரசாங்கத்துக்கும், சமூகத்துக்கும் மறைமுகமான போலீஸ்காரனாகச் சேவை செய்ய முயன்றது. வீரனுக்குக் கைம்மாருக முதலில் மோட்சத்தை அளித்த சமயம், பகைவர்களுக்கு நரகத்தைக் கொடுத்திருக்கும். சமூகமானது நாடோடியாகத் திரியும் வழக்கத்தை விட்டு ஓரிடத்தில் ஸ்திரமாக இருந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததிலிருந்து, சமூகத்தின் சௌகரியத்திற்குக் குந்தகம் செய்ய முயல்கிறவர்களுக்கு நரகமும், மற்றவர்களுக்கு மோட்சமும் அளித்தது. சமயமானது இத்துடன் மட்டும் சேவையை நிறுத்தியிருந்தால் ஒரு தொந்தரவும் இருந்திருக்காது. மனித வர்க்கத்தில் அவர்களுக்கு விதிவிலக்காக இருக்கும் அறிவுத் தெளிவு பெற்றவர்கள், அவர்களும் தாங்கள் கண்ட உண்மைகளுக்கும் பழைய கற்பனைகளைக் கொண்டதனால் ஏற்பட்ட கலக்கம், அவர்களுடைய கொள்கைகளையும் சமூகப் பாதுகாப்புக்காக இருந்துவந்த சமயத்தினுள் புகுத்திவிட்டது. இதனால், சமயம், சமூகத்தின் பாதுகாப்பாக மட்டிலும் இருக்காமல். அதன் பெரும் எதிரியாகவும் இருக்க வேண்டிய தாயிற்று.

அறிவுத் தெளிவில் ஏற்பட்ட உண்மைகளும், கண்டுபிடித்தவர்களின் மனப்போக்குக்கு ஒத்தவாறு, பற்பல விதமாக, லேசில் தவருக அர்த்தப் படுத்திக்கொள்ளும்படியாக இருந்ததனால், சமூக, சமயம் எதைத்தான் முடிவானது என்று தீர்மானிப்பது இயலாததாயிற்று. அதன் விளைவுகள்தான் பற்பல சமயங்கள் என்ற வித்தியாசங்கள். ஆனால், அவையாவும், சமூகப் பாதுகாப்பு என்ற உரிமையை விடாது பிடித்துக்கொண்டு இருந்தன. மேல் நாட்டிலும் ஏற்பட்ட சரித்திர காலத்திற்குட்பட்ட சமயங்கள் எல்லாம் இதன் விளைவுகளே. மற்றவை வீர வழிபாட்டைக் கருவாகக் கொண்டு புதிய எண்ணங்களைத் தாங்கி நின்றவை.

சமயத்துக்கும், அறிவுத் தெளிவுக்கும் ஏற்பட்ட தொடர்பு பௌதிக உண்மைகளைக் கண்டு மேலை நாடுகளில் பயப்பட ஆரம்பித்தது. பௌதிக உண்மைகளின் பலிபீடங்களாகவே, மேலைநாட்டு விஞ்ஞானிகள் சென்ற நூற்றுண்டுவரை இருந்துவந்தார்கள். காரணம், பழைய பயந்தான். இந்த நூற்றுண்டு பயத்தைத் தெளிவித்தது என்று கூறவேண்டும். காரணம் சமயம் சமூகத்தின் போலீஸ்காரனாக இருக்க வேண்டிய அவசியம் குறைந்து, அரசியலே அந்த வேலையைச் சரிவர நடத்த முடியும் என்ற கொள்கை பலத்ததுதான். இப்பொழுது, சமயம் சித்தத்தைக்

கட்டுவதற்குப் பதிலாக அரசியலே அதைக் கட்டுப்படுத்த முயல்கின்றது. இருந்துவரும் அமைப்புக்கு எந்த எந்த அரசியல் தத்துவங்கள் புறம்பானவையோ அல்லது புதியவையோ, அவை தனிமனிதர்களை அரசியல் நரகத்தில் தள்ளுகின்றன. அடிப்படையான காரணம், ஜீவனுசமாகி, வாழ்க்கை தடைப்படும் என்ற வெறும் மிருகப் பயந்தான்.

இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியும் ஏறக்குறைய இதே மாதிரிதான். என்ருலும், சமூக சமயங்களுக்கும், அவற்றிலிருந்து உண்மைகளை விடுவிக்க முயலும் பெரியார்களின் கோட்பாடுகளுக்கும் ஒரு சமரசம் ஏற்பட்டது. ஹிந்து மதம் என்று ஒன்று இல்லையாயினும், அது எல்லா வித்தியாசங்களையும் தன்னுள் அடக்கும் சமரசமுள்ள ஒரு சமய சமஷ்டியாயிற்று. வெறும் காட்டுமிராண்டித் தனமாகப் பொங்கலிட்டுப் பூசையிடும் தெய்வங்கள் முதல், உபநிஷத்துக்களின் லட்சியங்கள் வரை, எல்லாம் அதில் இடம் பெற்றன. இந்தச் சமயச் சமஷ்டியை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பெற்ருேம் என்பதை இதிகாச, புராண, இலக்கிய, சரித்திரங்களில் உள்ள எதிரொலிகளிலிருந்து காணலாம். இம் மாதிரியான ஓர் உயர்ந்த கோட்பாடே ஹிந்து நாகரிகத்தின் உயிர்த் தத்துவத்துக்குச் சாவு மணியோ என்று சந்தேகிக்கும் படியாக இருக்கிறது.

மனித வளர்ச்சியின் பாதை கரடு முரடானது. துன்பமும் கஷ்டமும் சூழ்ந்த இடத்தில்தான் மனிதன் தனது அரிய சக்தியைக் காண்பிக்கிருன் என்று கீத் என்பவர் சொல்லுவது வெறும் மிருக உலகத்தின் விதியல்ல. நாகரிகமும், லட்சியங்களும் அதே பாதையில்தான் செல்லுகின்றன. எந்தச் சமயத்தில் பிரச்னை என்ற ஒன்று இல்லாமல் போய்விடுகிறதோ, அந்த நிமிஷத்திலிருந்தே நாகரிகத்தின் ஜீவத் துடிதுடிப்பு நின்று போகிறது. பழைய லட்சியங்கள் அவற்றை அடைந்த மக்களுக்கே நாசகாரியாக இருந்து, அவர்களை அமுக்கிக் கொன்றுவிடுகின்றன என்று கூறவேண்டும்.

மனிதன், சண்டையில், துன்பத்தில், செழித்து ஓங்கும் ஜீவராசி. நாகரிகத்தினுடைய அழிவின் உற்பாதம் அமைதி. சண்டை என்பது வெட்டும் குத்துமாக இருக்கவேண்டும் என்பதல்ல. மானத உலகத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். இரண்டும் நின்ருல், மனித வம்சம் பூண்டு அற்றுப் போவதில் ஐயமில்லை.

5

மனிதன் ஓர் அபூர்வப் பிராணி. அவன், போரிலே வளர்ந்து போரிலே வாழ்ந்து, போரிலே ஓங்குகின்றவன். மதுக் குடித்த குரங்குகளைப்போல் பேய்க் கூட்டங்களாக, உலகத்தில் முதல் முதல் நரகத்தை ஸ்தாபித்த மனித வர்க்கம், இவ்வளவு தூரம் உயர்ந்து வந்ததே ஆச்சரியம். காரணம் போர்தான். மனிதன், காட்டிலே கஷ்டத்தை எதிர்த்துப் போராடி வளரும் முட்செடியைப் போன்றவன். நாகரிகத்தின் அடிப்படை போர்—அதாவது இயக்கம்.

மனித வர்க்கம் உண்மையில் ஓங்குகிறது என்கிருர்கள். மனி

தன் உண்மையை நாடலாம். ஆனல், அவனுடைய வளர்ச்சிக்கு வெறும் பிரமைகளே போதும். மனித வர்க்கம் முன்னேறிச் செல்வதற்காக நடந்த இயக்கங்களின் ஆதிப் பிரச்னைகள் எல்லாம் வெறும் பிரமைகள் தான்.

மனிதன் ஓர் அபூர்வப் பிராணி. கால நதியில் அவன் வாழ்வின் யாத்திரை வெகு அற்புதமானது. மனித வர்க்கம் இந்த நாகரிகத்தினுல் நசித்துப் போகும் என்று எத்தனையோ அறிஞர்கள் வலிய வந்து சாவு மணி யடிக்கிருர்கள். பிரமைகளும், அசட்டுத் தனங்களும் இருக்கும்வரை அந்தக் கவலை உலகுக்கு ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை.

மகா விஷ்ணு விஸ்வரூபம் எடுத்து, வானத்தைத் தொட்டது பழைய கதை. அதன் உண்மையைப் பற்றி இங்கு ஆராய்ச்சியில்லை. இன்று, மனிதன்தான் வானத்தைத் தன் லட்சியங்களால் அளக்கிருன். அவன் கால்கள் புழுதி படிந்திருந்தாலும் பூமியில் நன்ருக ஊன்றப்பட்டிருக்கின்றன. அவன் காலைத் தடுமாருமல் நிலைபெற வைத்திருக்கிறவரையில் மனித வர்க்கம் நசித்துப் போகாது. வானத்து லட்சியங்கள் மனிதனைப் பூமியில் தாங்கவில்லை. உயிர் வாழ்தல் என்ற பாதந்தான் அவனை நிறுத்தி வைத்திருக்கிறது. பிரமை என்ற புழுதி படிந்திருந்தால் என்ன? உண்மை மங்கினுலும் வாழ்க்கை நின்று விடாது.

✻

மேதைப் பித்தன்

பங்குனி மாதச் 'சக்தி' யில் (இதுவா கலை? பக்கம் 73) பிக்காஸோவின் சித்திரங்களைப் பற்றி ஒரு கட்டுரை வெளியாகி யிருந்தது. அந்தப் பிக்காஸோவின் சித்திரங்களைப் பற்றிய ஒரு ரசமான தகவல் கிழே தரப் பெற்றிருக்கிறது:

லண்டன் காட்சிச் சாலையில் வைக்கப்பட் டிருந்தபோது சர்ச்சைக்குக் காரணமாகவிருந்த பிக்காஸோவின் சித்திரங்களில் ஒன்றை ஒருவர் நகல் செய்தார். நகலையும் அசலையும் பாரிஸில் பக்கம் பக்கமாய்க் காட்சிக்கு வைத்திருந்தார்கள். நகலைப் பார்த்தவர்க ளெல்லாரும், கலைக் கண் கொண்டு பார்க்கையில், அசலைவிட நகல் சிறந்ததா யிருந்தது என்று கூறி வியந்தார்கள்.

நகல் சித்திரத்தை வரைந்தவர் சித்தப் பிரமையுள்ளவர்! இப்போது, மேதைக்கும் பைத்தியத்துக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைப் பற்றிப் பைத்தியக்காரர் ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஆராய்ச்சி செய்யப் போகிருர்களாம்.

—சண்டே ஸ்டாண்டர்டு

அல்லாவை நாடுங்கள்

மதுபானம், சூது இவை மூலம் சைத்தான் உங்களிடையே கோபத்தையும் பகையையும் வளர்க்கிருன்; அல்லாவை வழி படுவதிலிருந்தும் அவன் திரு நாமத்தை நினைப்பதிலிருந்தும் உங்களைத் தடுக்கிருன். ஆகவே, நீங்கள் அந்தக் கொடிய பொருள்களை விலக்கி, அல்லாவின் அருளை நாடுவீர்களாக.

—தாருல் இஸ்லாம் (மாயிதா 5: 100)

கும்பகோணம்

டி. எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்
சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனாதி, அரைக்கீரைவிதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

மதருஸ் ஸிட்டி ஏஜண்ட் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதருஸ்

கோயமுத்தூருக்கு சோல் ஏஜண்ட் :
B. பாலபட்டாபி செட்டியார்
246, வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

சோனல்

படை, சொறி, சிரங்கு, முகப்பரு, சேற்றுப் புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு

க்யூரோசால்

இருமல், காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

டிஸ்டிரிபியூடர்கள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்,
மருந்து ஷாப் : : மதுரை

சென்னை நகர் ஏஜண்டுகள் :
A. S. நாயகர் & கோ.,
2, சுப்பிரமணியம் சந்து, ராட்டன் பஜார், சென்னை

ஆந்திரா & நிஜாம் சமஸ்தான ஏஜண்டுகள் :
காரிஸன் காமர்ஸ்,
கவர்னர்ஸ்பேட், பெஜவாடா

பவானி பிரசுரம், ராயவரம்

வாண்டா வாஸிலெவ்ஸ்கா எழுதிய **வான வில்** ருஷ்ய நாவல் ரூ: 5-0	வ. ரா., எழுதிய **சுந்தரி** நாவல் ரூ: 5-0
கொத்தமங்கலம் சுப்பு எழுதிய **மஞ்சி விரட்டு** கதைத் தொகுப்பு ரூ: 3-8	'குகப்ரியை' எழுதிய **சஞ்சீவி** கதைத் தொகுப்பு ரூ: 3-4
'லக்ஷ்மி' எழுதிய **பவானி** நாவல் ரூ: 2-8	துர்கனேவ் எழுதிய **ஜெயகாதல் கீதம்** கதை அணா எட்டு

பவானி பிரசுரம், ராயவரம்



அடுத்த ராஷ்டிரபதி

"நாமிருக்கும் நாடுநம தென்ப தறிந்தோம் — இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம்"



" யோசனை . . .

" உறுதி மொழிகளைக் காப்பாற்றுவோம்.
வெறுங் கையோடு திரும்பமாட்டோம்." — கிரிப்ஸ்

சிம்லாக்





"இந்தியாவுக்குச் சுதந்தர மளிப்போம்.
அவசியமானால், அதைத் திணிப்போம்." — கிரிப்ஸ்

காட்சிகள்

...எப்படி?"



ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் (கல்வி)

ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
(விவசாயம், அபிவிருத்தி...)

பிரதமர் ஸ்ரீ டி. பிரகாசம்
(நிர்வாகம், போலீஸ், உணவு, நிதி)

சென்னை மாகாண ஆள்வார் சபையினர்

ஸ்ரீ வேமுல கூர்மையா
(விளம்பரம்...)

ஸ்ரீ டேனியல் தாமஸ்
(ஸ்தல ஸ்தாபனம்)



ஸ்ரீ கே. ஆர். கரந்த்
(நிலவரி)

ஸ்ரீமதி ருக்மிணி லட்சுமிபதி
(சுகாதாரம், வைத்தியம்)



ஸ்ரீ எம். பக்தவத்சலம்
(நீர்ப்பாசனம், ரஸ்தா)

ஸ்ரீ கே. பாஷ்யம்
(சட்டம், கோர்ட், சிறை)

ஸ்ரீகே. கோட்டி ரெட்டி
(ஹிந்து அறநிலையம், வருமானம்)

ஸ்ரீ வி. வி. கிரி
(தொழில்...)





"என்ன சொன்னாய்ய்ய்!... ஹ்ம்ம்ம்ம்!!!"

பல இடங்களிலிருந்து, தலைவர்களைப் பார்க்கச் சிம்லா வந்த சாரணர்களைப் பண்டித ஜவஹர் பார்வையிட்டார்

லட்சுமிகள் சங்கம்

சென்னை அகில இந்திய லட்சுமிகள் மகா நாட்டார், வீர லட்சுமிக்கும், ஆளும் லட்சுமிக்கும் வரவேற்பளித்தார்கள். உடனிருப்பவர் ரட்சகலட்சுமி



"என்னையும் மிஞ்சி விட்டீர்களே . . . ஹிஹிஹி!"

ஸ்ரீமான் ஜின்னாவை ஜனாப் ஜவஹர் சிம்லாவில் சந்தித்தார்

லட்சுமி - நாராயணர்கள் சங்கமம்

"ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று"



ஸ்ரீ விஜயலட்சுமி பண்டிட் மகள் ஸ்ரீ சந்திரலேகா அமெரிக்காவில் பத்திரிகைப் படிப்பு முடிந்து,

இந்தியா வந்துள்ளார். ஸ்ரீமதி பானர்ஜியுடன் சிம்லாவில் காட்சி அளிக்கிறார்

"குடையைப் பிடுங்க மாட்டார்கள் ... சும்மா வா!"

"வண்டி வர்ரது தெரியலே! ஓரம் போம்மா!!"



தற்காலக் கட்டிடங்கள்
கைத்தொழில்
விவசாயம்
போக்குவரவு வசதிகள்
கல்வி
NATIONAL HIGH SCHOOL
சுகாதாரம்
HOSPITAL
குடியிருப்பு வசதி
அநேகமாய் இந்தியமுன்னேற்றத்திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் சிமென்ட் கான்கிரீட் அவசியமாயிருக்கிறது
கவர்மென்ட் கட்டுபாடு. சிமென்ட் விநியோகம் சர்க்கார் கட்டுபாடிருந்தபோதிலும், இப்பொழுது சிப்பேர் வேலைகளுக்கும் புதுக்கட்டிடங்கள் கட்டுவதற்கும் சிமென்ட் வாங்குவதற்கு அனுமதி எவ்வித கஷ்டமும் இல்லாமல் கிடைக்கிறது.
தி ஸிமென்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.
CM. 100

சக்தி • மாத வெளியீடு

தனிப்பிரதி 'தபால்'	0 8	ஆறு மாதம்	3 8
ஒரு வருஷம்	6 0	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0 10	ஆறு மாதம்	4 4
ஒரு வருஷம்	8 0	2 வருஷம்	15 0

SHAKTI KARYALAYAM - ROYAPETTAH, MADRAS

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

காந்தி வழி

பதிப்பாசிரியர்:

பொ. திருகூடசுந்தரம்

காந்தியடிகளின் பிரசங்கங்கள், கட்டுரைகள், அறிக்கைகள் தமிழில் கைக் காகிதத்தில் சுமார் 100-பக்கங்களில் வருடத்தில் 12-புத்தகங்களாக வெளிவரும்.

முதல் புத்தகம் "எதிர்கால வழிகாட்டி" ஜூன் மாதம் இரண்டாவது வாரம் வெளிவரும்.

விலை ரூபாய் ஒன்று
தபால் செலவுடன் ரூ. 1-4

12 புத்தகங்களுக்கு தபால் செலவுடன் முன் பணம் ரூ. 12

இலக்கியப் பண்ணை

ராயப்பேட்டை :: சென்னை

குடையைப் பிடுங்கு!

மு. வரதராசன்

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்குச் சென்னை மவுண்ட் ரோட்டில் நடந்து செல்ல நேர்ந்தது. எனக்கு முன்னே, பருத்தவர் ஒருவரும் மெலிந்தவர் ஒருவரும் நடந்து சென்றார்கள். பருத்தவர் காலில் கனத்த செருப்பும், கையில் விலை உயர்ந்த குடையும் இருந்தன. அவர் கறுப்பு நிறக் கண்ணாடியும் அணிந்திருந்தார். பங்குனி மாத வெய்யிலும் மவுண்ட் ரோட்டின் கொதிப்பும் அவரைத் தாக்குவதற்கு வழியே இல்லாமல் இருந்தது. அந்தச் சாலையில் வெய்யிலால் உருகி இளகிய தார் அவருடைய செருப்பில் ஒட்டி யிருந்ததே தவிர, காலில் ஒட்ட வில்லை. அவருடைய குடைநிழலில் மெலிந்தவர் ஒதுங்கி நடந்தார். அவருடைய காலுக்குப் பழஞ் செருப்பு இருந்தது; கண்ணுக்குக் கண்ணாடி இல்லை. பருத்தவர் பெருமூச்சு விட்டுவிட்டுப் பேசும் பேச்சு மிகுதியாக இருந்தது. மெலிந்தவர் அவ்வப்போது, வாக்கியங்களில் முற்றுப் புள்ளியும் காற்புள்ளியும் இடுவது போல, "ஆமாங்க", "அப்படித்தானுங்க," "ஏன் சொல்றீங்க," "கொடுமைங்க," "கெட்டே போச்சுங்க," மெய்தானுங்க," என்னும் சொற்களைச் சொல்லிக்கொண்டும், தலையை அசைத்துக்கொண்டும் அவருடன் நடந்து போனார்.

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந் தோரூர் நண்" ணுகிற காலம் வந்துவிட்டது. வயிற்றுக்காகத் தலையை விற்கிற 'அறிவு விபசாரம்' ஒழிய வேண்டும். வழி என்ன?

நல்ல வெய்யிலில், தார் ஒட்டும் சாலையில் இப்படி ஒருவர் தலை அசைத்து "ஆமாங்க" சொல்லிக் கேட்டுக்கொண்டு போவாரானால், அந்தப் பேச்சில் ஏதோ சுவை இருக்க வேண்டும் என்று நான் எண்ணினேன். உடனே, கொஞ்சம் விரைவாக நடந்து அவர்களை நெருங்கிப் பின் தொடர்ந்து சென்றேன். அவர்கள் பேசிய பேச்சு நன்றாகக் கேட்டது.

"என்னங்க! உளுத்தம் பருப்பு முன்போல் கிடைப்பதே இல்லை. என்ன தொல்லையாக இருக்கிறது! கிருத்திகை அன்றைக்குக்கூட வடை சுட முடியாமல் ஆய்விட்டது. இட்டளிக்கே உளுந்து போதவில்லை என்று அவள் பாட்டாய்ப் பாடுகிறாள்" என்றார் பருத்தவர்.

"ஏன் சொல்றீங்க" என்றார் மெலிந்தவர்.

பருத்தவர், உடனே தம் கையிலிருந்த குடையை அவர் கையில் கொடுத்து விட்டு, "அப்பாடா" என்று ஒரு பெருமூச்சு விட்டார். கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார். கண்ணாடியைக் கழற்றி நாற்புறமும் பார்த்தார். "அட அட அட! என்ன வெய்யில்! எந்த வருஷமும் இப்படி இல்லையே! கண்ணால் பார்க்கவே முடிய வில்லையே! சரிதான்! இந்தக் குளிர்ச்சிக் கண்ணாடி இல்லையானால் நான் செததே போயிருப்பேன்" என்றார். உடனே தம் தோள்மே லிருந்த

விசிறி மடிப்பை எடுத்து அதன் முனையால் கண்ணாடியைத் துடைத்துவிட்டு மறுபடியும் அணிந்து கொண்டார். மேலும் பேசத் தொடங்கினார்.

"சர்க்கரையும் கிடைப்பது அருமையாகிவிட்டது. எது இல்லாமல் போனாலும் காப்பி இல்லாமல் எப்படி வாழ முடியும்? இது என்ன அக்கிரமம்! வெல்லம் போட்டுக் காப்பி வைக்கிறார்களாம். அது எப்படி முடியும்? நாட்டுப் புறத்தில்தான் அப்படிச் செய்வதாகக் கேள்விப்பட்டது உண்டு. பட்டணத்துக்கும் அந்த நிலைமை வந்துவிட்டதே!'' என்றார்.

"மெய்தானுங்க, என்ன செய்றது?'' என்றார் மெலிந்தவர். குடை நிழல் தேடப் போய்க் குடையே அவர் கையில் வந்துவிட்டது. ஆனால் குடை வந்ததும் நிழல் குறைந்து விட்டது. குடையின் சொந்தக்காரர் என்ன சொல்வாரோ என்று அஞ்சி, அவருக்கே முழுதும் பிடித்துத் தம் தலையை மட்டும் அதன் நிழலில் மறைத்துக் கொண்டார். பருத்தவர் தொடர்ந்து பேசினார்.

"எங்கள் வீட்டுக் குழந்தைகள் வெல்லம்போட்ட காப்பியே குடிப்பதில்லை. எனக்குக்கூட அது பிடிக்காது. அதைவிட வெந்நீரில் கொஞ்சம் வெல்லம் போட்டுக் குடிக்கலாமே'' என்றார்.

"வெறும் வெந்நீரையே குடிக்கலாமே'' என்றார் மெலிந்தவர்.

பருத்த பெருமான் கலகல என்று சிரித்துக்கொண்டே, குடையைத் தம் பக்கமாக இழுத்துச் சாய்த்தார். மெலிந்தவர் தலையிலும் வெய்யில் காய்ந்தது. பருத்தவர் கடுமையான குரலில் பேசலானார்:

"இது வெறுஞ் சிரிப்பு அல்ல. நான் சொல்கிறேன், பாருங்கள். இந்தச் சர்க்காருக்குத் திறமையே இல்லை. இவ்வளவு வெல்லம் கிடைக்கும்போது, அதையெல்லாம் சர்க்கரையாக மாற்ற முடியாதா? எதற்காகச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்று கேட்கிறேன். இந்த அக்கிரமத்தை எத்தனை நாளைக்குப் பொறுக்க முடியும்? இப்படியே இருந்தால், அங்கங்கே கலகம், கொலை எல்லாம் நடக்கும், பாருங்கள். இந்த அக்கிரமக்காரர்களை முன்னே தொலைக்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு, சொக்காயின் கையைச் சுருட்டி மேலே தள்ளினார். குடையை மறுபடியும் தம் பக்கமாக இழுத்துச் சாய்த்தார்.

"கொடுமை, கொடுமைங்க'' என்றார் மற்றவர். பாவம்! அவருடைய கால் தவிர மற்ற எல்லாப் பகுதியும் வெய்யிலில் காய்ந்து வாடிக்கொண் டிருந்தன. மழைக் காலத்தில் அப்படிக் குடை பிடித்திருந்தால், அவர் பாதியுடல் நனையாமல், முழுதும் நனைந்திருப்பார்.

அவர்களும் நானுமாக நடந்து சென்று முன்னே போய்க் கொண்டிருந்த ஒரு கட்டை வண்டியை நெருங்கிவிட்டோம். அந்த வண்டி நிறைய மூட்டைகள் இருந்தன. முன்னே ஒருவன் இழுத்துச் சென்றான். பின்னே ஒருவன் தள்ளினான். மாடுகளாக இருந்தால், இரண்டையும் முன்னே கட்டி இழுக்கச் செய்வார்கள். மனிதர்கள் ஆகையால், இழுப்பதில் உள்ள துன்பம் தெரிந்து, பின்னே இருந்

தும் தள்ளும் எண்ணம் வந்தது. அவர்கள், மாடுபோல் வண்டியை இழுத்தும் தள்ளியும் கொண்டு போனர்கள். அவர்கள் தலைக்குக் குடை இல்லை. குடை இருந்தாலும் அதைப் பிடிக்கக் கை வேண்டுமே! வண்டியை இழுக்கவும் தள்ளவும் இரண்டு கை போதாமல் திண்டாடுகின்றவர்கள் குடை பிடிப்பதற்கு என்ன செய்வார்கள்? கந்தைத் துணியைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அந்தக் கந்தையும் தலைக்குப் போதுமான அளவு இல்லை.

நிழலில் உட்கார்ந்துகொண்டு வட்டிக் கடையில் பணத்தை எண்ணிப் பொழுது போக்கும் மார்வாரியின் தலையில் பதினறு முழ நீளமுள்ள மஞ்சள் தலைப்பாகை அலங்காரமாக இருக்கிறது; மார்வாரி வாழ வட்டி கொடுக்கும் இந்த வண்டி இழுப்போர் தலையில் வெய்யில் மறைப்பதற்கு வேண்டிய அளவு கந்தையும் இல்லையே என்று எண்ணிக்கொண்டே நடந்தேன்.

மெலிந்தவர் பேசியதைக் கேட்டேன். "ஆமாங்க" என்னும் வாய்பாட்டுக்கும் அப்பால் சென்று அவர் பேசியது எனக்கு வியப்பாக இருந்தது. "இந்த வண்டிக்காரரைப் பாருங்கள். தலை தவிர உடம்பெல்லாம் வெய்யில் படுகிறது. வியர்வை தாரை தாரையாய் ஓடுகிறது. தார் காலெல்லாம் ஒட்டுகிறது. பாவம்!" என்று அவர் சொன்னர். பருத்தவர் இதைக் கேட்டதும், "பாவந்தான்! என்ன பாவம் செய்தார்களோ? யாருக்குத் தெரியும்? கர்மம் யாரையும் விடாது. போன பிறவியில் யாரை என்ன செய்தார்களோ! இப்போது அனுபவிக்கிருர்கள்" என்று மெல்ல மெல்ல நிறுத்திச் சொல்லி, சமயப் பிரசங்கம் செய்கிறவர்களைப் போல அமைதியாக முடித்தார். எனக்குத் தான் உள்ளம் கொதித்தது. பெருமூச்சும் விட்டேன். புறத்திலிருந்த வெய்யிலும் கொதிப்பும் அப்போது என் உடலைத் தாக்கவில்லை.

"யந்திரங்கள் எவ்வளவோ பெருகிய இந்தக் காலத்திலும் மனிதர்கள்மாடுகளைப்போல் உழைக்க வேண்டியிருக்கிறதே! ஒரு லாரி இருந்தால் இதுபோல் பத்துப்பேர் வெய்யிலில் தார்க் கொதிப்பில் மாடுபோல் உழைக்க வேண்டியிருக்காதே" என்று மெலிந்தவர், நல்ல வேளையாகத் தம் வரம்பு கடந்தே, பேசினர்.

"அங்கேதான் உண்மை இருக்கிறது. வினை விதைத்தவன் வினை அறுத்தே தீர வேண்டும். நம் பெரியவர்கள் சொல்வது பொய்யாய்ப் போகுமா? எத்தனை கம்பெனிகளில் மோட்டார் லாரிகள் இல்லை! இவர்கள்மட்டும் வெய்யிலில் வியர்வை கொட்ட, கால் கொதிக்க, உடம்பு காய ஏன் உழைக்க வேண்டும்? எல்லாம் ஆண்டவன் ஏற்பாடு! அவன் அவன் செய்தது அவன் அவன் அனுபவித்தாக வேண்டுமே! அதற்காகத்தான் இந்த மூட்டைகளுக்கு மட்டும் லாரி கிடைக்கவில்லை. தெரிகிறதா?" என்ருர். "மெய்தானுங்க" என்ற பதில் உடனே வந்தது. அதற்குமேல் அவர்கள் பேச்சில் என் மனம் செல்லவில்லை. அந்த மூட்டைகளுக்கு எடுத்துப் போடவும் இழுத்துத் தள்ளவும் மனிதர்கள் பிறந்திருக்கிருர்கள்; ஆனல், கண் மூடி வாழ்ந்து கணக்கின்றி உழைக்கும் ஏழை மக்களை எடுத்துப் போடவும், இழுத்துத் தள்ள

வும் எவரும் பிறக்க வில்லையோ என நொந்தேன்.

இந்தக் கண்மூடிகளாகிய உழைப்பாளிகளே உண்மையான மூட்டைகள். இருந்த நிலையிலேயே இருப்பது மூட்டை. இந்த உழைப்பாளிகளும் என்றும் ஒரே நிலையில் இருக்கிறார்கள். கல்வி இல்லை; கேள்வி இல்லை; செல்வம் இல்லை; செல்வாக்கு இல்லை; சுவையான உணவும் இல்லை; இன்பமான வாழ்வு இல்லை—ஆகையால், என்றும் இருந்த நிலையிலேயே இருக்கிறார்கள்.

இந்த மூட்டைகளை இழுத்துச் செல்லவே சமய நூல்களும் அரசியல் நூல்களும் கற்ற அறிஞர்கள் தோன்றினார்கள். ஆனால், அறிஞர்கள் "ஆமாங்க" வாய்பாட்டைப் பாடும் அடிமைகளாக மாறினார்கள். தங்கள் தலையில் ஒரு பகுதிக்கு நிழல் கிடைத்தாலும் போதும் என்று மற்றவர்களுக்குக் குடை பிடிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய குடை நிழல் தங்களுக்குக் கிடைத்ததுபற்றி இறுமாப்பும் அடைந்தார்கள். இவ்வளவோடு நின்றாலும் கவலை இல்லை.

அறிஞர்கள் தாங்கள் கற்ற அறநூல்களைப் பயன்படுத்தவில்லை. நூல் வேறு, வாழ்க்கை வேறு என்று தடுமாற்றங் கொண்டார்கள். "புத்தகத்தில் எழுதியிருக்கிறது. இருந்தால்—" என்று குறுக்கிடும் பாட்டிமாரைப்போல் பேசலானார்கள். தங்கள் தலைக்குச் சிறு நிழல் தரும் குடையாளர்கள் சொல்வதைக் கேட்கவும், கேட்டதை நம்பவும் தொடங்கினார்கள். வாழ்க்கையைக் கண்டு அறத்தை உணராமல், வாயாடிகளைக் கேட்டு அறத்தை மாற்றத் தொடங்கி விட்டார்கள். எது ஊழ்வினை, அதன் இயக்கம் எவ்வாறு என்று தாங்களே தெளிவு பெறாமல், வாழ்க்கையையும் ஆராய்ந்து காணாமல், சிறிது நிழல் கொடுத்தவர்களே தெய்வம் என்றும் குரு என்றும் போற்ற முன்வந்தார்கள். அவர்களுடைய தன்னலத்தையும், வஞ்சகத்தையும், ஏமாற்றுந் திறத்தையும் ஆராயாமல் மயங்கினார்கள். ஊழ்வினை பற்றி அவர்கள் தன்னலங் கொண்டு திறமையாகச் சொன்னவற்றுக்கு ஏற்றவாறு அறநூல்களுக்கு உரை காணவும் முனைந்தார்கள். ஏழைகளின் வாழ்க்கையைக் கண்டு இரங்கிய நன்னெஞ்சத்தை, "கர்மம் யாரை விடும்?" என்று அமைதி பெறும் வன்னெஞ்சமாக மாற்றிக்கொண்டார்கள்.

"ஊழிற் பெருவலி யாஉள?"

என்று ஒப்பற்ற முறையில் வினவி, ஊழின் பெருமையை விளக்கியவர் திருவள்ளுவர். அவருடைய அறநூல், வாழ்க்கையிலிருந்து வடித்தெடுத்த உண்மைகளைக் கூறும் நூல். அந்த நூலில் ஊழின் பெருமையை விளக்கிய திருவள்ளுவரும் ஏழைகளைக் கண்டபோது, இவ்வாறு கூறவில்லை. "ஊழ்வினை யாரையும் விடாது; ஆகையால் இரப்பவர் இரந்துகொண்டே இருக்க வேண்டும்" என்று சொல்லவில்லை. "இரப்பவர்களே! உங்களை இரந்து கேட்கின்றேன். நீங்கள் இரந்து வயிறு வளர்க்க வேண்டாம். வேறு வழி இல்லையானால், நான் சொல்லும் இதையாவது கேளுங்கள்: வைத்துக் கொண்டே இல்லை என்னும் வஞ்சகர்களிடம் போய் இரக்கவேண்டாம்" என்று வேண்டுகிறார். "உலகத்தைப் படைத்தவன் இரத்

தலை ஒரு தொழிலாகப் படைக்க வில்லை. அப்படிப் படைத்திருந் தால் அவனும் இரப்பவர்போல் அலைந்து திரிந்து அழிவானாக'' என்று கடுமையாகக் கூறுகிறார். "இரப்பவரைக் காணும்போது என் உள்ளம் உருகுகிறது. இல்லை என்று கரப்பவரைக் காணின், உருகுமளவும் இல்லா மல் அழிகிறதே'' என்று உருகிச் சோர்கிறார்.

ஆனால், ஊழ்வினை இன்ன தென்றே அறியும் அறிவில்லாத வர்கள் எடுத்ததற்கெல்லாம் விதி விதி என்று பேசிக் கல்மனம் பெறுகிறார்கள். அவ்வாறு பேசு வதை ஒரு கலையாக வளர்த்து, தங்களை அண்டினவர்களுக்கு நிழல் கொடுப்பது போல் கொடுத்து ஏமாற்றி, தன்னலம் வளர்க்கிறார்கள். ஊர்க்கெல்லாம் ஊழ்வினை பேசுகிறார்கள். உளுத் தம் பருப்பு வேண்டிய அளவு கிடைக்கவில்லை என்பதற்காக உள்ளம் கலங்குகிறார்கள். சர்க்க ரைக்குப் பதில் வெல்லம் சேர்க்க வேண்டிய நிலைமைவந்தால், சர்க் காரை எதிர்க்கத் துணிகிறார் கள். "எத்தனை நாளைக்குப் பொறுக்கமுடியும்? என்ன அக் கிரமம்!'' என்று கொதிக்கிறார் கள். ஊரார்க்கு ஊழ்வினை போதித்தவர்கள் தன்னலத்துக்கு எள்ளளவு குறைவும் வராமல் காத்துக் கொள்ளும் முயற்சி இது!

பிறர் உழைப்பால் பருத்தவர் சிலர்; அவர் தரும் நிழலை நம்பி ஏமாந்து மெலிந்தவர் சிலர்; இரு வகையார்க்கும் இடையே மாடு போல் உழைத்து மாள்பவர் பலர். இந்தப் பலரும் இதுவரையிலும் மூட்டைகளாக இருந்து வந்தார் கள். அறிஞர்கள் உறுதுணையாக இருந்து உயர்த்தப் போவதாக முன்வந்தது பயனில்லாமல் போயிற்று. இனி ஒரு வழி உண்டு.

அந்தக் குடையை உழைப் பாளிகள் கைப்பற்ற வேண்டும்; தொழிலாளிகள் அரசாங்கம் அமைக்க வேண்டும். அப்போது இவர்கள் கையில் குடையிருப் பதைக் கண்டு, மெலிந்தவர் பருத் தவரை விட்டு நீங்குவார்; உழைப் பவர் பக்கம் வந்து குடை நிழல் நாடுவார். அறிஞர்கள் அறநூல் களுக்கு உண்மையான பொருள் காண வழி பிறக்கும். எப்படியா வது குடும்ப வாழ்க்கை நடக்க வேண்டுமே என்று கவலைப் பட்டு, அந்தக் கவலையைத் தீர்ப் பதற்காக "ஆமாங்க'' பாட்டுப் பாடுவதை நிறுத்துவார்கள். முத லாளி சொல்வதற்கு ஏற்றவாறு ஊழ்வினைக்குப் பொருள் செய் யாமல், தொழிலாளி வாழ்வுக்கு இயைந்தபடி உண்மைப் பொருள் காண்பார்கள். அறிஞர் களுக்கும் வயிறு உண்டு; வயிற் றுக் கவலைக்காக உண்மையை மறைக்கவும், மறுக்கவும், மறக்க வும் துணிவு உண்டாகிறது. ஆத லால், வயிற்றுக் கவலை நீங்கினால், "ஆமாங்க'' பாட்டு நிற்கும். உழைப்பாளியும் அறிவாளியும் சேர்ந்து, "உழவும் தொழிலும் வந்தனை பெறும்; வீணில் உண்டு களித்திருத்தல் நிந்தனை பெறும் —இதுவே ஊழ்; இந்த ஊழை வெல்ல முடியாது'' என்று அறம் உணர்வார்கள். இதற்குப் பருத்த வன் கையில் உள்ள குடை உழைப்பவன் கைக்கு வரவேண் டும்; அந்தக் குடை நிழலை நாடி, மெலிந்தவன் — அறிஞன்—வந்து சேர வேண்டும்.

✲

சாப்பிடத் தெரியுமா?

பி. சுந்தரமூர்த்தி

நம் தாய்நாட்டின் மக்கள் தொகை சுமார் 40 கோடி. இவ்வளவு பேரும் வயிருர உண்பதற்கு, வருடத்துக்கு 850-லிருந்து 900 லட்சம் டன் வரை உணவுக்கான தானிய வகைகள் தேவையென்று ஒரு மதிப்புக் கூறுகிறது. ஆனல், நாம் அறுவடை செய்வதோ 600-லிருந்து 700 லட்சம் டன்னுக்கு மேல் இராது. இதில் விதைகளுக்காக ஒதுக்கி வைப்பது, கால் நடைகளுக்கு உதவுவது, ஏற்றுமதி செய்வது, சேதம் அடைவது— எல்லாம் போக எஞ்சி நிற்பது சுமார் 500 லட்சம் டன் என்று மதிப்பிடலாம். இதை வைத்துக் கொண்டு 40 கோடி மக்களும் பசியாறுவ தென்ருல், ஆளுக்கு அரைச் சாப்பாடுதான் கிடைக்கும். ஆனல், உண்மையில் இந்த அரைச் சாப்பாட்டுக்கும் வழி இல்லாமல், பல நாட்கள் முழுப் பட்டினியாய் உயிர் தேய்ந்து வரும் ஏழை மக்கள் தான் எத்தனை பேர்!

அமிதமாக உண்டு அஜீரணத்தால் அவதிப்படும் ஒரு சில எஜமானர்களை வைத்தியரிடம் அனுப்பிவிட்டு, நாட்டின் ஏழ்மையில் சிறிது சிந்தையைச் செலுத்துங்கள், உணவிருந்தும் உட்கொள்ளாது உடலை வருத்திப் பட்டினி கிடப்பதை "விரதம்" என்று போற்றிப் பாராட்டுகிரும். அது சரியே. ஆனல், தொழிலற்று, நிலையற்று, கதியற்று, வறுமை மிஞ்சி, கஞ்சிக்கும் வழியின்றி, வயிறெட்டிக் கிடக்கும் மக்களை, "அது அவர்கள் தலையெழுத்து" என்று விட்டு விடலாமா?

ஏழைகளின் கதி இவ்வாறிருக்க, சற்று நிம்மதியான நிலையிலிருக்கும் குடும்பங்களில் ஆகார நியதி எவ்வாறிருக்கிறது என்று கவனிக்கலாம்.

ஒரு நாள் நடுப்பகல். போஜன நேரம். எதிர்பாராது ஒரு நண்பர் என்னைப் பார்க்க வந்துவிட்டார். இருப்பதைப் பரிமாறச் சொல்லிவிட்டு, இருவரும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தோம். வழக்கம்போல் சாதம், பருப்பு, நெய், சாம்பார், ரசம், தயிர், ஒரே ஒரு பொரியல், அப்பளம், ஊறுகாயுடன் எங்கள் போஜனம் நிறைவேறியது. தாம்பூலம் தரித்துக் கொண்டே, "நீங்கள் சுத்தச் சைவம் என்பது மறந்தே போய்விட்டதையா! இல்லாவிட்டால் சாப்பாட்டு நேரத்தில் உங்கள் வீட்டுக்கு வந்தே இருக்க மாட்டேன்" என்று வேடிக்கையாகச் சொன்னர் நண்பர்.

"ஏன், மாமிசம் இல்லாது சரிப்பட வில்லையோ?" என்றேன், சிரித்துக் கொண்டே. எனக்கு என்னமோ சாப்பாடு திருப்தியாகத்தான் இருந்தது. நண்பர், "ஆமாம். இந்தத் தழையையும் காம்பையும் தின்றுவிட்டு எப்படித்தான் ஜீவிக்கிறீர்களோ? அதனல்தான் உங்கள் உடம்பு இப்படி இருக்கிறது" என்று

'அன்னமயம் பிராணமயம்.' 'அன்ன விசாரம் அதுவே விசாரம்.' கள்ளச் சந்தைக் கனவான்களே சோற்றுக்குத் திண்டாடும் இந்த வேளை, சோற்றின் பெருமை சொல்லவும் பெரிதே.—நல்வழி.

என்பால் அனுதாபம் காட்டினர். மாமிச போஜனத்தால் ஏற்படும் போஷாக்கு முழுவதும் தாவர உணவைக் கொண்டே பெற முடியும் என்று நான் பிடிவாதம் செய்தேன்.

"ஆனல், அதற்கும் நீங்கள் இன்று எனக்கு இட்ட உணவு மாதிரியாகாது. கைக்குத்தலரிசி, பருப்பு, நிறையக் காய்கறிகள், பழ வகைகள், பால், நெய், தயிர், மோர்—இவைகளை நீங்கள் இன்னும் ஏராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு நல்ல நிலபுலங்கள் இருக்கின்றன. அவற்றில் உங்கள் குடும்பத்துக் காகும்படி காய்கறித் தோட்டங்களையும், பழ மரங்களையும் பயிர் செய்யவேண்டும். இந்தப் பழக்கத்தை மற்ற விவசாயிகளிடையும் பரப்ப வேண்டும். நன்ருகச் சாப்பிட வேண்டுமய்யா! சாண் வயிற்றுக்குத்தானே இத்தனை பாடும்! சாப்பிட்டால்தான் உடல் உரம் பெறும். உடல் உரம் பெற்ருல்தான் உழைக்கச் சக்தி உண்டாகும். உடல் ஆரோக்கியமாக இருந்தால் மனத்தில் தெளிவு ஏற்படும். மனப் பண்பு சீர்பட்டால் சமுதாயம், கலை, தொழில் மற்ற அனைத்தும் அபிவிருத்தி அடையும். நாடும் முன்னேற்றம் காணும். அனைத்துக்கும் சூத்திரம் அன்னமய்யா, அன்னம்!" என்று நண்பர் ஒரு பிரசங்கம் செய்து விட்டார்.

நண்பர் கூற்றில் ஊறிக் கிடக்கும் உண்மை கூர்ந்து கவனித்தற்குரியது.

தமிழ் நாட்டில் பட்டினியால் வற்றி வரும் ஏழைக் குடும்பங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. செல்வாக்கு நிறைந்த குடும்பங்களில்கூட மக்கள் உணவுத் திட்டம் ஒன்றையும் கவனியாமல் பசித்த போது, கிடைப்பதைப் புசித்து, அசிரத்தையால் ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொண்டு, மருந்து வகைகளில் பணத்தை விரயம் செய்து வருவதுதான் பின்னும் வருந்தத் தக்கது. நிலபுலம் உள்ள கிராமத்து மக்கள், ஏழைகள் அரிசி குத்த, மாவு அரைக்க ஆலைகளை நாடுவதும், காய்கறிகள் வாங்கச் சந்தைக்குப் போவதும் அறிவீனமானது. பருவ காலங்களில் சரசமாகக் கிடைக்கும் மாம்பழம், சீத்தாப் பழம், கொய்யாப் பழம் முதலியவைகளைத் தவிர மற்றக் காலங்களில் நோயுற்றுக் கிடந்து வைத்தியர் வந்து சொல்லிப் போனல் ஒழிய, நல்ல பழ வகைகளைக் கண்ணெடுத்துப் பார்ப்போர் வீடு குறைவு. இரவில் தவருது பசுவின் பால் அருந்தும் குடும்பங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அமாவாசைக்கு அமாவாசை பச்சரிசிச் சோறும், பருப்பும், பசு நெய்யும் காணும் பாக்கியம் பெற்ற குடும்பங்களும் மிகச் சிலவே.

நாம் ஆகாரத்தில் அசட்டையாக இருப்பது தவருகும். கேவலம் தேகத்தின் தேவைக்காக இல்லறத்தை மேற்கொள்வதை எப்படித் தாழ்வாகக் கருதவேண்டுமோ, அப்படியே நாவைத் திருப்தி செய்வதற்காக, ஊறு செய்யும் உணவுகளை உண்பதையும் கருத வேண்டும். உண்பதை ஒரு விரதமாகக் கொள்ள வேண்டும். தக்க காலத்தில், நன்ருகப் பசித்த பின் ஆரோக்கியமான ஆகாரத்தையே அருந்த வேண்டும். இன்னும் நமக்கு நன்ருகச் சாப்பிடத் தெரியாதிருப்பது உண்மைதான்! இனி, அதை நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியம்தான்!

✲

யோசித்தீர்களா ?

பொ. திருகூடசுந்தரம் பிள்ளை

கர்ப்பத்தடை முறைகள் தெரியாதவர்கள் எல்லோரும் விபசாரம் செய்யாமல் இருக்க வேண்டுமே—அப்படித்தானு உலகில் நடைபெற்று வருகிறது? இப்பொழுதுதானே கர்ப்பத் தடை முறைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறோம். ஆயினும், ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் கூடா ஒழுக்கம் நடந்து தானே வருகிறது? அதன் காரணம் யாது? தவருக நடக்க விரும்புகிறவர்களைக் கட்டாயமாய்த் தடுக்க முடியவே முடியாது. மனுதர்ம சாஸ்திரம் விபசாரத்துக்கு மரணதண்டனை விதித்ததே—அப்படி இருந்தும், மனு நீதிப்படி ஆட்சி நடைபெற்ற காலத்தில் விபசாரம் நடவாமல் இருந்ததா? இல்லையே.

சாதாரணமாக, ஆண்களும் பெண்களும் ஒழுக்கயாக நடப்பதிலேயே ஆசை யுடையவர்கள். ஏதோ, ஒரு சிலரே எந்தக் காலத்திலும் பிசகான வழியில் நடப்பவர்கள். அவர்களில் சிலர், குழந்தைப் பிறந்து விடுமே என்று பயந்து, அந்த வழியில் செல்லாதிருக்கலாம். ஆனுலும், சம்போகம் செய்தால்தானு விபசாரம்? அதை உள்ளத்தால் உள்ளலும் விபசாரம்தானே? அப்படி மனத்தில் அழுக்குடைய சிலரைக் காரியத்தில் இறங்க வொட்டாமல் செய்து விட்டால்மட்டும் ஒழுக்கம் அதிகரித்துவிடுமா? அப்படிச் சிலரைத் தடுப்பதற்காக அந்த வழியில் செல்லாத தாய்மார்கள் அதிகக் குழந்தைகள் பெற்று அவதிப்பட வேண்டுமா?

சரி, தவறு என்று அறிந்து ஒழுகுவதுதானே உண்மையான ஒழுக்கம்? தவருக நடக்க விரும்புகிறவர்களில் பலர் கர்ப்பத்தடை முறைகளை நாம் சொல்லாமலே தெரிந்து கொண்டுதான் வருகிருர்கள். அப்படி அந்த முறைகளைத் தெரிந்து, குழந்தை உண்டாக வொட்டாமல் செய்தவர்கள் குழந்தை உண்டான பின் கருச் சிதைக்கவோ அல்லது குழந்தை பிறந்தபின் அதைக் கொல்லவோ செய்கிருர்கள். அதுமட்டு மன்று. அவர்கள் குழந்தை பெற்று அவைகளைக் கொல்லாமல் இருந்துவிட்டால், அந்தக் குழந்தைகளை நாம் "சோரத்தில் பிறந்தவர்கள்" என்று இழிவாகப் பேசுகிருேமே அதுவும் நிற்கும். அந்தக் குழந்தைகள் சாப்பாட்டுக்குத் திண்டாடுமே, அதுவும் நிற்கும். ஆணும் பெண்ணும் தவறு செய்தால், அதற்காக அவர்களுடைய குழந்தைகள் தண்டனை பெற வேண்டுமா? இன்னும் கர்ப்பத் தடை முறைகள் தெரிந்திருந்தால் சோர முறையால் பரவி வரும் கிரந்தி நோயும் பரவாமல் நின்று விடும். அது தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் எவ்வளவு பெரிய நன்மையாகும்!

✲

விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை: வெளியிட்டோர்: தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர், சென்னை. கிரௌன் 1x8. 212 பக்கம். விலை ரூ. 2—4—0.

காலத்துக் கேற்ற, பயன் மிக்க நூல். மாதிரிக்குக் கொஞ்சம் பாருங்கள்:

VINOLIA WHITE ROSE SOAP
காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச்சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது — மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச்சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.
வினோலியா ஒயிட் ரோஸ் சோப்
VWR. 19-111 TM
VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள்!

"SCABIOL"

Magic Cure for all Skin Diseases

ஸ்கேபியால்

சொறி சிரங்கு, முகப்பரு, வெனல்கட்டி, கரப்பான், சேத்துப் புண் முதலியவைகளுக்கு இணையற்ற நிவாரணி

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் : THE MADURA COTTAGE INDUSTRIES

Manufacturers & Representatives

17, Perumal Tank Street, : MADURA

use

KESHA-MITRA

HAIR-OIL

(VEGETABLE)

A LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த நீண்ட கேசத்திற்கு

கேசமித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை அறவே போக்குகிறது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அண்ட் பார்மகூடிகல்ஸ் லிமிடெட்

11-12, முதல் லைன் பீச் : : சென்னை

சோதிடப் புரட்டு

வான சாஸ்திரி

அப்பாவிகளான ஆயிரக்கணக்கான மக்கள் மூடத்தனமாக, ஒரு பித்தலாட்டத்துக்காக, வருஷந்தோறும் லட்சக் கணக்கான பணத்தைச் செலவழித்து வருகிறார்கள். சோதிடம் என்பதுதான் இந்தப் பித்தலாட்டம். விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட மூடத் தனத்துக்கு மக்கள் அடிமைப்பட்டிருப்பது நம்ப முடியாத சங்கதி. அறிவு வளர்ச்சி இல்லாத பூர்வ காலத்தில் மனிதனுடைய மனோநிலை குழந்தைப் பருவத்திலிருந்து வந்தது. அப்போது, உலகம் தட்டையாக இருந்ததாகவே ஜனங்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட இருண்ட காலத்திலிருந்து வந்த மூட நம்பிக்கைக்குச் செவி சாய்க்கக் கூடியவர்கள் இன்னும் இருந்து வரத்தான் செய்கிறார்கள் என்று நம்ப முடியுமா, என்ன? அப்படி இருந்தும், எதிர் காலத்தைப் பற்றிச் சரியாய்ப் பலன் கூறி விடுவதாகச் சோதிடர்கள் வெட்கமில்லாமல் பாவனை செய்கிறார்கள். ஒருவனுடைய சீலத்தைப் பற்றி அளந்தறிந்து சொல்லி விடுவார்களாம்! நட்சத்திரங்களும் கிரகங்களும் ஒன்றுக்கொன்று கொண்டிருக்கும் தொடர்பு நிலைகளைக் கொண்டே ஒருவனுக்கு இருக்கும் தனித் திறமையைக் கண்டு பிடித்து விடுவார்களாம்! இவையெல்லாம் சுத்த அபத்தங்கள் என்று கண்டு, இவற்றைப் பொருட்படுத்தக் கூடாதென்று தங்கள் புத்திக்குப் பட்டாலும், உலகமெங்கணும் உள்ள லட்சக் கணக்கான ஜனங்கள் எல்லா விதமான வியாபார விஷயத்திலும், சொந்த விவகாரங்களிலும் சோதிடம் பார்த்து வரவே செய்கிறார்கள்.

கடந்த முந்நூறு வருஷத்தில், நட்சத்திரங்களுக்கும் மனிதனுடைய வாழ்க்கைப் போக்குக்கும் லவலேசமும் தொடர்பு இருந்து வருகிறதென்று நம்புவதாக, விஞ்ஞானி என்று ஒப்புக்கொள்ளப் பட்ட எவனும் சொல்லவில்லை. உலகத்தின் எந்தப் பாகத்திலிருந்தும் எந்த விஞ்ஞானியும் இப்படிச் சொன்னதில்லை. சோதிடத்தின்மேல் விஞ்ஞானிகளுக்குள்ள ஒரே உணர்ச்சி அருவருப்பு உணர்ச்சிதான்.

சோதிடம் எப்படி வந்தது? ஆரம்பத்தில் பாபிலோனியாவிலும், அஸிரியாவிலும் சில சோதிடர்கள் கிளம்பினார்கள். அவர்களைப் பின்பற்றி அரேபியா, எகிப்து, கிரீஸ், ரோம் ஆகிய இடங்களில் சிலர் கிளம்பினார்கள். இவர்கள் தங்கள் சிறு தெய்வங்களைக் கிரகங்களாக எண்ணி வந்தார்கள். கிரகங்

"சோதிடம் பொய்" என்றார் அறிவியல் வாதி ஒருவர். "சோதிடம் பொய் என்பது பொய்" என்று சீறினார் பிரபல சோதிடப் பத்திராசிரியர் ஒருவர். சோதிடப் புரட்டை அம்பலப்படுத்தும் இந்தக் கட்டுரையால் நீங்கள் பயனடைவீர்கள் என்று நாம் சோதிடம் கூறுவது பலிக்குமா?-டைஜெஸ்ட் ஆஃப் வோர்ல்ட் ரீடிங்கில் சீ. கெல்லி எழுதியது.

களுக்குத் தங்கள் கடவுள்களின் பெயர்களை இட்டிருந்தார்கள். அந்த அந்தக் கடவுளின் பெயரைக் கொண்ட கிரகத்துக்கு அந்த அந்தக் கடவுளின் சக்தி இருந்துவந்த தென்று நம்பினர்கள். இன்று நிலைமை என்ன? முழு மூடனை ஒரு சோதிடன் கூட ஜுபிடர், வீனஸ், மார்ஸ் ஆகிய கடவுளர் நிஜமாகவே இருந்து வந்தனர் என்று நம்ப மாட்டான். இவை புராணக் கதைகள் என்றே சொல்வான். அப்படி யிருந்துங்கூட, பிரம்மாண்டமான பாறைத் துண்டுகளும், வாயுப் படலங்களும்,— நம்மை விட்டு லட்ச லட்சம் மைல்களுக் கப்பால் வானவெளியில் மிதந்துகொண்டிருந்தபோதிலும், எப்படியோ நம்மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்பதை நாம் நம்பத்தான் வேண்டும் என்கிறார்கள். ஏன்? மோகினிக் கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்களை இவை கொண்டிருக்கின்றனவாம். காரணம் எப்படி?

ஹார்வர்டு வானச் சோதனைக் கூடத்தில் வான சாஸ்திரியாக இருக்கும் புரொபஸர் பார்ட் ஜே. பாக் என்ன சொல்லுகிறார்? "வெறும் ஜடப் பொருட் குவியல் ஒன்று தன்னுடைய சக்தியால் மனிதனுடைய சீலத்தைப் பாதிக்கிற தென்று நாம் நம்புவதானல், லட்ச லட்சம் மைல்களுக் கப்பால் உள்ள ஒரு கிரகத்தை விட, சாம்ராஜ்ய அரசாங்கக் கட்டிடமானது நியூயார்க் மக்கள் மீது மிக அதிகமான ஆதிக்கம் செலுத்த முடியும்."

சோதிட அபத்தத்தை நிரூபிப்பதற்கு விஞ்ஞான ரீதியில் உள்ள மிக முக்கியமான அத்தாட்சி

" நீசன் என்ற ராசிநாதன் ஆட்சி உச்சம் ஏறிடில்....."

என்ன என்று கேட்டதற்கு, பிரின்ஸ்டௌன் கல்லூரியின் வான சாஸ்திர இலாக்காவைச் சேர்ந்த புரொபஸர் ஜான் க்யூ ஸ்டூவர்ட் என்ன சொன்னார்? "விஞ்ஞான ரீதியில் இதற்கு விடை தருவது கடினம். ஏனென்றால், சாஸ்திரீக முறையில் அமைந்த அத்தாட்சி எதையும் சோதிடர்கள் கொண்டிருக்க வில்லை. ஆகவே, பரீட்சை செய்ய அங்கு இடமில்லை. குறிப்பிட்ட கிரகங்கள் நம்முடைய சீலத்தை நிர்ணயிக்கின்றனவாம். நாம் பிறக்கிறபோது கிரகங்கள் இருந்த நிலை காரணமாக, நம்முடைய ஜாதகம் குறிப்பிட்ட கிரகங்களைக் கொண்டு அமைகிறதாம். இது, சோதிடர்களின் வாதம். ஆனால், ஆயிரம் ஆயிரம்பேர் தினசரி, ஒரே நேரத்தில் பிறக்கிறார்கள். அப்படியிருந்தும், எந்த இரண்டு பேரும் ஒரே மாதிரியான சீலம் கொண்டிருப்பதில்லை; ஒரே மாதிரியான திறமை கொண்டிருப்பதில்லை; வாழ்க்கையில் ஒரே மாதிரியான வெற்றியை அடைவதில்லை.

"இரட்டைக் குழந்தைகள் கூடப் பின்னால் வெவ்வேறு மாதிரி ஆகிவிடுகிறார்கள். வான வெளியில் உள்ள கோளங்கள் நம்மை ஆட்டி வைப்பதாகவே வைத்துக் கொண்டாலும், ஒருவன் பிறக்கிறபோது கிரகங்கள் இருக்கும் அமைப்பு நிலையைப் பற்றி இவ்வளவு தூரம் அழுத்திச் சொல்ல வேண்டிய தேவை என்ன? பிறக்கும் நேரத்தை விட்டு விட்டு, கருத் தரிக்கும் நேரத்தை எடுத்துக் கொண்டால் என்ன? நாம் பிறக்கிற நேரம் தான் முக்கியமென்று நம்பினால், பிறக்கப் போகும் குழந்தையின் எதிர் காலம் பூராவையுமே மாற்றி விடும் சக்தி வைத்தியனுக்கு இருக்கிறதென்பதையும் நாம் நம்பித்தானாக வேண்டும். ஏன்? தாயின் நலத்தைக் கருதி, பேறுகாலத்துக்கு முந்தியே குழந்தை பிறக்கும்படி வைத்தியனால் செய்ய முடியுமல்லவா?"

தூங்கள் பிறந்த நேரத்தை ஒரு சிலர்தான் பிசகாமல் குறித்து வைத்திருக்கிறார்கள். சோதிடப் பலன் தப்பிப் போனால், பிறந்த நேரம் சரியாய்க் கொடுக்கவில்லை என்ற சாக்குச் சொல்லிச் சோதிடர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சோதிடர், ஒரு சமயம், ஏல் கல்லூரியின் வானச் சோதனைக் கூடத்துத் தலைவரான புரொபஸர் பிரான்க் ஸ்க்வே ஸிங்கருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், புரொபஸருக்குத் தெரிந்த யாராவது ஒருவனுடைய பிறந்த நாள், மணி, நிமிஷம் இவைகளைக் குறித்து அனுப்பினால், பரீட்சை பார்ப்பதற்காகத் திட்டமான பலன் எழுதி அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். ஸ்க்வே ஸிங்கருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய மகன் பிறந்த நேரம் அவருக்கு மிக நன்றாய்த் தெரியும். தாயின் வயிற்றிலிருந்து நிலத்தில் விழுந்து, குழந்தை முதன் முறையாக வாய் திறந்து குரல் கொடுத்த நேரம், ஒரு விநாடி வித்தியாசம்கூட இல்லாமல், அவருக்குத் தெரியும். இந்தப் புரொபஸர் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்:

"சோதிடர்கள் எப்படி மணிக் கணக்குப் பண்ணுகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. நடப்பு மணியா, பகல் நேரத்தை

மிச்சப் படுத்தும் மணியா, எது? இருந்தாலும், பல தினுசான மணிகளுக்கும் ஒத்து வரும்படி, நியூயார்க்கிலிருந்து சீனவிலுள்ள பைப்பிங் வரை உள்ள பற்பல இடங்களில் வழங்கும் மணிக் கணக்குகள் அனைத்துக்கும் ஒப் பிட்டுப் பார்த்துக் கொள்ளுவதற் காகப் பற்பல விதமான மணி நேரங்களையும் இந்த ஆசாமிக்கு நான் கொடுத்திருந்தேன். ஒரு குறிப்பிட்ட மணியில் ஒருவன் ஓரிடத்தில் பிறப்பதற்குப் பதி லாக இன்னோர் இடத்தில் பிறந் திருந்தால், கிரக அமைப்பு நிலை யில் இயற்கையாகப் பெரிய வித் தியாசம் இருக்கவே செய்யும். என் மகனுடைய வாழ்க்கை யைப் பற்றி அந்தச் சோதிடர் சொன்னவற்றில் ஒன்று கூட உண்மையாக வில்லை.''

சோதிடத்திலுள்ள எமகாதகப் புரட்டுகளை அப்படியே மதி மயங்கி நம்பி விடுகிறவர்களுக்கு வான சாஸ்திரச் சரித்திரத்தில் உள்ள இரண்டே இரண்டு நிகழ்ச்சிகள் விஷயத்தை விளக்கி விடும். கிரகங்களின் ஆட்சி முறையைச் சோதிடர்கள் நேர்த் தியாய்த் துறை பிரித்து முடிந்த வுடனே, யுரேனஸ் கிரகத்தை வான சாஸ்திரி ஹெர்ஸ்செல் கண்டு பிடித்தார். பிறகு, 1846-ல் நெப்டியூன் கிரகம் கண்டு பிடிக் கப்பட்டது. பாவம், பல நூற் றாண்டுகளாக யுரேனஸும், நெப் டியூனும் காலாடித்தனமாய்க் கண்டபடி சுற்றிக் கொண்டே யிருந்திருக்கின்றன. மனிதர்க ளுடைய காரியங்களை நடத்தி வைப்பதில் இவை சிரத்தை காட் டவே இல்லை. ஆனாலும், இந்த இரண்டு கிரகங்களும் அற்ப சொற்ப மானவையா? மெர்க் குரி, மார்ஸ், வீனஸ் மூன்றும் சேர்ந்தால்கூட இவை ஒவ் வொன்றையும் விடச் சிறிய வையே. கடைசியில், இவற்றால் சோதிடர்களுக்குச் சௌகரிய மான பிழைக்கும் வழிதான் கிடைத்து விட்டது. காலம் சென்ற இவான்ஜெலின் ஆடம்ஸ் பிரபலமான புத்தகங்கள் எழுதிய வர். சோதிடத்தின் மூலம் வரு வாய் தேடிப் பிரசித்தம் அடைந் தவர். அவர் எழுதிய பிரபல மான புத்தகம் ஒன்றில், யுரேனஸ் கிரகம் ரெயில் பாதைகள்மீதும், நெப்டியூன் கிரகம் வான வீதி மீதும் ஆதிக்கம் செலுத்துகின் றன என்று குறிப்பிட் டிருக்கி றார். விஷயங்களின் உண்மை யைத் தெரிந்துகொள்வதில் சாஸ் திரீகமான முறைக்கும், இப்படித் திடுதிப்பென்று சட்டம்போட்டு வாய் அடைக்கும் முறைக்கும் உள்ள வித்தியாசத்தை ஒப்பிட் டுப் பாருங்கள். இது இப்படித் தான் என்று விஞ்ஞான சாஸ் திரம் ஒப்புக் கொள்வதே யில்லை. நிரூபித்துக் காட்ட முடியாத எதையும் அது அங்கீகரிப்பதில்லை. யுரேனஸ் கிரகத்தை வில்லியம் ஹெர்ஸ்சல் கண்டு பிடித்த போது, அவர் அதை எப்படிக் கண்டு பிடித்தார் என்று திட்ட மாக எடுத்துக் காட்டினார். இதற்கு முன்பே அதை வேறு யாரும் ஏன் கண்டு பிடிக்க வில்லை என்பதற்கும் நியாயமான விளக்கம் தந்திருந்தார். வான வூர்திகளின்மேல் நெப்டியூன் கிரகத்துக்கு உள்ள ஆட்சி பலத் தைப் பற்றி ஸ்ரீமதி ஆடம்ஸ் எடுத்துக் காட்ட முயன்றிருந் தால், அது சல்லிசாக முடிகிற காரியமா என்று யோசித்துப் பாருங்கள்!

பத்திரிகைப் பத்திகளிலும், புத்த கங்களிலும் வெளியாகிற

சோதிடப் பலன் உளறல்களி லும் பெரும்பாலானவை வெறும் உபயோகமற்ற க்ஷேம லாப வியா பாரங்கள்தான். இவற்றை நிஜம் என்று நம்பி விடுகிறவர்களின் மன நிலையைப் பற்றி நினைத் தாலே நமக்கு நடுக்கம் ஏற்படு கிறது: "உறவினர்களோடு இன் னும் சுமுகமான சம்பந்தத்தை உண்டுபண்ணிக் கொள்ளுவ தற்கு இன்று நல்ல நாள்," அல் லது "உங்களுடைய எதிர்கால வியாபார மாறுதல்களைப் பற்றித் திட்டம் போடுவதற்கு உங்களு டைய கடந்த கால அனுபவம் உதவுமாக."

பலன் எப்படி? பழைய அனு பவம் புது முயற்சிக்கு உதவாமல் வேறு என்ன செய்யும்? இதிலே சந்தேகம் கூடவோ? ஒரு நாளை விட மற்ருெரு நாள் எப்படிச் சிறந்த தாகிறது? நட்சத்திரங் களைப் பார்த்துப் பார்த்துத்தான் இப்படிப்பட்ட அபார ஞானம் வந்ததாக ஏன் சொல்ல வேண் டும்? மாமூல் பாணியில் உள்ள சோதிடப் பத்திரிகை யொன்று. அதிலே ஒரு கட்டுரை. அங்கே ரத்தினச் சுருக்கமான அறிவுரை கள் தரப்பெற்றிருக்கும்: "அக் டோபர் 24 முதல் நவம்பர் 23 வரை உள்ள காலத்தில் பிறந்த வர்களுக்குப் பலன்" என்ற தலைப்பின்கீழ் இந்த மாதிரி கண் டிருக்கிறது:

"ஏழாம் மடத்தின் யுரேனஸ், அங்கிருந்து கொண்டு உங்களு டைய வாழ்க்கைக்கு அடிப்படை யான சக்திக் கதிர்களைப் பரப்பு கிறது. மற்றவர்களோடு நீங்கள் பழகுவதால் உங்கள் வாழ்க்கை யில் உண்டாகிற மன எழுச்சியை அது கிளம்பச் செய்கிறது." இந்த மாதிரி, மாவிலும் படாமல் பணி யாரத்திலும் படாமல், முடிவே இல்லாமல், தங்களிடம் மாட்டிக் கொண்ட பிராணிகளைச் சோதி டர்கள் மிரட்டி விடுகிருர்கள்.

புரொபஸர் ஸ்க்வே ஸிங்கர் பல வருஷம் பத்திரிகைகளில் சோதிடப் பகுதியில் எழுதி வந் திருக்கிருர். உண்மையைக் கண்டு பிடித்து மக்களுக்கு அறி வூட்டுவதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து விட்டதாகச் சொல்லிக் கொண்டு, சோதிடர்களும், சோதிடப் பலன் போடும் பத்தி ரிகைகளும் வேண்டுமென்றே ஏன் மூட நம்பிக்கையைப் பரப்பி வந்திருக்கின்றன என்று அவர் மரியாதையாகக் கேட்டுக் கொண்டே வந்திருக்கிருர். இதற் குச் சர்வ சாதாரணமாகச் சொல் லும் சமாதானம் என்ன தெரி யுமா? "தினசரிப் பலன்கள்" அறிவில்லாத மக்களுக்குப் பொழுது போக்கு ஆகுமாம். இதனல் அவர்கள் பத்திரிகைகளை வாங்குவார்களாம். இதனல் கெடுதல் ஒன்றும் இல்லையாம்.

கெடுதல் இல்லையா, என்ன? நிறையக் கெடுதல் உண்டு. ஒழிய வேண்டிய ஒரு மூடப் பழக்கத்தைப் பத்திரிகைகளில் வரும் இந்தத் தினசரிப் பலன்கள் சாகாமல் காத்து வருகின்றன. பாஷாண்டிப் பேர்வழிகள் இதன் மூலம் பொய் புரட்டுகள் சொல்லிப் பணம் சேர்க்க முடி கிறது. அது மட்டுமா? நிலைமை இன்னும் படு மோச மாகிறது. 'சயன்ஸ் சர்வீஸ்' என்ற பத் திரிகையின் ஆசிரியரான வாட் ஸன் டேவிஸ் சொல்வது போல, "பொய்யிலிருந்து உண்மையைப் பிரித்து அறியத் தங்களுக்குள்ள இயல்பான ஆசையையும் இயற் கையான பொது அறிவையும் வாசகர்கள் இழந்து விடும்படி

செய்கிற ஆபத்து இதில் இருக்கிறது. சாஸ்திரீக முறையில் இல்லாமல், மட்டத் தரமாய்ச் சிந்திக்கிற விஷயங்களைச் சும்மா கொட்டிக் கொண்டே யிருந்தால், உண்மை அறிய விரும்பும் வாசகர்களுடைய மனப்போக்கு மந்தமாகி விடும்.''

சோதிடத்தைப் பற்றிய உண்மைகளை எவ்வளவு வேண்டுமானாலும் பரப்பிப் பாருங்கள். சில ஜனங்கள் சோதிடத்தை எப்போதும் நம்பத்தான் செய்வார்கள். ஏன்? மன வைத்தியர்கள் சொல்லுகிறபடி, அவர்களுடைய குறை நரம்புத் தளர்ச்சியால் ஏற்பட்ட இருக்கை கொள்ளா நிலையே தவிர வெறும் அறியாமை மட்டுமல்ல. "மகாத்மியக் கானல் நீர்'' என்பார்களே, அந்தச் சங்கதி. வாழ்க்கையில் தோல்விமேல் தோல்வி கண்டுகொண்டே வரும் ஒருவன் தன்னைப் பற்றி மிகப் பெருமையாய் எண்ணிக்கொண்டிருப்பான். அதனால், அவனுடைய விதியை நிர்ணயிப்பதற்குக் கிரகங்கள்கூடச் சேர்ந்து பாடுபடுகின்றனவாம். இப்படி ஓர் அசட்டுத்தனம். மேலும், கொலம்பியா சர்வ கலாசாலையில் வைத்தியர்களுக்கும் சத்திர சிகிச்சைக்காரர்களுக்கும் உள்ள ஒரு கல்லூரியில் மன வைத்திய இலாக்காவில் மருத்துவராக வேலை பார்த்து வருகிற ஒருவர் என்ன சொல்லுகிறார்?

"சிலபேர் தங்களுடைய எதிர் காலத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டாலே, எதிர் காலத்துக்கு வேண்டிய அனைத்தையும் செய்து விட்டதாக நம்பி விடுகிறார்கள். ஆக்க வேலை செய்வதை விடச் சோதிடனைத் தேடிப் போவது சுலபம்தான்.'' ஏமாற வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு அறிவு உதவுபடியாகாது. மற்றவர்கள் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞான உண்மை ஒவ்வொன்றையும் நிரூபித்துக் காட்ட முடியும். பூமியிலிருந்து சூரியன் இவ்வளவு தொலைவில் இருக்கிறதென்று ஒரு வான சாஸ்திரி சொன்னால், அவன் அதை எப்படிக் கணக்கிடுகிறான் என்பதை உங்களுக்கு அவன் திட்டமாக எடுத்துக் காட்ட முடியும். ஆனால், சோதிடத்தை நிரூபிக்க எந்த அத்தாட்சியையும் எடுத்துக் காட்ட முடியாது.''

✲

சம்பள விஷயம்

சொற்பச் சம்பளத்தில் வாழ்வது சிரமமான காரியமே யல்ல. சம்பள விஷயத்தை ரகசியமாக வைத்திருக்க விரும்பி, எல்லாவற்றையும் தட புடலாகச் செலவழித்துத் தீர்க்காம லிருந்தால், அதைக் கொண்டே வாழ்வது கஷ்டமல்ல.

—இரிஷ்

கல்யாண ரகசியம்

வெற்றிகரமான திருமணத்தின் ரகசியம் இதுதான்: பெரும் துக்கம் தரும் சம்பவங்களானாலும், அவற்றைச் சிறு சம்பவங்களாகக் கருதி நட. சிறு சம்பவம் எதையும் பெருந் துக்ககரமான சம்பவமாகக் கொள்ளாதே.

—ஹாரால்டு நிக்கல்சன்

முகபத் கான்

எம். அண்ணாமலை

முகபத் கான் என்ற பெயரை ஒரு சிலரே கேட்டிருப்பர். மோவுத்துக்காரன் என்றால் பலரும் அறிவர். "தேசிங்கு மன்னனுடைய அந்தரங்க நண்பன், சிறந்த போர் வீரன், மணக்கோலத்துட னிருந்தவன், நாட்டின் அழைப்பிற் கிணங்கப் போர்க் கோலம் பூண்டவன்" என்ற நினைவெல்லாம் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊற்றெறன எழும். இவனுடைய சரித்திரம், வீரம், நாட்டுப் பற்று, தியாகம் இவை போன்ற உயர் குணங்களின் உறைவிடம்.

இந்த வீரனுடைய சரித்திரத்தில நவீனமானவர்களும், அரசியல்வாதிகளும், தேசபக்தர்களும், அறியக் கிடக்கும் முக்கியமான விஷயம் ஒன்றே யாகும்: ஆர்க்காடு நவாப் செஞ்சியின் மீது படை எடுத்து வருகிறன்; ஆர்க்காடு நவாப் ஒரு முஸ்லிம்; செஞ்சி அரசன் ஹிந்து; ஹிந்து அரசன் மீது நவாப் போருக் கெழுந்து தலைநகரை முற்றுகையிட்டு விட்டான்; ஹிந்து அரசனிடம் சேவகம் புரிந்த முகபத் கான் "எதிரி ஒரு முஸ்லிம். நாமும் முஸ்லிம். முஸ்லிம் முஸ்லிமோடு சண்டையிடலாகாது" என்ற மனப்பான்மை கொண்டு நாட்டைக் காட்டிக் கொடுத்தானா? அரசனைக் கைவிட்டானா? நட்பை மறந்தானா? சுயநலமே பெரிதெனக்கொண்டு மணவினையில் ஆழ்ந்து கிடந்தானா? இல்லை! இல்லை!!

பின், என்ன செய்தான்?

"செஞ்சி ராஜ்யம்என்னுடைய ராஜ்யம்; நான் அந்நாட்டின் பிரஜை; அரசன் என் நண்பன்; நானே சுத்த வீரன்; நாட்டின் நலனே என் நலன்; அதற்கு ஊறு நேர்ந்தால், நான் பார்த்துச் சகிக்க மாட்டேன்" என்ற பிரதிக்ஞை பூண்டு, வீராவேசங் கொண்டு, அமர்க்களத்தை நோக்கி நடந்தான். வீரன் அடைய வேண்டிய முடிவை அடைந்தான்.

ஆர்க்காட்டின் சரித்திரம், விடுதலை பெற்ற இந்தியாவில், இந்திய சரித்திர நிபுணர்களால், நேரிய முறையில் எழுதப்படும். அதுகாறும், "கிளைவ் ஆர்க்காட்டு முற்றுகை," "வந்தவாசி யுத்தம்," "இந்தியச் சிப்பாய்கள் இங்கிலீஷ் சிப்பாய்களுக்கு அன்னமளித்துத் தாங்கள் கஞ்சி குடித்த கதை" இவைகள்தாம் போதிக்கப்படும். அடிமை நாட்டினருக்குச் சரித்திரம் ஏது?

தமிழ் நாட்டில், முகபத்கானை ஆர்க்காடு அளித்ததுபோல், இன்னும் எத்துணைத் தேசாபிமானிகளை எந்தெந்தப் பிரதேசம் அளித்திருக்கிறதோ! அறியக்கூடவில்லை! அறிந்தவர்கள் தேசியப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டால், தமிழ்நாட்டில் தேசிய ஒற்றுமை பெருகி, உணர்ச்சி நிரம்பி, செயல் மிகும்.

தமிழ் நாட்டில், இந்துக்களும் முஸ்லிம்களும் இன்றும் ஒரே குடும்பத்தினராய் வாழ்ந்து வருவது எதனால்? படித்துப் பாருங்கள்; ஞாபகம் வரும்.

பிரசவப் பொய்கள்

செவிலித்தாய்

1. குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கும் காலத்தில் மறுபடியும் கருத்தரிக்காது.

பொய். அனேகர் அப்படிக் கருத் தரித்திருப்பதற்குத் தக்க ஆதாரங்கள் உள்ளன.

2. கர்ப்பிணிக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டால், அது குழந்தையைப் பாதிக்கும்.

பொய். பிரசவத்துக்கு முன்பு ஏற்பட்ட அதிர்ச்சியினால் குழந்தைக்கு அங்க வீனம் ஏற்படுகிறது என்பது பொய் என்று டாக்டர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

3. தாய்ப் பாலைவிடச் சிறந்த உணவைக் குழந்தைக்கு அளிக்க முடியும்.

பொய். குழந்தைக்குத் தாய்ப் பாலைவிட ஆரோக்கியமானது வேறொன்றுமே இல்லை.

4. ஏதாவது ஓர் உணவுப் பொருளின்மேல் கர்ப்பிணி அதிக ஆசை காட்டினால், எப்படியாவது அவளுக்கு அதைக் கொடுத்தாக வேண்டும்.

பொய். அந்த மாதிரியான உணவுப் பொருள்கள் அனேகமாகச் சாப்பாட்டிலேயே கலந்திருக்கும். அப்படி அவர்கள் விரும்புவதற்கு மனம் தான் காரணம். உடனே அவர்கள் விரும்புகிற உணவுப் பொருள்களைக் கொண்டு வரவேண்டுமென்ற நியதி இல்லை—அடுத்த நாள் பார்த்துக் கொள்ளலாம்.

5. சில மாதங்களில் பிரசவித்து விடும்படியான நிலையிலிருக்கும் பெண்ணுக்கு இன்ன குழந்தைதான் பிறக்கும் என்று வைத்தியர்களால் தீர்மானமாகச் சொல்லிவிட முடியும்.

பொய். பிறக்கப் போவது ஆணா பெண்ணா என்று யாராலும் தீர்மானமாகச் சொல்லிவிட முடியாது.

6. உட்கொள்ளும் உணவைக் குறைத்துக் கொள்வதன் மூலமாகக் கர்ப்பிணி தனக்குப் பிறக்க இருக்கிற குழந்தையின் பருமனைக் குறைத்துவிட முடியும்.

பொய். நவீனக் கொள்கை இப்படியல்ல. பிறக்கப்போகிற குழந்தையின் பருமன் அதன் தாய் உட்கொள்ளும் உணவைப் பொறுத்ததல்ல.

7. எட்டு மாதக் குழந்தையைக் காட்டிலும் ஏழு மாதக் குழந்தையே ஜீவித்திருக்க வழியுண்டு.

பொய். பூரண வளர்ச்சியுடனே பிறந்து, ஆரோக்கியமான சுற்றுப் புறங்களிலே வளர்க்கப்படுகிற குழந்தைகள் தான் ஜீவித்திருப்பது நிச்சயம்.

8. மற்றப் பிரசவங்களை விட முதல் பிரசவம் சீக்கிரமாகவே நடந்து விடும்.

பொய். இந்த விஷயத்தில் அந்த மாதிரி வித்தியாசங்கள் இல்லை.

பிரசவ சம்பந்தமான விவரங்கள் சர்வ சாதாரணமானவைதான் என்று நினைக்கிறீர்கள். எங்கே, சரிபாருங்கள், பார்க்கலாம்.

"லக்ஸ்
டாய்லட் சோப்பை
உபயோகிப்பதுதான்
என் எளிதான
அழகுபடுத்திக்
கொள்ளும் முறை"
என்றுகூறுகிறார்
மாயா பானர்ஜி
லக்ஸ
டாய்லட் சோப்பின்
நுரையை
தாராளமாக
சருமத்தின் மேல்
தடவுகிறேன்.
சுத்தமான,
குளிர்ந்த
ஜலத்தில்
கழுவுகிறேன்.
LUX
TOILET SOAP
பின்பு,
உலர்ந்த
மிருதுவான
துண்டினால்
முகத்தை
துடைக்கிறேன்
ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு அப்பழுக்கற்ற சருமம் சௌந்தரியத்தை கொடுப்பதுமல்லாமல் அவர் வாழ்க்கைக்கே ஒரு விலை மதிக்கமுடியாத ஆஸ்தியுமாகிறது. அதனாலேயே, இந்தியாவிலுள்ள கியாதிபெற்ற சினிமா நட்சத்திரங்கள் எல்லோரும் தங்கள் அருமையான வனப்பை லக்ஸ் டாய்லட் சோப்பினால் பாதுகாத்துக் கொள்ளுகிறார்கள். நீங்களே இச் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை உங்கள் வீட்டில் வைத்துச் செய்யலாம்—30 நாட்கள் முயற்சித்துப் பாருங்கள்—இச் சோப்பின் சுறுசுறுப்பளித்து சுத்தம் செய்யும் சக்தியைக் கண்டு மகிழ்வீர்கள்.
சினிமா நட்சத்திரங்கள்
விரும்பும்
அழகையளிக்கும் சோப்
LTS. 137-50-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

ஆஸ்தமா
வியாதியுள்ள
வர்களுக்கு
நான்
இதைத்தான்
சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



புரோகித்ஸ்
ஸ்வாஸஹரி

கதா ரசிகர்களுக்கு ஓர் அரிய விருந்து

★.

உயர்ந்த ரகச் சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள், அயல் நாட்டுக் கதைகளின் மொழி பெயர்ப்பு இவைகளை ஒன்று சேர்த்து வருடத்தில் பன்னிரண்டு புத்தகங்கள்

கதைக் கடல்

என்ற வரிசையில் வெளியிடுகிறோம். இதுவரை கதைக் கடல் முதல் வரிசையில் மூன்று புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. வருடத்தில் வெளிவரும் 12 புத்தகங்களில் சுமார் 120 கதைகள் அடங்கியிருக்கும். சுமார் 1300 பக்கங்களுக்கு மேலுள்ள 'கதைக் கடல்' முதல் வரிசைக்கு நீங்கள் கட்டவேண்டிய சந்தாத் தொகை

ரூபாய் பன்னிரண்டு தான்

★

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை

புதிர்

வல்லிக்கண்ணன்

அவள் போக்கு அவனுக்கு ஒரு புதிராகவே தோன்றியது. அவள் அவனது தங்கைதான். ஆயினும், அவள் மனப்பான்மை அவனுக்குப் புரியவே இல்லை. பெண்களில் அவள் ஒரு தனி வகையான பெண்; இருந்தாலும், அனேக மங்கையரைப் போலவே அவளும் இருப்பாள். உணர்ச்சியின் பிம்பம் அவள். அவளுக்கும் ஆவல் இருக்கும். பிறரைப் போல், உல்லாசமாகத் திரிய எண்ணம் இருக்கும். ஆயினும், அவ் வுணர்ச்சியை அவள் தன் இதயத்துள் வைத்து அமுக்கிக் கொல்கிறாள்-என்று அவனுக்குத் தெரியும்.

சந்திரனுடைய பெற்றோர்கள் உயிருடனிருந்தால், அவன் இத்தகைய பிரச்னைகளை எல்லாம் தன் மேல் இழுத்துப் போட்டுக் கொள்ள மாட்டான். பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்பும் அவன் தலையில்தான் குடும்ப பாரம் அத்தனையும் விழுந்தது, கடமை எனும் பெயரால். கொந்தளிப்புடன், எல்லையற்றுப் பரந்து கிடந்த வாழ்வுச் சாகரத்திலே, அவனும் அவன் தங்கை ராஜமும் பலமற்ற இரு தோணிகள் போலத் திக்குத் தெரியாது விடப்பட்டனர்.

ராஜத்துக்கு இருபது வயது தான் ஆகிறது. அதற்குள், அவளைப் பொறுத்த வரையில், வாழ்வின் மேடு பள்ளங்களை உணர்ந்து விட்டாள். வாழ்வுக் கொடியில் பூத்த மலர் காலச் சூறையால் தாக்குண்டு உதிர்ந்து விட்டது. கல்யாணமான இரண்டு வருஷங்களிலேயே அவள் கணவன் கல்யாணசுந்தரம் தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டான். அவனது சாவுக்குப் பின், தன் பெற்றோர்களுடனேயே ராஜம் வசித்தாள்.

அவள் நிலைக்காக ஏங்கிய தாய் தந்தையரைப் போல், அவளது ஒரே சகோதரன் சந்திரனும் பரிவுடன் நடந்து வந்தான். அமைதி நிலவிய அக் குடும்பத்திலே தாய் தந்தையர் மீது மரணத்தை விட்டு எறிந்ததன் மூலமாகக் காலம் ஒரு கொந்தளிப்பை உண்டாக்கியது.

இளமையிலேயே ஏமாற்றத்தை நுகர்ந்த ராஜம், வாழ்வில் வறட்சியை உணரக் கூடாது என்றே சந்திரன் எண்ணினன். அன்பு நிறைந்த சகோதர உள்ளம் அவள் நன்மையை நாடித் துடித்தது. அவளுக்காகத் தனது சௌகரியங்களை விட்டுக்கொடுக்கவும் அவன் தயங்கியதில்லை.

"என்ன சந்துரு, நாங்கள் கண்ணை மூடு முன் உனக்கொரு கல்யாணம் செய்து, கண்டு களிக்க வேண்டாமா? அதற்கு ஏற்பாடுகள் செய்யலாமா?" என அவன் தாய் அடிக்கடி கேட்பதுண்டு. அதற்குக்கூட அவன் இசையவில்லை. இப் பேச்சை எடுத்த வுடனேயே அவன் மனத்தில் சாம்பிக் குவியும் சோக சித்திரம் ராஜத்தின் நினைவே எழுந்தது.

"வாழ்வில் நாம் அழுவதற்காகவா பிறந்தோம்? ஒரு மலர் உதிர்ந்தால்...மறுபடியும் பூப்பதில்லையா?..."

தானும் அவளை விட்டுப் பிரிந்து, அவள் தனிமையை அதிகரிக்கச் செய்வதா? உலை மூக்குப் போல அவள் அனல் மூச்சு எரித்து, வாழ்வை வறண்ட பாலையாக எண்ணி எண்ணி ஏங்க, தன் வாழ்க்கையை மட்டும் இன்பப் பூங்காவாக மாற்றிக் கொள்வதா? இத்தகைய கேள்விகள் அவன் மனத்தில் அலை மோதின.

ஆகவே அவனது பெற்றோர்கள் "ஹும். என்னவோ! நாங்கள் செய்தது அவ்வளவுதான்! அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி, குத்து விளக்குப் போலக் குடும்பத்தை ஒளியுறுத்தும் வாழ்வரசி ஒருத்தியைக் காணலாம் என்று எண்ணினோம். பயனில்லை" என்ற குறையுடனேயே தங்கள் சரித்திரத்தை முடித்துக்கொண்டார்கள்.

காலம் ஓடிக்கொண் டிருந்தது. வாழ்வில் பிடிப்பற்றுத் திரியும் இத் திவலைகளை அது சட்டை செய்யவா போகிறது? ஆனால் சுற்றியுள்ள மனிதர்கள் அப்படி இருக்க வேண்டுமென்பது நியதி இல்லையே! அவர்களுக்கு இவ்விருவரைப் பற்றிய கவலை எழுந்தது.

"என்ன, இப்படியே இருந்தால்? கல்யாணம் செய்து கொள்ளப்பா!" என்று பலரும் போதித்தார்கள். "ஏன், உன் தங்கையின் நிலைமையைப் பற்றி யோசிக்கிறாயா? இப்பொழுது தான் சகஜமாகி விட்டதே, அவளுக்கு மறுமணம் செய்து வைத்தால் போகிறது" என்று சிலர் சொன்னார்கள்.

குவிந்துள்ள மலர் முகையில் சோபையைப் புகுத்தும் பனித் துளிபோல, சந்திரன் மனத்திலே இப் பேச்சு ஒரு மலர்ச்சியை உண்டாக்கியது. "அதுவும் நல்ல யோசனைதான்" என அவனுக்குப் பட்டது. அந்த மகிழ்வு அவனுடைய நலனைப் பற்றியது அல்ல. அவனது சகோதரியைப் பொறுத்ததுதான்.

அவள் நிலைமை அவனை வாட்டியது. வாழ்வில் முழுதும் அலரும் முன்பே, மலரைப் பறித்துக் கசக்கி எறிவதா? அவள் அப்படித்தான் சாம்பிக் குவிய வேண்டுமா? அதுதான் கடவுள் எண்ணமா? அப்படி யிராது. "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என அவன் இதயம் ஒலித்தது. அவள் வாழ்க்கை வறண்டு விடாமல் அதில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும். அதற்கு அவள் என்ன சொல்வாளோ என்ற ஐயம் எழாமலில்லை.

"அவள் என்ன சொல்லப் போகிறாள்! அவளும் ஒரு பெண் தானே! உணர்ச்சியுள்ள யார் தான் வாழ்வைப் பாழாக்க விரும்புவார்கள்? அவள் மனமும் இன்பத்தை எதிர்பார்த்து, ஏங்கத்தான் செய்யும், மழைத் துளிக்காக வானை நோக்கிக் கிடக்கும் தரிசு நிலம் போல" என அவன் நினைத்தான். ஆயினும் அவளைக் கேட்கத் துணிவு பிறக்கவில்லை.

அவளோ......?

அவள் எப்பொழுதும் வாடி வதங்கிக் காட்சி யளித்தாள். அவள் மனமும், முகமும், கண்களும், நடையும் மோன பாஷையில் சோக கீதம் பாடின. காண்போர் மனத்தில் அரிப்பை உண்டாக்கும் சோக மலராகவே அவள் மாறிவிட்டாள். எதிலும் சிரத்தை இல்லாமல் தன் கட

மையை ஒழுங்காகச் செய்து முடித்து விட்டு, தனியிடத்தில் அமர்ந்து வானத்தையே உற்று நோக்குவாள். அங்கு அவள் எதைக் கவனிக்கிருள்?

தன்னை ஓர் உலவும் சோகசிற்ப மாகச் சிருஷ்டித்துவிட்ட பிரம னிடம் மௌனமாகப் பிரார்த்தனை செய்கிருளா? அல்லது தனது வாழ்வின் கதியையும், அந்த மற்று விரிந்து கிடக்கும் வறண்ட வான வெளியையும் ஒப்பிடுகிருளா? அதுதான் சந்திரனுக்கு விளங்க வில்லை. தன்னையே யந்திரமாக மாற்றிக் கொள்ளும் 'மனித ஜந்து' விடம் வாழ்வமிர்தத்தைப் புகட்டுவது எப்படி?

தான் ராஜத்தின் தோழியாகவோ, தாயாகவோ இருந்தால் மனம் விட்டுப் பேசி அவள் மன மூலையில் பதுங்கிக் கிடக்கும் ரகசியங்களை ஆராயலாம். இப்பொழுது என்ன செய்வது? இதுவே அவன் தயக்கம்.

நாட்கள் ஓடின. ராஜம் கவலையால் தேய்ந்து வருவதாக அவனுக்குத் தோன்றியது. இதற்கு ஒரு முடிவு கண்டுவிட வேண்டும் என அவன் துணிந்து விட்டான்.

அவள் வழக்கம் போல் 'தன்னை மறந்த லயந்தன்னிலே' 'வான வளைய'த்தைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தாள். அவன் அவளை அணுகினன். தன் முன் அவன் வந்து நின்றதுகூட அவளுக்குத் தெரியாது! 'ராஜம்' என்ற மெல்லிய குரல் அவளைத் திடுக்கிட வைத்தது. மிரண்டு நோக்கினள். சந்திரன்தான்! சிறிது முயற்சியின் பலனக அவள் உதடுகளில் சாரமற்ற புன்னகை நெளிந்தது. அவள் வாய் திறந்து பேசவில்லை.

"என்ன ராஜம், ஏன் ஒரு மாதிரி இருக்கிருய்?" என்று அவன் கேட்டான்.

அவளோ சுவாரஸ்யமற்ற தொனியில் "என்ன மாதிரி! தினம் போலத்தான் இன்றும்" என்ருள்.

பிறந்த பேச்சை எப்படி வளர்ப்பது என்ற கவலை அவனுக்கு. எங்கெல்லாமோ சுற்றிய சம்பாஷணையை முக்கிய விஷயத்துக்கு இழுத்து வருவது அவனுக்குச் சிரமமாக இருந்தது. நல்ல வேளையாக ஒரு சம்பவம் நினைவில் துள்ளியது.

"ஆமாம், லலிதாவுக்குக் கல்யாணமாகி விட்டதாமே" என்ருன். "எந்த லலிதா?" என்ற கேள்வி அவன் எதிர்பாராதது. "லலிதா தெரியாது, லலிதா! உன் கூடப் படித்த குறும்புக்காரப் பெண்...அவள் கணவன்கூடச சென்ற வருஷம் இறந்து விட்டான் என்று......"

"ஆமாம், அவளா? ஹூம்... அவளுக்கா கல்யாணம்?"

"ஊம்......மறுமணம். ஆம். அதில் என்ன குற்றம்? எவ்வளவு நாள்தான் அழுது அழுது பொழுது போக்குவது? வாழ்வில் நாம் அழுவதற் காகவா பிறந்தோம்? ஒரு மலர் உதிர்ந்தால் அந்தச் செடி அப்படியே கருகிப் போகிறதா? மறுபடியும் பூப்பதில்லையா? வாழ்வுக் கொடியிலும், காலத் தென்றலின் மோதுதலால் மலர்ந்து மணம் பரப்பிய முதல் மலர் உதிர்ந்து விட்டால், அப்புறம் கொடியே பட்டுப் போக வேண்டியது தானு? மறுமலர்ச்சி ஏன் கூடாது...?"

அவன் பிரசங்கம் அவளை வியப்பில் ஆழ்த்தியது. "ஏது, இன்று பேச்சு புது மாதிரியாயிருக்கிறதே!" என எண்ணினளோ? "என்ன சொல்லுகிருய் அண்ணு?" என்ருள் அவள்.

'ராஜம், உனக்காகத்தான் சொல்லுகிறேன். நீ எத்தனை நாளைக்கு இப்படி அழுது சாவது? சோக உணர்வைப் போக்கடிக்க ஏற்ற வழி இது. நீ மறுமணம் செய்துகொண்டால் என்ன?'' என்று வினவிய வண்ணம் அவள் முகத்தை நோக்கினான். அவள் முகம் சலனமற்றிருந்தது. அவன் பேச்சு அவள் உள்ளத்தைத் தொடவில்லையா?

"என்ன ராஜம்?'' என்று கேட்டான்.

மீண்டும் "உனக்கேன் அண்ணா இந்தக் கவலை? நீ வேண்டுமானால்...''

"அது எப்படி முடியும்? நீ கஷ்டப்படுவது, நான் சுகமாக இருப்பதா?''

"எனக்கு மறுமணத்தில் இஷ்டமில்லை'' என்றாள் அவள். "ஏனோ?'' என்ற கேள்வியைத் தூண்டியது அது.

"என் இஷ்டம். என் வாழ்வைப் பற்றிய கவலை எனக்கு அல்லவா வேண்டும்?'' என்றாள் அழுத்தமான குரலில்.

"கணவன் இறந்தால் தன் வாழ்வையும் பாழ்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற சம்பிரதாயத்தை நாகரிக யுவதியாகிய நீயும் அனுஷ்டிக்க விரும்புவாய் என்று நான் நினைக்கவில்லை...''

அவன் பேச்சு அவளது பெண் இதயத்தைக் குத்தியதா? ராஜம் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். உணர்ச்சியால் அவள் உதடுகள் துடித்தன. "அண்ணா, நீ சுகத்தோடு வாழ விரும்பினால் கல்யாணம் செய்துகொண்டு வாழேன். நானா அதற்குத் தடையாக இருக்கிறேன்? என்னை வெளியேற்ற நினைப்பிருந்தால் ஏன் மறைமுகமாகப் பேசவேண்டும்? எங்காவது போய்விடு என்றால்...''

வார்த்தைகள் விக்கின. அவள் கண்களில் நீர் பெருகிச் சிந்தியது.

"ராஜம்...ராஜம்! நான் என்ன சொன்னேன்? ஐயோ, உன் க்ஷேமத்தை நாடும் உன் சகோதரனா உன்னைத் தடையாகக் கருதுவான்! ராஜம், இன்னும் என்னை நீ நன்கு உணரவில்லையா?'' என்று தழுதழுத்த குரலில் மொழிந்தான்.

ஆனால், ராஜம் அங்கிருந்தால் தானே! அவள் எழுந்து தன் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள். அவள் சொல்லாலும் செயலாலும் அவன் உள்ளம் புண்பட்டது. அதன் பிரதிபலிப்பாக அவனது விழிக் கோணத்திலே நீர் தேங்கியது.

அவள் மனப் போக்கை அவனால் உணரமுடியவில்லை. அவனுக்கு அது பெரும் புதிராக இருந்தது. ஒன்றும் ஓடாமல் அவன் நெடுமூச்சு உயிர்த்தான். அந்த அனல் மூச்சு அவன் மனப் பாரத்தை ஆவியாக மாற்றி விடவா போகிறது!

✲

ஆண்மணிகள்: "மாமி! சாதாரணமாக ஆண்களிடம் பெண்களுக்கு எப்போது சிரத்தை குறையும்?'' என்று, எண்பது வயதான தன் மாமியாரைப் பார்த்து ஜார்ஜ் பெர்னார்ட் ஷா கேட்டார்.

"என்ன, ஜார்ஜ், இப்படிக் கேட்கிறாய்? என்னைவிட வயதான ஒருத்தியிடம் அல்லவா நீ இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும்!'' என்று பதில் சொன்னாள் அந்த எண்பது வயதுக் குமரி!

உள்ளும் புறமும்

சுரபி

மனிதன் கேட்கிறான் :

பாம்பே உன்னைப் படைத்தவரார்
பளபள வென்றுடல் கொடுத்தவரார்
தீம்பா லமுதம் படைத்தாலும்
சீறும் மதியைக் கொடுத்தவரார்

அரவே உன்னைப் படைத்தவரார்
அழகை அள்ளிக் கொடுத்தவரார்
அரனுர் உருவில் அமர்ந்தாலும்
அஞ்சும் நஞ்சைக் கொடுத்தவரார்

இரவும் பகலும் சேர்ந்தாற்போல்
இசையும் வசையும் சேர்ந்தாற்போல்
நறவும் நஞ்சும் சேர்ந்தாற்போல்
நாகா உன்னைப் படைத்தவரார்

கொல்லும் புலியைக் கொண்டு ஒரு
கோயிற் குள்ளே வைத்தாற்போல்
கல்லுங் கரையும் நஞ்சதனைக்
கனகச் சிமிழில் வடித்தவரார்

பாம்பு சொல்கிறது :

உன்னைப் படைத்த உத்தமனே
உலகை வகுத்த பெரியவனே
என்னை உலகில் படைத்திட்டான்
எழிலார் உருவங் கொடுத்திட்டான்

உள்ளும் புறமும் ஒன்றென்றே
உலகின் தலைவன் நானென்றே—வெறி
கொள்ளும் மனிதன் தன்னில்யாம்
கொடியம் அல்லேம் அல்லேமே

பட்டுடையால் வெற்றுடலை மூடமாட்டோம்
பகட்டான ஆபரணம் பூணமாட்டோம்
சட்டமொடு சாத்திரங்கள் பேசமாட்டோம்
தந்திரமே மந்திரமாய்க் கொள்ளமாட்டோம்

நெஞ்சகத்தே நஞ்சதனை வைக்கமாட்டோம்
நெக்குருகத் தேன்மொழிகள் சொரியமாட்டோம்
கொஞ்சுமொழிக் குதலையரை முறிக்கமாட்டோம்
குவலயத்தில் புனிதரெனத் திரியமாட்டோம்

பஞ்சைகளை அடிவயிற்றில் அடிக்கமாட்டோம்
பரமஉப காரியெனத் திரியமாட்டோம்
அஞ்செழுத்தும் ஆறெழுத்தும் ஓதமாட்டோம்
அகத்தினிலே பாதகத்தை வளர்க்கமாட்டோம்

தும்பைநிறக் கதராடை போர்த்தமாட்டோம்
தொண்டரென்றும் பக்தரென்றும் திரியமாட்டோம்
கும்பலிலே கோவிந்தா போடமாட்டோம்
கூசாமல் ப்ளாக்மார்க்கட் பண்ணமாட்டோம்

மங்கையரே தெய்வமெனப் பேசமாட்டோம்
மறுகணமே குச்சுகளில் நுழையமாட்டோம்
பங்கிடுவீர் உணவையெனப் பதறமாட்டோம்
பாதாளத்தில் மூட்டைகளை அடுக்கமாட்டோம்

அணியணியாய்ச் சேனைகளைத் திரட்டமாட்டோம்
அவனியெலாம் ஓர்குடியென் றறையமாட்டோம்
அணுக்குண்டை ஜேபியிலே வைக்கமாட்டோம்
அமைதிநிலை நாட்டவழி தேடமாட்டோம்

புனிதனவன் தந்தவுடல் தன்னைத்தாங்கிப்
புற்றிடத்தே ஒடுங்கிஉயிர் வாழ்வோம் ஐயா
மனிதனெனும் பிராணியினைக் கண்டபோழ்தில்
மைல்தூரம் பறந்தோடி ஒளிவோம் நாமே.



எங்கள் யோசனை

பொ. தி.

பாடப் புத்தக அங்கீகாரக் கமிட்டியைத் தேசியவாதிகள் அடங்கியதாகச் செய்ய வேண்டும். அவர்களின் முடிவுகள் கல்வி மந்திரியின் அங்கீகாரம் பெற்றே அமுலுக்கு வரவேண்டும்.

2. ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் தவிர, ஏனைய பாடப் புத்தகங்களின் பெயர்ப் பக்கமும் முகவுரையும் உட்படச் சகலமும் எந்தச் சுதேச பாஷையில் பாடப் புத்தகம் தயாரிக்கப் படுகிறதோ அந்தச் சுதேச பாஷையிலேயே இருக்க வேண்டும்.

3. விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றில் பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் ஆசிரியர்கள் அந்த விஷயங்கள் சம்பந்தமான ஆங்கில மொழிகளுக்கு ஒவ்வொரு சுதேச பாஷையிலும் ஒரே விதமான சுதேச பாஷைப் பதங்களையே உபயோகிக்க வேண்டும்.

4. விஞ்ஞானத்தில் சகல தேசத்து அறிஞர்களும் செய்வது போலத் தினசரி வாழ்க்கையிலும் சர்க்கார் "மெட்ரிக் முறை" அளவைகளையே உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

5. விஞ்ஞானத்திலும் விஞ்ஞான முறையிலும் சிறு வயதிலேயே சுவை உண்டாகும்படி செய்வதற்காகக் குழந்தைகளுக்கு ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே விஞ்ஞானத்தைச் "சோதனை" செய்து காட்டிக் கற்பிக்க வேண்டும்.

6. முதியோர்க்குக் கல்வி கற்பிப்பதோடு பொது ஜனங்களிடையே விஞ்ஞானம், சரித்திரம், அரசியல், பொருளாதாரம் ஆகியவை சம்பந்தமான விஷயங்களைப் பிரசங்கங்கள், பொருட்காட்சி, சோதனை, துண்டுப் பிரசுரங்கள் முதலியன மூலம் பரவச் செய்ய வேண்டும்.

7. இந்திய தேச சரித்திரத்தில் வட நாட்டுச் சரித்திரமே அதிகமாகக் கற்பிக்கப் படுவதால் இனிமேல் தென்னிந்திய சரித்திரத்தை அதிகமாகக் கற்பிப்பதோடு அதைத் தனிப் பரீட்சைக்குரியதாகச் செய்யவும் வேண்டும்.

8. குழந்தைகட்குக் கற்றுக் கொடுக்கும் அரசியல் பாடங்களில் அனேகம் தவறாக இருப்பதால், அதற்கு வேண்டிய பாடப் புத்தகங்களைத் தேசியவாதிகளைக் கொண்டு தயாரிக்க வேண்டும்.

9. மனிதனுடைய வாழ்வில் உணவும் மணமுமே அஸ்திவாரமான விஷயங்களாயிருப்பதால் உடல், உணவு, மணம் என்ற விஷயங்களை மேல் வகுப்புகளில் கட்டாயப் பரீட்சைப் பாடங்களாக ஏற்படுத்த வேண்டும்.

10. குழந்தைகளின் அறிவை அபிவிருத்தி செய்வதோடு, தினந்தோறும் கட்டாயமாகப் பாட்

நம் கல்வி மந்திரியிடம் ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளையும் நண்பர்களும் நேரில் செய்திருந்த வேண்டுகோள் இங்கே தரப் பெற்றுள்ளது. விஷயம் உட்னே கவனிக்கப் பெறும் என்று அறிகிறோம்.

டுக்கள், கதைகள், நாடகங்கள் மூலம் நல்ல உயர்ந்த உணர்ச்சிகளை உண்டாக்க வேண்டும்.

11. மனிதன் அறிவும் உணர்ச்சியும் பெற்றாலும், சமூக சேவை செய்தா லொழிய வாழ்வு பயனற்ற தாவதால், குழந்தைகள் தினந்தோறும் ஒரு மணி நேரமாவது சமூக சேவையில் ஈடுபடும்படியாகச் செய்ய வேண்டும்.

12. பாடசாலைகளில் சித்திரம் வரைவதையும், இசை பயில்வதையும் கட்டாயமாகப் பரீட்சைப் பாடங்களாகச் செய்ய வேண்டும்.

13. இயற்கையோடு வாழ்தல் மனிதனுடைய பண்பாட்டுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதால், குழந்தைகளை வாரம் ஒரு முறையேனும் இயற்கையை அனுபவிக்கக் கூடிய இடங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

14. சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்படும் தமிழ்ப் பாடப் புத்தகங்களில் "புண்ணியம் ஆம் பாவம் போம்" போன்ற "தலைவிதிக் கொள்கை"ச் செட்யுட்களை அறவே விலக்கிவிட வேண்டும்.

15. மேற்கூறிய தமிழ்ப் பாடப் புத்தகங்களில் நீதிச் செய்யுட்களே நிறைந்திருப்பதால், அவைகளைக் குறைத்துவிட்டுப் பெரிய கவிஞர்களுடைய உணர்ச்சி ததும்பும் சரளமான செய்யுட்களைச் சேர்த்து இலக்கியச் சுவையை எழுப்ப வேண்டும்.

16. பாடப் புத்தகங்களில் ஆடம்பர ஆசை, முதலாளித்துவக் கொள்கை, சாதிமத வேற்றுமை, கடவுள் உண்மை போதனைபோன்றவைகளை ஆதாரமாகக் கொண்ட வாசகங்களையும் கருத்துக்களையும் அறவே நீக்கி விடுதல் வேண்டும்.

17. தேகப் பயிற்சியைப் பரீட்சையில் தேறுவதற்கு இன்றியமையாத பாடமாகச் செய்தல் வேண்டும்.

18. இந்தியச் சாரண வகுப்பில் சகல குழந்தைகளையும் கட்டாயமாகச் சேருமாறு விதி செய்ய வேண்டும்.

19. ஹைஸ்கூல் படிப்பு முடியும் வரை எல்லாக் குழந்தைகளுக்கும் பாடசாலையில் தினந்தோறும் "கால்ஷியம்" கொடுக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.

20. குழந்தைகளுக்குள் வேற்றுமை உணர்ச்சி உண்டாகாமல் இருப்பதற்காக எல்லோரும் ஒரே விதமான சுகாதார உடை அணிய வேண்டும்.

✲

சத்தியம் பெற்ற பரிசு!

குணேந்திரர் என்பவர் ரவீந்திரநாத தாகூருடைய சிற்றப்பாவின் பிள்ளை. ஒரு சமயம் ரவீந்திரரின் பள்ளித் தோழரான சத்தியம் என்பவருக்கு ஒரு பரிசு கிடைத்தது. தாகூர், அதைத் தம் கையில் ஏந்திய வண்ணம், குணேந்திரரிடம் காண்பித்தார்.

"சத்தியம் பெற்ற பரிசு!" என்ற களிப்புடன் கூறின தாகூரைப் பார்த்துக் குணேந்திரர், "உனக்கு ஒன்றுமில்லையா?" என்று கேட்டார். தாகூர், சற்றும் தயங்காமல், "எனக்குப் பரிசு இல்லை, எல்லாம் சத்தியம் பெற்றவை" என்று பதிலளித்தார்.

தெ. முத்துராமன், மதுரை

'ஓட்டல்' மகிமை

கே. வீ. வீரராகவன்

"இனிமேல் இட்டலி என்பது இல்லை ; தோசைக்கெல்லாம் ஆசைப்படாதீர்கள்" என்று சர்க்கார் நம்மை எச்சரிக்கும் இந்தக் காலத்தில், 'ஓட்டல்'களின் எதிர்காலம் எப்படி யிருக்குமோ என்று பயப்பட வேண்டியது தான். ஆனல், மகத்தான மாறுதல்களெல்லாம் பெற்று, விதவிதமாய் வளர்ந்து முன்னேறிய 'ஓட்டல்' என்னும் நவீன சாதனத்தின் சரித்திரம் சிந்தனைக்குத் தனி விருந்து.

'ஓட்டல்' தொழிலாளிகளைச் "சனாதனத்துக்குச் சாவுமணி அடித்தவீரர்கள்" என்று வ. ரா. அவர்கள் புகழ்ந்துபாராட்டினர். இது முற்றிலும் உண்மை. அன்ன விக்கிரயம் செய்தல் பாபம் என்பது சனாதன தர்மத்தின் விதி. தர்மத்தின் நிலைக்களத்தில்தான் அதர்மம் ஆரம்பமாகிறது என்ற இயற்கை நியதிக்கொப்ப, ஆலயங்களிலேயேதான் அன்ன விக்கிரயம் ஆரம்பமாயிற்று. கோவில் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட "சுதந்தரம்" என்ற பங்கை அவர்கள் காசுக்கு விற்பது இன்றும் கண்கூடு. இந்த வழக்கம் முற்றியபின், பல கோவில்களில் மடைப்பள்ளி (சமையல் அறை)யை அடுத்துப் 'பத்துக் கடை' என்று அழைக்கப்பட்ட அன்ன விக்கிரய சாலையே ஏற்பட்டு விட்டது.

'பத்துக் கடை'க்கு அடுத்த வளர்ச்சி, தமிழ் நாட்டின் தனிப் பெருஞ் செல்வமான தண்ணீர்ப் பந்தல். வெய்யிலில், கோவில் குளங்களுக்குப் போவோர் வழி நடக்கும் களைப்புத் தீர, நீரும் மோரும் வழங்க ஏற்பட்ட விடுதிகளே தண்ணீர்ப் பந்தல்கள். காலக் கிரமத்தில் இவை மாறி, மண்குடிலில், மணையிட் டமர்ந்து, மலிவான தின்பண்டங்களை மக்கள் புசிக்க வசதி தந்த இடங்களுக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது.

'ஓட்டல்' வளர்ச்சியின் அடுத்த படிதான் சாதாரணப் 'பிராமணாள் காப்பிக் கிளப்' பிராமணர்கள் ஆதிக்கத்தின் பயனாய் வந்த இந்தக் 'கிளப்'பில் எச்சில் பண்ணிக் குடிப்பதோ, பாத்திரத்திலேயே கை அலம்புவதோ முடியாத காரியம். பெயருக்கு மட்டும்தான் இது 'பிராமணாள் காப்பிக் கிளப்'பே ஒழிய, இதில் சாப்பிடுபவர்கள் முக்கால் பங்குக்குமேல் பிராமணரல்லாதாரே! 'பிராமணர்களுக்கு மட்டும்' என்று ஜாதி மேன்மையைக் காட்ட ஒதுக்கி விட்ட அறையிலும் நாயர்களின் நடமாட்டம்தான் அதிகம்!

இந்தக் 'கிளப்' வளர்ந்து பெருத்து விட்டால், அது ஒரு 'பவன்' ஆகிவிடும். டம்ளர், தட்டு இவைகளின் கலகல வென்ற சத்தம் காதைப் பிளக்க, ரேடியோ ஒன்று ஒரு மூலையில் அலறிக்கொண்டிருக்க, "ரெண்டு பேர் மூணரை யணா!" என்று

நமக் கெல்லாம்—மணமானவர், ஆக வேண்டியவர், எல்லோருக்குந்தான்—'மாமியார் வீடு' எது தெரியுமா? அதுதான்...

தொண்டை கிழியத் தொழிலாளி கள் இரைச்சல் போட்டுக் கூவும் சந்தை இரைச்சல் நிறைந்த இடந் தான் ‘பவன்.’

அப்புறம் வந்தன ஐயா நம் முடைய நவீன ‘கபே’க்கள்—குடும்பங்களுக்குத் தனி அறை, குளிர்ச்சி யளிக்கக் காற்றைக் கட்டுப் படுத்திய அறை, ‘ரிப்ரிஜ ரேட்டர்’கள், பட்சணப் பெயர் வகைகள் அழகழகாய் எழுதப் பட்ட பலகைகள், எங்கு நோக் கினும் முகக் கண்ணாடிகள், மழ மழ என்றிருக்கும் குழாயடிகள்—இப்படி, விதவிதமான வளர்ச்சி யும் வனப்பும் கொண்டு வளர்ந்து நிலைபெற்று விட்டன!

“ஓட்டலில்லா ஊரில் குடி யிருத்தல் பாழ்” என்பது நவீன நாகரிகத்தின் புதுமொழி. ஒரு பட்டணத்துக்குப் புதிதாய்ப் போகும் ஒருவனது முதற் கேள்வி “அருகில் ஓட்டல் எங்கே இருக்கிறது?” என்பதுதான். இன்றைய உலகில், ஓட்டலில் நுழையாத ஒரு பிரகிருதி உண் டானால், அது பத்தாம் பசலியி லிருந்து இங்கே தப்பிப் பிறந்த தோர் தனிப் பிறவிதான்! இந்த அதிசயப் பிறவியைக் கண்காட் சிச் சாலையில் வைத்துக்கூட நாம் கண்டு களிக்கலாம். சாதாரண மனிதன் பாஷையில், ‘ஓட்டல்’ நமக்கெல்லாம் ‘மாமியார் வீடு’!

நாகரிக உலகில் நடமாடி வரும் முக்கியமான மரியாதை, அரு கிலுள்ள ‘ஓட்டலு’க்கு அன்பர் களை அழைத்துச் சென்று, ஆளுக்கு அரை ‘கப்’ பாவது போடுவதுதான். ‘சிக்கரி’யுடன் கலந்து சிறந்து விளங்கும் அந் தக் காப்பியின் அழகிய மணம் ஆட்களைக் கவரும் அதிசய சக்தி தான் என்னே! “காப்பியில் கஃபீன் உண்டு; அது இருதயத் துக்குக் கெடுதி; உடம்புக்கு விஷம்” என்றெல்லாம் வைத்தி யர்கள் என்னதான் அச்சுறுத்தி யும், காப்பியின் மகத்துவம் அணுவளவும் குறைந்தபாடில்லை.

“ஜாதி மதங்களைப் பாரோம்—உயர் ஜன்மம் இத்தேசத்தில் எய் தினராயின்—வேதிய ராயினும் ஒன்றே, அன்றி வேறு குலத்த வர் ஆயினு மொன்றே” என் பதன் உண்மையை நிதர்சனமாய் எடுத்துக் காட்டுவது ‘ஓட்டல்’ ஒன்றுதான். நல்ல காலமாய், ‘ஹிந்துக்களுக்கு மட்டும்’, ‘பிரா மணர்களுக்கு மட்டும்’ என்ற பலகைகள் இந்தக் காலத்தில் முன் போல் அனேக ‘ஓட்டல்’களில் காணப்படுவதில்லை. ‘இந்து மிலிட் டரி ‘ஓட்டல்,’ ‘இரானி முகம் மதிய ஓட்டல்’ முதலிய ஜாதி வித்தியாசங்களும் எதிர்காலத் தில் எடுபட்டுவிடும் என்று எதிர் பார்க்கலாம்.

ஜாதிபேதத்தைக் கடந்த ‘ஓட் டல்’ இந்திய ஒற்றுமைக்கு நூதன முறையில் நம்மையும் அறியாமல் பாடுபட்டு வருகிறது. அந்தப் பலகாரப் பெயர் வகை யைத்தான் சற்றுப் படித்துப் பாருங்கள்!—டில்லி தர்பார், கல் கத்தா ரஸகுல்லா, பாம்பே அல்வா, மைசூர்ப்பாகு, மைசூர் உப்புமா, காஞ்சீவரம் இட்டலி-இப்படியாக இந்தியாவின் முக் கிய ஸ்தலங்களையும், க்ஷேத்திரங் களையும் நினைப்பூட்டி, பரத கண்டத்தின் பெருமையை நமக்கு உணர்த்தும் இந்த நற் சேவைக்கு ஒப்புண்டோ?

அது மட்டுமா? கடவுள் ஒரு வரே, ஆனால், பக்தர்களுக்கு அபயமளிக்க அவர் வெவ்வேறு உருவங்களில் தோன்ற வல்லவர் என்ற உண்மையைக்கூட அல் லவா ‘ஓட்டல்’கள் நமக்குப்

போதிக்கின்றன! ஒரே விதமான வஸ்துக்களின் சேர்க்கை, விதவிதமான வர்ணங்கள் கொண்டு வெவ்வேறு தின்பண்டமாய்த் தித்திப்புப் பகுதிகளை அலங்கரிக்கும் விந்தையே விந்தை! சில நாள் கழித்து, அதே பண்டங்கள் உரு மாறி, வெவ்வேறு விதமாக, நவ நவமான பெயர்கள் கொண்டு நம்மை நோக்கி விழிக்கின்றன. ஆத்மாவுக்கு அழிவு கிடையாது, ஓர் உடலை விட்டால் மறு உடலில் புகுந்து உலாவும் என்பது உண்மை, முக்காலும் உண்மை!

ஆழம் கண்டறிய முடியாத மனித சுபாவத்தின் மனப்பான்மையை மதிப்பிட்டறிய 'ஓட்டல்' உயர்ந்த இடம். 'ஓட்டல்' தாசர்கள் பாராட்டும் சொந்தந்தான் என்னே! அங்கே பலகாரங்கள் கொண்டு வைக்கும் தொழிலாளிகளை அவர்கள் ஆட்டி வைக்கும் பாடுதான் என்ன! வீட்டில், பாசி பிடித்த 'டம்ளரி'ல், அழுக்கு மிதக்கும் ஜலத்தை மனைவி அளிக்க, கை கட்டி வாய் பொத்தி, குறையொன்றும் சொல்லாமல் விழுங்கிவிடும் வீரர்கள், இங்கே அதட்டி உருட்டிச் செய்யும் அட்டகாசங்களுக்கு அளவே இல்லை!

சிலர் அந்த 'ஓட்டல் பில்' பணம் தரும் விதமே ஒரு தனி ரகம். ஜேபியி லிருந்து அலட்சியமாக நோட்டை எடுத்து, அங்கு அமர்ந்திருக்கும் சொந்தக்காரர் மீது வீசி எறியும் காட்சியே காட்சி! ஆனல், அவர் மட்டும் லேசுப்பட்டவரா? அந்த நோட்டை அப்படியே ஒரு பிடி பிடித்து, டிராமா நோட்டீஸை நாம் கசக்கி எறிவதுபோல் கசக்கிக் 'கல்லா'வில் போட்டு, பாக்கிச் சில்லறையைக் குறி பார்த்து விட்டுத் தள்ளும்போது அலட்சிய மெல்லாம் பறந்தோடி, நோட்டுக்காரர் சில்லறையைத் தேடிப் பிடிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

சாப்பிட வருகிற ஒவ்வொருவரையும் 'ஓட்டல்' தொழிலாளிகள் எடை போட்டுப் பார்த்து, ஆளுக்குத் தக்கபடி நடக்க அறிந்துகொண் டிருப்பதும் ஒரு விந்தையே! பார்த்தவுடனே, "இவன் இரண்டு போண்டா, அரை கப் காப்பி ஆசாமி; போண்டாவுக்கு இரண்டு மூன்று முறை சாம்பார் கேட்டு நம்மைக் காலை ஒடிக்க வந்தவன்," என்றே, "இவர் நாகரிகப் பேர்வழி; இன்றைய ஸ்பெஷல் என்று, மீந்துபோன சாமானை இவர் தலையில் கட்டினல், பேசாமல் சாப்பிட்டு விட்டுப் போவார்" என்றே அவன் எடை போட்டு விடுகிறான். அடிக்கடி வந்து, அனாயாசமாய்ச் சாப்பிட்டு, அதிகமாய்ப் பணம் கொடுப்பவர்களைக் கண்டால், அவனுக்கு அபாரப் பிரியம். அவன் பெயரைச் சொல்லி அழைத்து, "அதைக் கொண்டு வா; இதைக் கொண்டு வா" என்று உத்தரவிடும்போது, இருவருக்குமே ஒரு தனி இன்பம்! ரேடியோச் சத்தத்தையும், பாத்திரங்கள் உருளும் சத்தத்தையும் மீறி, அவன் சினிமா நட்சத்திரங்களைப் பற்றியும், பந்தயக் குதிரைகளைப் பற்றியும் வம்பளக்க ஆரம்பித்து விடுகிறான்!

'ஓட்டலின்' மகிமையே மகிமை! இட்டலியும் தோசையும் இல்லாவிட்டாலும், 'ஓட்டல்' வாழ்ந்தே தீரும், வளர்ந்தே தீரும் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை.

✻

பறித்த பூக்கள்

நாகரிகம் என்பது மனிதனுக்குக் கடமை வழியைக் காட்டுகின்ற ஒழுக்க முறையாகும். கடமையை இயற்றல் என்பதும், தர்மத்தை அனுஷ்டித்தல் என்பதும் ஒரே பொருளைக் கொண்டவை. தர்மத்தை அனுஷ்டித்தால், நமது மனத்தையும், மன விகாரங்களையும் அடக்கி, அவற்றின் மீது ஆட்சி பெறலாம். இவ்வாறு செய்தால் நாம் நம்மையே அறிந்து கொள்கிறோம்.

—காந்திஜி

உலகத்தின் நன்மையையும் நம்முடைய வருங்காலத்துச் சுகத்தையும் உத்தேசித்து, வேதவாழ்க்கையை அனைவரும் பின்பற்ற வேண்டும். பிளவுபட்ட வாழ்க்கையில் உழன்றுகொண்டிருப்பதில் பயன் ஒன்றுமில்லை. வேத வாழ்க்கை என்றால், பற்றற்ற முறையில் சமூகக் கடமைகளைச் செய்து, இடையூறுகளைக் கண்டு அஞ்சாமலும், தோல்வியைக் கண்டு கலவரப்படாமலும் ஒப்புரவும் தெய்வ பக்தியும் கொண்டு வாழ்நாளைக் கழித்தல். —ராஜாஜி

எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை, தவங்களுக் கெல்லாம் உயிர். உண்மை, சாஸ்திரங்களுக் கெல்லாம் வேர். உண்மை, இன்பத்துக்கு நல்லுறுதி. உண்மை, பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

—பாரதியார்

மாறுபாடில்லாத பிரம்மச்சரியத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதனாலே எல்லாக் கலைகளையும் மிக விரைவிலே கற்று விடலாம். ஒருவன் ஒரு முறை கேட்பவற்றைப் பிழையின்றி நினைத்திருக்கக் கூடிய ஞாபக சக்தி ஏற்படுகின்றது. இத்தகைய பிரம்மச்சரியம் இல்லாமையினாலே நமது நாட்டில் எல்லாம் அழிவடைந்து விட்டன.

—சுவாமி விவேகானந்தர்

அறியாமைதான் துயரத்தின் தாய்.

—இங்கர்சால்

வாழ்வில் பொல்லாத இருள் நெறியைக் கைவிட்டுத் தகைமை சான்ற சன்மார்க்கத்தை அறிஞன் பின்பற்றுவானாக. இல்லறத்தை விட்டுத் துறவியாகி, முன்பு ஆய்ந்துணருவதற்குச் சங்கடமாயிருந்த நிராசையின் பெருமையைச் சரிவர உணர்வானாக. இந்திரிய சுகத்தையும் பிற பொருள்கள் அனைத்தையும் துறந்து, அவன் தன் உள்ளத்தின் அழுக்கு முழுவதையும் அகற்றுவானாக. பூட்டிய குதிரைகளை இழுத்துப் பிடித்து அடக்கியாளும் தேர்ப்பாகனை யொப்பத் தன் புலன்களைக் கட்டுப்படுத்தியவனையும் கர்வத்தையும் நெஞ்சின் அழுக்கையும் அறவே யொழித்தவனையும் தேவர்களே மனப்பூர்வமாகப் பாராட்டுவார்களாக.

—புத்தர் பிரான்

*

கொரியா

ஆர். ராமநாதன்

ஜப்பானிய பாசிஸத்தின் காலடியின் கீழே விழுந்து கிடந்த கொரியா, பாசிஸ எதிர்ப்புப் போரிலே பண்பட்ட கொரியா, அடிமை விலங்கை உடைத்துத் தகர்த்தது. ஜப்பானிய பாசிஸத்தை வீழ்த்தின கொரியர்கள், பிற்போக்காளர்களையும் வேரறுத்தனர். அங்கே சுதந்தர சகாப்தம் பிறந்தது.

ஆனல், தியாகத்தாலும், ரத்தத்தாலும், கண்ணீராலும் கொரியர்கள் வளர்த்த சுதந்தரத்தை ஆழக் குழி தோண்டிப் புதைக்க முயலுகிருர்கள், கொரியப் பிற்போக்காளர்களும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும். கொரியாவில் குழப்பம் குடிகொண்டிருப்பதற்குக் காரணம் இது தான்.

ஜப்பானிய பாசிஸம் சரணுகதி அடைந்த பிறகு, கொரிய தேச பக்தர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். விடுதலை அடைந்த பிரதேசங்களில் ஜனங்களின் ஆட்சி தலையெடுத்தது. இது ஏகாதிபத்தியவாதிகளின் கண்களை உறுத்த ஆரம்பித்தது. ஜனங்களின் ஆட்சியை—ஜனங்களால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகளை—ஏகாதிபத்தியவாதிகள் கலைக்க முயன்றனர். ஆனல், ஜனங்களின் ஒன்றுபட்ட சக்தி இந்த முயற்சியை முறியடித்தது.

"இன்று கொரியாவில் செம்படையும், அமெரிக்கத் துருப்புகளும் இருக்கின்றன. கொரியாவின் எதிர் காலம் சம்பந்தப்பட்ட வரையில் இந்த இரண்டு நாடுகளும் வெவ்வேறு திசைகளில் செல்லுகின்றன."

காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை அளக்கும் அளவுகோல் தேர்தல். கொரிய தேச பக்தர்கள் தேர்தல் நடத்த வேண்டுமென்று கோரினர். இது கட்டுப்பாடாக மறுக்கப் பட்டது.

இன்று கொரியாவில் செம்படையும், அமெரிக்கத் துருப்புகளும் இருக்கின்றன. கொரியாவின் எதிர் காலம் சம்பந்தப்பட்ட வரையில் இந்த இரண்டு நாடுகளும் வெவ்வேறு திசைகளில் செல்லுகின்றன. சோவியத் யூனியன் கொரியாவின் சுதந்தரத்தை விரும்புகிறது; அபிவிருத்தியை ஆதரிக்கிறது. ஆனல், அமெரிக்க ஏகாதிபத்தியம் கொரியாவைப் பழைய நிலைக்கு — அடிமைத்தனத்துக்கு இழுத்துச் செல்ல முயலுகிறது.

அடிமைத்தனத்தை இனிமேல் கொரியர்கள் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். குடியரசுக்கு அஸ்திவாரக் கல் நட்ட கொரியர்கள், குடியரசைப் பாதுகாப்பார்கள்.

அடிமைத்தனத்தை அனுபவித்துச் சலித்த கொரியா, ஒரு விவசாய நாடு. இரண்டரைக் கோடி ஜனங்களைக் கொண்ட அந்த நாட்டில், பதினெட்டுச் சதவிகிதம் விவசாயிகள்தான் தங்கள் சொந்த நிலத்தைச் சாகுபடி செய்கிருர்கள். மொத்த நிலத்தில் சரி பாதி கொரிய நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தம்; கால் பங்கு ஜப்பானிய ஜமீன்தார்களுக்குச் சொந்தம். பெரும்

பான்மையோர் கூலிக்கு வேலை செய்யும் விவசாயிகள்.

பிரபுத்துவத்தில் நெளிந்த கொரியா, தாங்க முடியாத வரிச் சுமையால் தவிக்கிறது. அங்கே தானிய வரி அமுலில் இருந்தது. கண்டதில் பாதி வரியாகச் செலுத்த வேண்டும்.

பதினைந்து வருடங்களுக்குமுன் யுத்த மேகம் சீனவைச் சூழ்ந்தது. ஜப்பானிய பாசிஸ்டுகள் 1931-ஆம் வருடம், செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி மஞ்சூரியா மீது படை யெடுத்தனர். இதைத் தொடர்ந்து கொரியாவின் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டது. சீனமீது படை யெடுப்பதற்குக் கொரியாதான் தளம். ஜப்பானி லிருந்து யுத்த தளவாடங்களையும், தேவைப் பொருள்களையும் ஏற்று மதி செய்வது யுத்த காலத்தில் சிரமம். எனவே, கொரியாவில் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதில் ஜப்பானியர் கவனம் செலுத்தினர். ஜப்பானிய மூல தனத்துடன் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் கொரியப் பிற்போக்காளர்களுக்கும் பங்கு கிடைத்தது. இதன் மூலம் கொரிய தேச பக்தர்களுக்கு எதிராக கொரியாவில் பிற்போக்குச் சக்தியை ஜப்பானியர் சிருஷ்டித்தனர்.

புதிய தொழிற்சாலைகள் தோன்றினதும், தொழிலாளர்கள் வர்க்க ரீதியில் ஒன்றுபட ஆரம்பித்தனர். இதைக் கண்டு ஆளும் வர்க்கம் வெகுண்டது. தொழிற் சங்கங்கள் சட்ட விரோத மாக்கப்பட்டன. எனினும், தொழிற் சங்கங்கள் ரகசியமாக வேலை செய்தன. விவசாயிகள் சங்கமும் வளர்ந்தது. ஜப்பான் சரணகதி அடைந்ததும் தொழிற் சங்கங்கள் பகிரங்கமாக வேலை செய்ய ஆரம்பித்தன. ஒரு மாதத்தில் சுமார் எட்டு லட்சம் தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தனர்.

பாசிஸத்தை வீழ்த்த ஜனங்களின் கட்சிகள்—ஜனங்கள் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும்—ஜனங்களின் ராணுவத்தைச் சிருஷ்டித்தன. புரட்சிப் படை பிறந்து, வளர்ந்தது.

1945-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் ஜனங்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போர் புரிந்தனர். ஜனங்களின் ராணுவம் பல பிரதேசங்களைக் கைப்பற்றியது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஜனங்களின் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

விடுதலை பெற்ற பகுதியில் ஜனப் பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. சுதந்தரமானகொரியாவின் சட்ட திட்டங்களை வகுக்க ஜனங்களின் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஜனப் பிரதிநிதிகளின் கூட்டம். கொரியா குடியரசு என்று பிரகடனப் படுத்திற்று, புதிய குடியரசு ஜனங்களின் திட்டத்தையும் வகுத்தது. ஜப்பானியருக்குச் சொந்தமான நிலங்களைப் பறிமுதல் செய்து, அதை வேலை செய்யும் விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும்; சுரங்கங்களையும், தொழிற் சாலைகளையும் தேசத்துக்குச் சொந்தமாக்க வேண்டும்; பரிபூரண பிரஜா உரிமை ஜனங்களுக்கு வழங்க வேண்டும்; ஆண்—பெண் சமத்துவம் தழைக்க வேண்டும்; எட்டு மணி நேர வேலை உடனே அமுலுக்கு வரவேண்டும்; குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும். குடியரசு

உடனே செய்யத் திட்டமிட்ட வேலைகளில் இவை முக்கிய மானவை.

இவ்வளவும் நடந்த பிறகு நேச நாட்டுப் படைகள் கொரியாவில் பிரவேசித்தன. வடக்கிலிருந்து செம்படை வந்தது. தெற்கிலிருந்து அமெரிக்கச் சேனை நுழைந்தது.

வடக்கே, ஜனங்களின் ஆட்சி மலர்ந்தது. ஜனங்களின் ஜனநாயகத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரச் சோவியத் யூனியன் கொரியர்களுக்கு உதவி புரிந்தது.

ஆனால், தெற்கே பயங்கர ஆட்சி தலை தூக்கிற்று. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஜனங்களின் கமிட்டிகளை நசுக்கிற்று. தேசபக்தர்கள் வேட்டையாடப் பட்டனர். பிற்போக்காளர்கள் ஊக்கப் பட்டனர். கொரியாவை மீண்டும் அடிமைச் சகாப்தத்துக்கு இழுத்துச் செல்ல முயன்றது, அமெரிக்க ஏகாதிபத்தியம். ஆனால், விழிப்படைந்த ஜனங்கள் இந்த முயற்சியை உக்ரமாக எதிர்த்தனர். சுதந்தர சக்திகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமல் அமெரிக்க ஏகாதிபத்தியம் பின் வாங்கிற்று.

எனினும், அமெரிக்க ஏகாதிபத்தியம் தோல்வியை ஒப்புக்கொள்ள வில்லை. உண்மையான ஜனங்களின் கமிட்டிகளுக்குப் பதிலாக அமெரிக்கா போலி ஜனங்களின் கமிட்டிகளை ஏற்படுத்திற்று. இந்தக்கமிட்டிகளில் பிற்போக்காளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். சிறகு ஒடிந்த கொரியப் பிற்போக்காளர்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தயவால், மீண்டும் உயிர் பெற்றனர். ஜப்பானியர் காலி செய்த ஸ்தானத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஸ்வீகரித்தது. தெற்கே கொடுங்கோன்மை ஆரம்பமாயிற்று....

கொரியாவை நிர்வகிக்கும் பொறுப்பை நான்கு வல்லரசுகளிடம் (சோவியத் யூனியன், அமெரிக்கா, சீனா, பிரிட்டன்) ஒப்படைக்க வேண்டும் என்று மாஸ்கோ மகா நாடு முடிவு செய்தது. கொரியாவில் ஜனநாயகக் குடி அரசை ஏற்படுத்த வேண்டு மென்றும் மாஸ்கோ மகாநாடு முடிவு செய்தது. இந்த முடிவுகளை அமெரிக்கா அங்கீகரித்தது. எனினும், இந்த முடிவுகளை அமுலுக்குக் கொண்டுவர அமெரிக்கா மறுத்தது. உண்மையில், அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருக்கும் பகுதிகளைப் பிற்போக்காளர்கள் தான் ஆளுகிறார்கள்.

பாசிஸம் ஒழிந்தது; ஆனால், அது கொரியாவில் புதிய உரு எடுத்திருக்கிறது. கொரியாவில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தக் கொரிய தேச பக்தர்களும், சோவியத் யூனியனும் செய்யும் முயற்சிகளை முறியடிக்க அமெரிக்க ஏகாதிபத்தியமும், கொரியப்பிற்போக்காளர்களும் முயலுகிறார்கள். அங்கே முற்போக்குச் சக்திகளுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கும் போர் நடக்கிறது. இந்தப் போரின் முடிவைச் சார்ந்து நிற்கிறது, கொரியாவின் எதிர்காலம்.

கொரியாவை மீண்டும் அடிமைத்தனம் என்னும் அதலபாதாளத்துக்கு இழுத்துச் செல்ல அமெரிக்கா செய்யும் சூழ்ச்சிகளைக் கொரியர்கள் முறியடிப்பார்கள். கொரியா விடுதலை பெறும்; கொரியர்கள் புதிய கொரியாவைச் சிருஷ்டிப்பார்கள்.

✯

சரியான போதை

சுப. நாராயணன்

முலைப் பால் அமுது முதல் மூதறிவு அமிர்தமாகிய சிவ ஞானபோதம் வரை எல்லாம் குடி வகைகளே. அமீபாப் பூச்சி முதல் மனிதன் ஈருக, உயிர்கள் அனைத்தும் போதை தேடி அலையும் குடிகார இனந்தான். அணுவுக்குள் அணுவாகிய 'எலக்ட்ரான்' முதல் அப்பாலுக்கும் அப்பாலாய் உள்ள பெயர் தெரியாப் பரம்பொருள் வரை எல்லாம் ஒரே போதை மயந்தான். ஜடப் பொருளும் சரி, ஜீவப் பொருளும் சரி,—படைப்பிலுள்ள எல்லாப் பொருள்களும் சரியான போதை பெறுவதற்காகவே சுற்றிச் சுழன்று, போராடி, முட்டி, மோதி, மயங்கித் தியங்கி, கிறுகிறுத்து, வெறிகொண்டு, திளைத்து, அலுத்துச் சலித்து, சரியான போதை ஏறி, இறுதியில் லயித்துச் சமாதி நிலையை அடைகின்றன.

வாழ்க்கை என்பதே ஒரு பெரிய போதை தேடு படலந்தான். நடு நடுவில், நம்மையும் அறியாமல், சில சமயம் நமக்குச் சரியான போதை நிலை கிட்டி விடுவதும் உண்டு. போதைக் கலையில் தேர்ந்தவர்கள், இந்த மின்வெட்டு நிலையைச் சாசுவதமாக ஆக்கி விடப் பெரு முயற்சி செய்து, சில வேளை முயற்சி திருவினையாக்கப் பெறுவதும் உண்டு. நம்மில் பெரும் பலர் உண்மைப் போதை—சரியான போதை—க்கும் தற்காலிகமான அற்பக் கிளர்ச்சிக்கும் வேற்றுமை தெரியாமல், ஒன்றை மற்றதாக எண்ணி, மதி மயங்கிப் போய் விடுகிறோம்.

போதை என்பது ஒரு கலை மட்டுமல்ல, கடுமையான சாஸ்திரம் அது. "பூப் போட்ட கிளாசிலே, போடுடாப்பா ரெண்டரை" என்பது சரியான போதை முயற்சியல்ல. மட்டமான, கீழ்த்தர வெறி முயற்சி. "உண்டால் கிறுக்க வைக்கும் ஊரிலுள்ள கைச்சரக்கு" என்ற கிளிக் கண்ணி அடியிலும், கேட்டால் கிறுக்க வைக்கும் இனிய குரலில் காலஞ் சென்ற கிட்டப்பா பாடிய இசையிலும் தென்படும் போதை முயற்சி சுமார் ரகம். "நெக்கு நெக்குள் உருகி உருகி, நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும், நக்கும் அழுதும் வாழ்த்தி, நானா விதத்தால் கூத்து நவிற்றி, செக்கர் போலும் திருமேனி திகழ நோக்கும்" முயற்சி அதீத விதம். "அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல் அறிவே" சரியான போதைப் போதத்தைத் தரும் வழி. அறிந்தோ, அறியாமலோ நாம் அனைவரும் இத்தகைய சரியான போதையை அடைந்து, அடைந்ததை விடாமல் பற்றி இருத்தி வைத்துக் கொள்ளவே முயல்கிறோம்.

எந்த விஷயமும் எல்லாருக்கும் ஒரே மாதிரி பொருந்தி வராது. பொதுப்படையான, சராசரிக்

கள் 'அரக்க'னுடன் இடையருமல் போராடிய களைப்புத் தீர, இதே 'அரக்க'னைப் பல்வேறு அவதாரங்களில் 'உள்ளே' தள்ளி வருகிற 'தேச பக்தர்கள்', "கள்ளுண்பார் நஞ்சுண்பார்" என்று சொல்வது எந்த வரைக்கும் உண்மை?

அடித்துத் துவைப்பதாலேற்படும் வீண் நாசத்தைப் போக்குங்கள்—இம்மாதிரி உடைகளைச் சலவை செய்யுங்கள்



பழைய முறையில் அடித்துத் துவைத்துச் சலவை செய்வதால் உடைகள் அநாவசியமாய் நைந்தும், இழிந்தும் போகின்றன — இந்தப் பாழுந் தோற்றத்தால் நீங்களும் உங்கள் நண்பர்களும் அடிக்கடிக் கவலைக்குள்ளாகிறீர்கள்.

எண்களிடப்பட்ட இந்தப் படங்களில் காட்டப்படும் முறையைப் பின்பற்றுங்கள். கீழே தரப்படும் புத்திமதிகளைக் கையாளுங்கள். உங்கள் உடைகள் யாதொரு தீங்குமின்றி உண்மையில் சுத்தமாய்ச் சலவை செய்யப்படு மென்பதைப்பற்றி நீங்கள் உறுதியாய் நம்பியிருக்கக்கூடும்.

(1) சலவை செய்யவேண்டிய உடையை தண்ணீரில் நன்ருக நனையுங்கள்.

(2) ஸன்லைட் சோப்பை நனைந்த உடையின்மீது தேயுங்கள். அழுக்குப்படிந்த இடத்தில் சோப்பைத் தாராளமாகத் தடவ வேண்டும்.

(3) சோப் தோய்ந்த உடையை மெதுவாக, ஆனல் நன்ருக, கசக்கி நுரை உடையின் இழைகளில் படும்படியாகச் செய்யவேண்டும். துணிகளை முரட்டுத்தனமாக அடித்துத் துவைக்கவோ, அழுத்திக் கசக்கவோ செய்யாதீர்கள். ஸன்லைட்டின் சக்தியுள்ள நுரை பட்டமாத்திரத்திலேயே அழுக்கு துணியைவிட்டு நகர்ந்துவிடுகிறது.

(4) உடையை அழுக்குப் படிந்துள்ள நுரையிலிருந்து அலசிச் சுத்தம் செய்து, அது இப்பொழுது எப்படி அப்பழுக்கற்று தூய்மையாக விளங்குகிறது என்பதைப் பாருங்கள்.

இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி துணிகளைச் சலவை செய்தால் அவை வெகுநாட்கள் நீடித்துவரும்.

ஸன்லைட் சோப்

துணிகளைப் பாதுகாக்கிறது

S. 76-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

பெண்களின் புத்தகம்

மங்கை

★ குடும்பப் பாதுகாப்பு, வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு, குழந்தை மனோதத்துவம், சமையல், மருத்துவம், தையல், கதை, கட்டுரை, கவிதை முதலியன.

★ இந்த விஷயங்களைக் கொண்டு வருடத்தில் பனிரெண்டு புத்தகங்கள். இதுவரை நான்கு புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன.

★ புத்தகம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று. தபால் செலவு தனி. 5-வது புத்தகம் முதல் 16-வது புத்தகம் வரை ரூபாய் பனிரெண்டு அனுப்புபவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்.

பதிப்பாசிரியர் : "குகப்ரியை"

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : சென்னை

கணக்கு வேண்டுமானால் போட்டு வைத்துக் கொள்ளலாம். இதை, வழி காட்டியாகக் கொள்ள வேண்டுமே தவிர, இதையே வாழ்க்கைச் சட்டமாகக் கொண்டு ஒழுகி வரலாகாது. ஒருவரைச் சுகமாய், நிதானமாய்க் கிளர்ச்சிபெறச் செய்யும் போதைச் சாதனம் மற்றவரைக் கிறுக்கடித்து, வெறி பிடிக்கச் செய்துவிடும்; சிலரை மயங்கித் தியங்கிப் போலிச் சமாதி நிலையான சித்தப் பிரமையில் கூடக் கொண்டு போய் வைத்துவிடும்.

சரியாய் உபயோகிக்காத எந்தப் பொருளும் பாழ்தான். சரியாய் உபயோகிக்காத எந்தச் சாதனமும் பாழாகும், அல்லது நம்மைப் பாழடித்துத் தீர்க்கும். குற்றம் நம்மீதுதான் இருக்கிறது. சாதனத்தி லல்ல.

போதை, இருவகைப்படும்: உடல் போதை, உள்ளப் போதை. இரண்டு வகைப் போதையிலும் சிறப்பாக ஐந்து படிகள் உண்டு: உடல் போதைச் சாதனங்கள் ஐந்து வகைப் படும்: உயிர்ப்பு (உணவு), கிளர்ச்சி (வெற்றிலை பாக்கு, சிகரெட் முதலியன), மயக்கம் (கள், சாராயம்), தியக்கம் (கஞ்சா, அபின்), லயிப்பு (வீரம், பூரம் முதலிய பாஷாணங்கள்). உள்ளப் போதைச் சாதனங்கள் ஐந்து வகைப்படும்: நாக்கு (சுவை), மூக்கு (மணம்), கண் (காட்சி),தோல்(உணர்ச்சி), காது (ஒலி). உடல் போதைச் சாதனங்களின் லட்சியம் உயிரின் இருப்பிடமான உடலை இயக்குவித்து, அதை வளர்ப்பது. உள்ளப் போதைச் சாதனங்களின் லட்சியம் ஆத்மாவின் இருப்பிடமான உள்ளத்தை இயக்குவித்து, அதை வளர்ப்பது. "உடலை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்று திருமூலர் சொல்லியதில், "உள்ளம் வளர்த்தேன், ஆத்மாவை வளர்த்தேனே" என்ற குறிப்பும் தொக்கி நிற்கவே செய்கிறது. உயிரற்ற உடலைப் பிணம் என்பதுபோல், ஆத்ம வளர்ச்சி பெறாத காட்டு மிராண்டி உள்ளத்தையும் பிணத்தின் எலும்புருவம் என்றே சொல்ல வேண்டும்.

எந்தப் பொருளும், தன் அளவில், ஒரு போதை வஸ்தாக ஆகிவிடாது. பொருட் சேர்க்கையிலும், தன்மையிலும், அளவிலும், உபயோக முறையிலும் உண்டாகிற மாறுதல் காரணமாகவே ஒரு வஸ்து போதை வஸ்தாகவோ, ஊட்டம் தந்து உயிர் வளர்க்கும் போஷாக்குச் சத்தாகவோ ஆகிறது. சீமையில் பீர், ஒயின், பிராந்தி, விஸ்கி, ஜின் முதலிய வஸ்துக்களைக் கௌரவமான குடும்பங்களில்—ஆண், பெண், குழந்தைகள் அடங்கலும்—அளவாய், முறையாய்க் குடித்து, நலமுற்று வருகிறார்கள். நம் நாட்டில், பாட்டாளி மக்கள் சகலரும்—ஆண், பெண், குழந்தைகள் அடங்கலும்—தென்னங்கள், பனங்கள் முதலிய போஷாக்குக் குடி வகைகளை அளவாய், முறையாய்க் குடித்து, நலமுற்று வருகிறார்கள்.

உடல் உபாதையோ, மன உபாதையோ தீரவும், தளர்வுற்றுத் தயங்கி நடைபோடும் உடலுறுப்புக்களையும், மனப் பண்புகளையும் தட்டி முடுக்கி விட்டு, சுலப சாத்தியமா யில்லாத காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும், சராசரி மக்கள்—ஆண், பெண், குழந்தைகள் அடங்கலுந்தான்—நம்நாட்டிலும், பிற நாடுகளிலும், ஜாதி, மத, இன வித்தியாச மின்றிக் கள், சாராயம், கஞ்சா,

அபின், புகையிலை, வெற்றிலை முதலிய போதை வஸ்துக்களை அளவாய், முறையாய் உபயோகித்துப் பயன் அடைந்து வருகிறார்கள். ஆனல், இது சிறப்பாக உடல் போதையைப் பொறுத்த மட்டுந்தான். உள்ளப் போதை இன்னும் நுணுக்கமானது. எளிதில் நிர்ணயிக்கக் கூடாதது. எளிதில் கை வரக் கூடாதது. உடல் போதையை விட மிகமிக முக்கியமானது. மகா பெரியது. அதனல், இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் தமக்கு உகந்த சரியான போதை அளவு எது, அதை அடையும் சாதனம் எது, அதை அடைந்த பிறகு நிலை பெறச் செய்வது எப்படி என்ற விஷயங்கள் மகா சிக்கலானவையாய் விடுகின்றன. அதனல்தான் இத்தனை குழப்பமும், கொந்தளிப்பும், ஆசாபாசமும், ஆசாபங்கமும், அகங்காரமும், அவமானமும் எதிர்த்து மல்லிட, மக்கள் மண்டைகள் உடைபடுகின்றன.

இரண்டு நாள் அன்னகாரமின்றிக் கிடந்தால், போதைபோல் மயக்கம் வருகிறது. பிறகு, திருப்தியாய்ச் சோறு உண்டவுடன், ஒருவிதக் கிளர்ச்சி காண்கிறது. முன்னது மரண மயக்கம். பின்னது உயிர்க் கிளர்ச்சி. இரண்டு மூன்று நாள் தொடர்ந்து (இடையருமல்) தூங்காமல் இருந்து, ஏதாவது முக்கியமான காரியம் பார்த்திருக்கிறீர்களா? அப்போது உங்களுக்கு என்ன மாதிரி வருகிறது, கவனித்திருக்கிறீர்களா? அரைக் கிளாஸ் பிராந்தியை, அப்படியே, தண்ணீர் கலவாமல், சாப்பிட்டால் என்னமா யிருக்குமோ, அதே மாதிரிப் போதை வெறி காணும். அந்தச் சமயத்தில், கொஞ்சம் பிராந்தி சாப்பிட்டுவிட்டுக் களைப்புத் தீரும்வரை தூங்கி எழுந்திருந்தால், உடம்பு சுடக்கெடுத்துவிட்ட மாதிரி, கலகலப்பாய்த் திளைத்துக் காணும்.

நீரை மட்டும் பருகிக் கொண்டே உயிர்வாழ முடியவே முடியும். வாழ்வை நன்கு சுவைத்து, ரசித்து வாழ்வதற்கு வெறும் உயிரியக்கம் மட்டும் போதாது. உயிர்த் துடிப்பு வேண்டும். ரத்தத்தில், துள்ளி ஓடும் தெம்பு செழித்துக் கொழிக்க வேண்டும். வெறியாட்டம் உதவாது. லயிப்புத் தரும் சமாதி நிலை சராசரி மனிதனுக்குத் தேவை யில்லை. சீமைச் சாராயம் நமக்கு வேண்டாம். நாட்டுக் கள் போதும். நாட்டுக் கஞ்சா நமக்கு வேண்டாம். வீட்டுச் சோறும், நெய்யும் போதும். வட நாட்டுப் போலிப் பாட்டு நமக்கு வேண்டாம். தமிழ் நாட்டு இன்னிசை போதும். கர்நாடக சங்கீதம் என்கிறதில் சிலர் கையாளும் "நாதப் பிரம்ம"ச் சிலம்ப லயிப்புக்கள் நமக்கு வேண்டாம்.

உடல் வளரவும், உயிர் நீடிக்கவும், உள்ளம் வளரவும், ஆத்மா விரிந்து பெருகிப் பூரணத்துவம் பெறவும் நமக்குச் சரியான போதை தரக் கூடிய சாதனங்கள் இன்னும் முட்டின்றிக் கிடைக்க வில்லை. ஆத்ம லட்சியம் கைவரப் பெற்று, சுவாமி விவேகானந்தர் கூறியபடி, அண்ட சராசரத்திலும் வட்டமிட்டுச் சுழன்று கூத்தாடும் கோளங்கள் எழுப்பும் இன்னிசையின் சுருதியில் லயித்துக் களிக்கவேண்டிய நாம், பட்டினிக் கிரக்கத்தில் மயங்கி, லயித்துச் சாகக்கூடாது.

விடுதலை பெற்ற தமிழ் நாட்டில் சரியான போதை பெறுவது எனக்கும் உங்களுக்கும் சாத்தியமாகவே செய்யும்.

பரீட்சை

பே. குருசாமி

1. 'ராஜ பக்தி என்ற பித்தமும் சமய வெறி என்ற போதையும், எதன் விளைவுகள்? —பக்கம். 31

2. ஒரு முறை படித்தால் போதாது; இரு முறை படித்தாலும் போதாது. பலமுறை படித்து எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட கட்டுரை ஒன்று இதில் உள்ளது. படித்தீர்களா? எத்தனை தடவை?—ப. 29-36

3. 'இந்த மூட்டைகளுக்கு மட்டும் லாரி கிடைக்கவில்லை.—'ஏன்? 'மூட்டைகள்' - கட்டுரையாளர் வியாக்கியானம் என்ன? —ப. 47, 48

4. அறநூல்களுக்கு உண்மையான பொருள் எப்போது பிறக்கும்? —ப. 49

5. சொற்களின் தன்மையைக் கண்டு அஞ்சவேண்டாம். பொருளின் தகுதியையும் திறத்தையும் பார்த்துத் தான் வெளியிட்டிருக்கிறோம். அரவிந்தரின் கட்டுரையைப் படித்தீர்களா? —ப. 21

6. 'இந்தத் தலைகீழ் முறை ஒழிய வேண்டும்'—எதைக் குறிப்பிடுகிறார்? —ப. 22

7. 'உங்களால் தமிழகம் ஒழிய வேண்டும் அதாவது தமிழ் கற்ற நாங்கள்'—என்று சீறும் நண்பர் எழுதிய கடிதம் பிழை யில்லாமல் இருக்கிறதல்லவா? —ப. 24

8. aivar kUttaththil nIngaL eppOdhu sErappOgiRIrgaL?-ப.25

9. 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை'—எதற்காக இந்தப் பழமொழி எடுத்தாளப் பெற்றது? பேசுகிறபடியே எழுதிய கட்டுரையை வாய்விட்டுப் படித்தால் என்ன ஆகும், தெரியுமா?... காது பத்திரம்! —ப. 27

பள்ளிக்கூட மல்ல; நன்றாகப் படித்தீர்களா என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

10. விஞ்ஞானத்துக்கும் சோதிடத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன? —ப. 58

11. தேசியத்தில் மதத்தை நுழைத்ததால் ஏற்பட்ட விபரீத நிலைமைதான் இந்திய அரசியல் கொந்தளிப்புக்கும் குழப்பத்துக்கும் காரணம். இத்தகைய கொந்தளிப்பையும் குழப்பத்தையும் நீக்கி உண்மைத் தேசிய வீரனைத் தமிழ் நாட்டில் ஒருவன் இருந்தான். அவன் யார் தெரியுமா? —ப. 59

12. முழுப் பொய். —ப. 60

13. சுதந்தரத் திட்டம், திட்டமாய்ச் சுதந்தரப் பாதையிலாவது நம்மை இட்டுச் செல்லுமா? அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் பாதைதான் என்று சொல்லுகிறார்களே, சரிதானா? —ப. 13-17

14. 'பிரிட்டிஷார்.....கடமையைச் செய்கிறார்கள்' என்று காந்திஜி சொல்லுகிறார். ஞாயிற்றைப் போல உதித்த கடமை உணர்ச்சி எது? —ப. 19

15. 'ஓ! இவன்தானா?......'என்று எல்லோரும் அலட்சியப்படுத்தும் 'பிரகிருதி' யார்? —ப. 17

16. தமிழ்ப் புலவர்களில் இரட்டையர் புகழ் பெற்றவர்கள். ஆட்சிமுறையில் பெயர்பெற்ற 'இரட்டையர்' யார்? ஒற்றுமை என்ன? —ப. 5

17. 'தீவிரமும் சாத்துவிகமும் ஒத்துப் போகா, போக முடியா' என்ற பொதுவான நம்பிக்கையைப் பொய்யாக்கிய இரட்டையர் யார்? —ப. 3-5

18. மயக்கம், மோகம், வெறியாட்டம், கிளர்ச்சி, லயிப்பு, போதை—இவை யாவும் ஒரே தன்மை உடையனவா? கட்டுரையைத் துருவிப் படிக்காமலே 'கதை பண்ண' வேண்டாம். —ப. 76-78

புத்தக உலகம்

கன்யா குமாரி (கதைகள்): ஆசிரியர்: த. நா. குமாரசாமி. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. கிரௌன் 1 × 8.240 பக்கம். மலிவுப் பதிப்பு விலை: ரூ. 2-8-0, உயர் பதிப்பு விலை ரூ. 3-0-0.

ஆசிரியர் புதியவரல்ல; இப் புத்தகமும் புதியதல்ல. பழைய புத்தகத்தின் புதிய பதிப்பு. முன் பதிப்பில் இல்லாத நான்கு கதைகள் சேர்க்கப் பெற்றுள்ளன. "நமிழ் வேந்தர்," "தீபாவளி தந்தி," "கொக்கிற்கு" (கொக்கிறகு) போன்ற அச்சுப் பிழைகளை மறந்து படிக்கலாம்; சுவையான கதைகள் தான்; கருத்திலும் நடையிலும் பல ரகம். —குரு

வரப்பெற்றோம்

உலகம் சுற்றும் தமிழன் (மூன்றாம் பதிப்பு): ஆசிரியர்: ஏ. கே. செட்டியார். குமரி மலர் வெளியீடு. விற்பனை உரிமையாளர்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 4.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்

2. **நாகம்மாள்** (இரண்டாம் பதிப்பு): ஆசிரியர்: ஆர். ஷண்முகசுந்தரம். புதுமலர் நிலைய வெளியீடு. விற்பனை உரிமை: காசி நாத் அண் கோ, பெரிய கடை வீதி, கோயமுத்தூர். விலை ரூ. 2.

3. Siddhanta Trayam 4. **ஞான வுரை:** ஆசிரியர்: ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. விலை 3 அணா. 5. **பஞ்சாவரண ஸ்தோத்திரங்கள்** 6. **திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்** 7. 'ஸ்ரீ கண்டன்'—சிறு நாடகம்—தருமபுர ஆதீன வெளியீடுகள்.

8. **தேவியின் கவிக் கனிகள்:** ஸ்டார் பிரசுரம், திருச்சி. விலை 3 அணா.

9. **சினிமா:** (மாதம் ஒரு புத்தகம்): பதிப்பாசிரியர்: ஏ. கே. ஜயராமன். வெளியிடுவோர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை 8 அணா.

10. **கொள்ளை முறை:** ஜே. ஸி. குமரப்பா எழுதியது. மொழி பெயர்ப்பு: மீ. விநாயகம். கதம்பம் வெளியீடு: 97, ராமசாமி தெரு, ஜி. டி. சென்னை. விலை 12 அணா.

11. **புதுமைப் பாடல்கள்:** இயற்றயவர்: சொ. சிதம்பரம். வெளியிடுவோர்: சுதந்திரம் பிரசுராலயம், 7, வெள்ளாள வீதி, புதுச்சேரி. விலை 4 அணா.

12. **போர் வெறியர்கள்:** மார்ஷல் ஜே. வி. ஸ்டாலின் எழுதியது. மொழிபெயர்ப்பு: ஆர். எச். நாதன். விலை 2 அணா.

13. **கூப்லந்து திட்டம்:** எழுதியவர்: டாக்டர் ஜி. அதிகாரி. ஜனசக்தி பிரசுராலயம். ஜி. டி. சென்னை.

14. **தமிழ் முரசு:** (முதற் புத்தகம்): பதிப்பாசிரியர்: ம. பொ. சிவஞான கிராமணிர்.யா கிடைக்குமிடம்: 233, லிங்கி செட்டி தெரு, சென்னை 1.

15. **தமிழகம்:** முதல் வெளியீடு: பதிப்பாசிரியர்: எஸ். எம். சஞ்சீவி ராஜு. தெப்பக்குளம், திருச்சி, விலை 4 அணா.

16. **பாரத சக்தி:** ஆசிரியர்: ஏ. பால சுப்பிரமணியன், புதுச்சேரி. விலை 3 அணா.

17. **மதி** (நான்காம் புத்தகம்): பதிப்பாசிரியர்: பே. ந. குணச்சந்திரன், 287, தம்பு செட்டித் தெரு, சென்னை 1. விலை 4 அணா.

சைபால்
CIBOL
சைபால்
for
RING
WORM
SOUTH INDIAN M
முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப் பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து
தயாரிப்பவர்கள் :
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

குழந்தைகளுக்கு முக்கியமானது
பேபி கிரைப்
குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது
BABY GRIPE
குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்
தயாரிப்பவர்கள் :
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

கோடிக் கணக்கான உடல் நலமற்ற மக்களுக்கு புத்துயிரளித்து நரம்புகளுக்கு வலிவையூட்டி திடகாத்திரர்களாக்கி வரும் டானிக் ஜீவாம்ருதம் இன்னும் இரண்டு வருடங்களில் பொன் விழா கொண்டாடும்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்
மதராஸ்

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னோ பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,
Manufacturing Perfumers
MADURA

நீங்கள் படிக்க வேண்டிய உயர்ந்த புத்தகங்கள்

		ரூ.	அ.
என் சரிதம்	காந்திஜி	3	8
இந்திய சுயராஜ்யம்	,,	1	0
சத்திய சோதனை 1 & 2	,,	7	0
நமது மொழிப் பிரசினை	,,	2	8
கதைகள் 1	டால்ஸ்டாய்	2	4
,, 2	,,	2	4
இந்தியா அடிமையானது ஏன்?	,,	0	4
உலக நிலை	ராஜாஜி	2	0
அரசியல் விமோசனம்	,,	0	8
கட்டுரை	,,	4	8
கதைகள்	,,	4	8
அறநூல்	,,	5	0
வியாசர் விருந்து	,,	10	0
போட்டி ஒழிக	,,	0	12
திண்ணை ரசாயனம்	,,	0	12
கிராம இயக்கம்	ஜே. ஸி. குமரப்பா	3	0
ஏசுநாதர் போதனை	,,	0	12
கல்வி	தி. சு. அவினாசிலிங்கம்	0	12
திருக்கேதார யாத்திரை	,,	1	4
இந்தியப் பொருளாதார நூல்		2	0
இந்தியப் பிரசங்கங்கள்	,,	4	0
அரசியல்	வெ. சாமிநாத சர்மா	6	0
புதிய சீனா	,,	6	8
சோவியத் ருஷ்யா	,,	4	8
சமுதாய ஒப்பந்தம்	,,	2	8
காந்தியும் ஜவஹரும்	,,	0	8
என் கதை	நாமக்கல் கவிஞர்	6	8
மலைக் கள்ளன்	,,	3	8
தமிழன் இதயம்	,,	3	8
சங்கொலி	,,	3	0
	கொத்தமங்கலம் சுப்பு		
மஞ்சி விரட்டு		3	8
வீட்டு வைத்தியம்	டாக்டர் ராஜன்	7	8
கதைக் கடல் 2-வது		1	0
கதைக் கடல் 3-வது		1	0

		ரூ.	அ.
பவானி	'லக்ஷ்மி'	2	8
சஞ்சீவி	'குகப்பிரியை'	3	4
ஜெய காதல் கீதம்	'துர்கனேவ்'	0	8
வானவில் (ருஷ்ய நாவல்)	,,	5	0
சுந்தரி	வ. ரா.	5	0
மகாகவி பாரதியார்	,,	3	0
கோதைத் தீவு	,,	2	0
மலரும் மாலையும்	தேசிகவிநாயகம்	6	0
ஆசிய ஜோதி	,,	2	0
நாஞ்சில் நாடு	,,	1	0
காற்றிலே மிதந்த கவிதை	மு. அருணாசலம்	1	0
நிழலருமை வெய்யிலிலே	,,	1	4
திரு ஆனைக்கா உலா	,,	2	8
அம்பிகாபதிக் கோவை	,,	5	0
திருமலை முருகன் பள்ளு	,,	2	0
காய்கறித் தோட்டம்		(அச்சில்)	
உணவுப் பஞ்சம்		(அச்சில்)	
ஜப்பான்	ஏ. கே. செட்டியார்	1	0
உலகம் சுற்றும் தமிழன்	,,	4	0
நாட்டியக்காரி	தி. நா. சு.	1	0
பண்டை தமிழ் எழுத்துக்கள்		1	8
வாடா மலர்	,,	1	4
இந்தோனேஷியா	கே. அருணாசலம்	0	12
மசானிக்கு பதில்	தேசாய்	1	0
	பொ. திருகூடசுந்தரம்		
விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை	,,	2	4
குழந்தைகள் கேள்வி	,,	2	0
அருள் மொழிகள்	,,	1	12
	அப்துறஹீம்		
அரேபியாவின் அதிபதி		0	12
மகுடபதி	கல்கி	4	0
பார்த்திபன் கனவு	,,	6	8

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை	வடக்கு வெளி வீதி	வெரைட்டி ஹால் ரோடு	ஹைரோடு
சென்னை	மதுரை	கோயமுத்தூர்	திருநெல்வேலி

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள

லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.

லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 G

லிப்டன் தேனீர் அருந்துகையில் ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்

P.A.R.

பி. எ. ராஜூ செட்டியார் & பிரதர்

வைரம், நகை வியாபாரம், கோயமுத்தூர்.

வீட்டு சுகம்

ஆபீசில் கடுமையாக வேலை செய்து உடல் அலுத்து மனச் சோர்வு ஏற்படும் போது வீட்டுக்குச் சென்று ஒரு கப் டீ அருந்துவதற்கு சமமானது வேறெதுவுமில்லை. சோர்வை அகற்றி மனதுக்கு புது உற்சாகமளித்து, ஒரு மணி நேரத்தில் உங்களைப் பழைய மனிதனுக்குவது டீ தான். வேறு எந்த பானத்தாலும் இதைச் செய்ய முடியாது. பணக்காரர் ஏழையென்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் சுகமளிக்கும் இந்த டீ மலிவானது. சரியான முறையில் தயாரிக்கப்பட்டால், நன்மையளிப்பதில் இணையற்றது.

நல்ல டீ தயாரிக்கும் முறை

1. கெட்டிலில் டீ காய்ச்சக்கூடாது. டீ பாத்திரத்தை உபயோகியுங்கள்.
2. உலர்ந்த டீயை பாத்திரத்தில் போடும்போது பாத்திரம் ஈரமில்லாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நறுமணமுள்ள கஷாயம் கிடைக்கும்.
3. கப்புக்கு ஒரு டீ ஸ்பூன் விகிதமும் பாத்திரத்துக்காக ஒரு டீ ஸ்பூனும் டீ போடவும்.
4. புதிதாக காய்ச்சிய நீரையே உபயோகிக்கவும்; ஒரு தரம் காய்ச்சிய நீரையோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காய்ச்சப்பட்ட நீரையோ ஒருபோதும் உபயோகிக்காதீர்கள். தள தள வென்று குமிழியிட்டு கொதிக்கும் நீர் தான் சரியாக காய்ச்சின நீர்.
5. கஷாயம் இறங்க குறைந்தது 5 நிமிஷ கால நேரம் வேண்டும்.
6. பாத்திரத்தில் இருக்கையிலேயே பால் சர்க்கரை சேர்க்காதீர்கள். கப்புகளில் விட்ட பிறகு சேர்க்கவும்.

எந்த நேரமும்

டீ

டீ அருந்தும் நேரம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

நிர்வாக ஆசிரியர் : வை. கோவிந்தன் ஆசிரியர் : சுப. நாராயணன்

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press), 115 - E, Mowbrays Road, Royapettah, Madras